
www.padippakam.com

# மார்க்சிஸ்ட்

மாத இதழ்

ஜூன் - 2001 விலை ரூ. 5.00



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# மார்க்சிஸ்ட்

தத்துவ மாத இதழ்

தொகுப்பு: I இதழ்: 10 ஜூன் 2001

## ஆசிரியர் குழு

தே.லட்சுமணன் (ஆசிரியர்)
ஜி.ராமகிருஷ்ணன்
வி.மீனாட்சிசுந்தரம்
மைதிலி சிவராமன்
என்.குணசேகரன், பாலு

விமர்சனங்கள், கருத்துக்கள், கடிதங்கள்
எழுதவேண்டிய முகவரி:

ஆசிரியர், மார்க்சிஸ்ட் மாத இதழ்,
11, வைத்தியராம் தெரு, தி.நகர்,
சென்னை _ 600 017

Registered with the Registrar of Newspaper for India under Registration No: TNTAM/2000/2593. வெளியிடுபவர்: இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்குழு சார்பில் என்.வரதராஜன், அச்சிடுபவர் : வைகை பிரிண்டர்ஸ் & பப்ளிசர்ஸ், மதுரை - 625 018

படிப்பகம்

www.padippakam.com


1. சுயமரியாதை சமதர்மம்
- தே.லட்சுமணன் 3

2. பொழுதெல்லாம் எம் செல்வம் கொள்ளை போவதோ ?
- ஆர்.சந்திரா 17

3. உயிரின் உதயம்
- எஸ்.ஏ.பெருமாள் 31

4. அன்பும் அறனும் சுரக்க மதம் தேவையா ?
-வே.மீனாட்சி சுந்தரம் 50


## சந்தா விபரம்:

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | ரூ. | 5.00 |
| 6மாத சந்தா | ரூ. | 30.00 |
| ஆண்டு சந்தா | ரூ. | 55.00 |

5 பிரதிகளுக்குமேல் ஏஜென்சி வழங்கப்படும்.

25 சத கமிசன் உண்டு.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:


**மார்க்சிஸ்ட் மாத இதழ்**

6/16, புறவழிச்சாலை, மதுரை — 625 018

Ph: 669769 Fax: 0452 - 667070

E-Mail : theekati@md3.vsnl.net.in




படிப்பகம்

www.padippakam.com



# சுயமரியாதை சமுதாயம்

தே.லட்சுமணன்

தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி வெகுவாகத் தோற்றுப் போனது; அதன் பல தலைவர்களும் தோற்றுப் போனார்கள்; காங்கிரஸ் பெரிய வெற்றியைப் பெற்றது.

பெரியார் தேர்தல் முடிவுக்குப் பிறகு "பகுத்தறிவு" பத்திரிகையில்தான் ஜஸ்டிஸ் கட்சியை ஆதரித்ததற்கான விளக்கங்களைத் தந்தார்.

> "காங்கிரஸ் வாயிலாக சமூக சீர்திருத்தம் செய்ய முடியாது. அதை சமதர்ம நோக்கத்திற்கும் திருப்ப முடியாது. நீதிக் கட்சியின் மூலமே சமூக சீர்திருத்தம் செய்ய முடியும். அதை சமதர்மக் கட்சியாக மாற்றிடவும் முடியும்"

என்று எழுதினார். ஐயா, காங்கிரஸ் பற்றி சொன்னது முழுக்க சரி, நீதிக்கட்சி பற்றி சொன்னது சரியா? எனக் கேட்கலாம்.

இது அவரின் கணிப்பு! இதற்கிடையில் இன்னொரு நிகழ்ச்சியும் நடந்துவிட்டது. அதாவது பகவத் சிங் "நான் ஏன் நாத்திகனானேன்" என்று எழுதிய நூலை ஜீவானந்தம் தமிழாக்கம் செய்ய, அது ஈ.வே.கிருஷ்ணசாமி நடத்திய உண்மை விளக்கம் என்ற அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியாகியது! ஈ.வே.கிருஷ்ணசாமி,



படிப்பகம்

பெரியாரின் மூத்த சகோதரர். இவரையும், ஜீவானந்தத்தையும் பிரிட்டிஷ் அரசு www.padippakam.com கைது செய்தது. அதோடு குடியரசு வெளியிட்ட சில பிரசுரங்களையும் பறிமுதல் செய்தது. அரசு திடீரென இப்படி அடக்குமுறையைத் துவக்குவானேன்?

பெரியார் பொதுவுடைமைக் கருத்துக்களையும் பரப்பி வந்தார். அதற்காக சமதர்மக் கட்சி ஒன்றையும் உருவாக்கினார்! இது தமிழகத்தில் வேகமாக வளரத் தொடங்கிவிட்டது! ஆங்கிலேய அரசுக்கு இதன் ஆபத்து புரிந்து விட்டது. இதை மேலும் வளர விடக்கூடாது என முடிவுகட்டிவிட்டது! இதற் கிடையில் சமதர்ம இயக்கத்தில் கருத்து வேறுபாடுகள் கிளம்பிவிட்டதையும் அரசு கவனித்தது. இந்த கருத்து வேறுபாட்டை மேலும் அதிகமாக்கவும், கம்யூ னிசக் கொள்கைகளைப் பரப்பினால் அதற்கு எப்படிப்பட்ட தாக்குதல் அரசிட மிருந்து வரும் என்பதைக் காட்டவுமே ஆங்கிலேய அரசு இப்படி அடுத் தடுத்து தாக்குதல்களைத் தொடுத்தது.

ஜஸ்டிஸ் கட்சியினரும், பெரியார் பொதுவுடைமைக் கொள்கைகளைக் கைவிடும்படி யோசனைகள் கூறினர். உதாரணமாக ஜஸ்டிஸ் கட்சியின் முக்கிய பிரமுகர்கள், பெரியாரின் நண்பர்கள் - அரசாங்க உயர் பதவிகளில் இருந்த கே.வி.ரெட்டி நாயுடு, ஏ.டி.பன்னீர் செல்வம் ஆகிய இருவரும், சுய மரியாதை இயக்கம் கம்யூனிச சித்தாந்தங்களைப் பரப்பும் இயக்கமாக செயல் படுவதால் இதை அரசு விரும்பவில்லை. இந்த முயற்சியை கைவிடுவது நல்லது என ஆலோசனை வழங்கியுள்ளனர். இது ஒருபுறமிருக்க, இப்படிப் பட்ட ஆலோசனைகளின் விளைவாக ஈ.வே.கிருஷ்ணசாமி மற்றும் ப.ஜீவானந்தம் அரசுக்கு எதிராக ராஜ விசுவாசத்தை சீர்குலைக்கும் நோக்கம் தங்களுக்கு ஏதும் இல்லை என்று கூறி மன்னிப்பு கோரி கடிதம் எழுதும் கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. ஏன் இப்படி இவர்கள் மன்னிப்புக் கடிதம் எழுதி னார்கள்? அணிகளுக்கு மத்தியில் ஒரே குழப்பம்; கடுமையான கருத்து வேறு பர்டுகள்; பரஸ்பர குற்றச்சாட்டுகள் எழுந்தன. பெரியார் தந்த தன்னிலை விளக்கம் குழப்பங்களை விளக்கப் பயன்பட்டது.

இதற்கிடையில் குடியரசு இதழ் மீண்டும் துவக்கப்பட்டது. இந்த இதழில் (31.3.1935) மன்னிப்புக் கோரப்பட்டதின் விஷயங்கள் பற்றி ஒரு தலையங்கம் எழுதப்பட்டது. அந்தத் தலையங்கம் பெரியார் கையெழுத்திட்டே வெளி யானது.

அந்தத் தலையங்கத்தில், "ஈ.வே.கிருஷ்ணசாமியும், ஜீவானந்தமும் மன்னிப்புக் கேட்டு கடிதம் எழுதியது, அவர்களின் பொறுப்பு அல்ல என்றும்,



படிப்பகம்

அதற்கு நான்தான் முழு பொறுப்பு என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்" என்று எழுதி இருந்தார்!

www.padippakam.com

பெரியாரின் இந்த பெருந்தன்மை நம்மை புல்லரிக்க வைக்கிறது. அவர் எடுத்த நிலைப்பாடு சரியா, தவறா என்பது ஒருபுறமிருக்க, இப்படி வெளிப் படையாக எழுத்து மூலமாக பத்திரிகையில் எழுதி, தான் பொறுப்பேற்றுக் கொண்டதும், அதன் மூலம் மன்னிப்புக் கோரிய அந்த இரு நபர்களை அந்த இழிவிலிருந்து விடுவித்ததும் போற்றற்குரியது!

மேலும் அந்தத் தலையங்கத்தில் பல தகவல்களைத் தருகிறார்.

காவல்துறையின் உளவுப் பிரிவு சுயமரியாதை இயக்கத்தின் நடவடிக்கை களைக் கூர்ந்து கவனித்து வந்ததாகவும், தமிழகத்தில் 175க்கும் மேற்பட்ட சுய மரியாதை இயக்கக் கிளைகள் செயல்பட்டு வருவதை அது தெரிந்து கொண்டது என்றும் எழுதுகிறார்.

சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி அரசுக்குத் தவறான எண்ணம் உருவாகி விட்டது. ஆகவே அதை ஒடுக்கிவிட அரசு முடிவு எடுத்து விட்டது. எனவே காவல்துறை சுயமரியாதை கிளைகளுக்குப் பல தொல்லைகளைக் கொடுத்து வந்தது!

இந்த இயக்கத்தில் சிலர் தீவிரமாக செயல்பட்டு வந்ததையும், இதில் இருந்தால் தங்களுக்கு ஆபத்து என பயந்து சில பெரிய மனிதர்கள் வெளி யேறி விட்டதையும், மேலும் சிலர் செயலற்று போனதையும் உளவுத்துறை தகவல் எடுத்து அரசுக்கு அனுப்பிவிட்டது.

தான் சோவியத் யூனியன் சென்று திரும்பிய பின்னர் தனக்கும், தன் சகாக் களுக்கும் உளவுத் துறையினரால் பல தொல்லைகள் கொடுக்கப்பட்டன என்றும் தலையங்கத்தில் எழுதுகிறார்.

மேலும் சில அதிர்ச்சியான தகவல்களை அந்தத் தலையங்கத்தில் தருகிறார்.

> 'அரசின் கடுமையான அடக்குமுறைக்கு ஆட்பட வேண்டிய நிலை வருமே என பயத்துக்கு இடம் தந்ததால், இயக்கப் பிர முகர்கள் சிலரின் ஆலோசனைகளை ஏற்றுக் கொண்டு, இது பற்றி அரசு அதிகாரிகளை நேரில் சந்தித்துப் பேச வேண்டிய அவசியத்துக்கு உள்ளானேன்' என்கிறார்.



படிப்பகம்

இந்தப் பேச்சுவார்த்தையில், நான் ரஷ்யா போய் வந்ததில், இதில் ரஷ்யாவுக்கும், எனக்கும் இடையில் ஏதும் பயணப் பணம் விவகாரம் சம்பந்தப்படவில்லை, பிரச்சார சம்பந்தம் ஏதும் ஏற்படவில்லை, சுயமரியாதை இயக்கம் சட்ட மறுப்பு இயக்கமல்ல, அரசோடு ஒத்துழையாமை இயக்கமல்ல; சட்டத்தையும், சமாதானத்தையும் மதியாத இயக்கமல்ல என்றும் அதிகாரிகளிடம் விளக்க வேண்டியிருந்தது என்கிறார்.

www.padippakam.com

மேலும் தொடர்கிறார்!

ஆரம்பகாலம் முதல் நாளது வரை, பல சமயங்களில் வெளியிடப்படும் பல மாநாடுகளில் தீர்மானிக்கப்பட்டும் இருக்கும் வேலைத் திட்டம், தீர்மானங்கள் முதலாகியவைகள் எல்லாம் சட்ட வரம்பிற்கு உட்பட்டு நடத்தும் காரியங்களாகவேதான் இருந்தன என்று விளக்கிக் காட்டியதாகச் சொல்லுகிறார்.

"மற்றும் சட்டவிரோதமாக, அல்லது "ராஜதுவேஷம் உண்டுபண்ணுவதற்காக பதிப்பிக்கப்பட்டதென்றோ, பேசப்பட்டதென்றோ, எதாவது காட்டப்படுமானால் அதற்கு பதில் சொல்ல கடமைப்பட்டிருப்பதாக ஒப்புக் கொண்டேன்" என்கிறார்.

"இந்த நிலையில் பிரஸ்தாப வழக்கு சம்பந்தப்பட்ட விஷயங்கள் எனக்குக் காட்டப்பட்டன".

"அதைக் கண்ட பிறகு அது ராஜதுவேஷமான விஷயம் என்று சர்க்கார் முடிவு செய்துவிட்டார்கள் என்றும், அது எப்படியும் ராஜத்துவேஷமான விஷயம் என்றும் தீர்ப்புப் பெறும் என்றும், விவகாரம் பேசுவதில் பயன் ஏற்படாது என்றும் உணர்ந்தேன். உணர்ந்ததும் உடனே அதை மன்னித்துவிடுங்கள் என்று சொல்லிவிட்டேன் - அதிகாரிகளும் அந்தப்படியே ஒப்புக் கொண்டார்கள்"

"ஆகவே இந்தச் சம்பவமானது இயக்க சம்பந்தமாய் சர்க்காருக்குள்ள தப்பபிப்பிராயத்தை நீக்க வேண்டும் என்பதற்காகவே ஏற்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்ளவே இதை எழுதுகிறேன்".

"நம் இயக்கம் (சுயமரியாதை இயக்கம்) சமூகத்துறையில் உள்ள குறைகளை நிவர்த்திப்பதற்கென்றே ஆரம்பிக்கப்பட்டு நடை



படிப்பகம்

www.padippakam.com

பெற்று வந்ததும், சர்க்கார் அதிகாரிகள் முதல் அனேக செல்வான்களும் இயக்கத்தில் கலந்து வேலை செய்து வந்ததும் எவரும் அறியாததல்ல, ஆனால் சிறிது காலம் சென்ற பின் மக்களுக்குள்ள சமுதாயக் கொடுமைகள் தீர வேண்டியது எவ்வளவு அவசியமோ, அதுபோலவே மக்களுக்குள்ள பொருளாதாரக் கொடுமைகளும் தீர வேண்டியது மிகவும் அவசியமென்றும் கருதியதால், பொருளாதார சம்பந்தமாக நாம் சிறிது பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தோம், என்றாலும் அதன்பிறகே அரசாங்கத்தார் தப்பபிப்பிராயம் கொண்டு இயக்கத்தை ஒடுக்க, அடக்குமுறைப் பிரயோகம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள் என்று உணர்கிறேன்".

"இதையேதான் அதிகாரிகள் முன்பும் தெரிவித்துக் கொண்டேன். ஆனால் ஒரு அளவுக்கு சர்க்காருடன் ராசி ஏற்படுத்திக் கொள்ளலாம் என்கிற ஆசையின் மீதே பொருளாதார விஷயத்தில் சமாதானக் கொள்கையை பிரச்சாரம் செய்வதில் சர்க்காருக்கு ஆட்சேபணை இல்லை என்றும், ஜாதி மத சம்பந்தமான விஷயங்களில் வேறு ஜாதி மதக்காரர்கள் மனம் புண்படும்படியோ, அவமானம் ஏற்படும்படியோ என்று இல்லாமல் ஜாதிமத கண்டனங்கள் செய்து கொள்ளலாம் என்று முடிவுக்கு வந்தோம்".

"சர்க்காரோடு இந்த மாதிரியான ஒரு சமாதான முடிவுக்கு வராத பட்சம், சர்க்காருக்கும் நமக்கும் வீண் தொந்தரவும், மனக்கசப்பும் ஏற்பட்டுத் தீரும் என்கிற நிலையில் மற்ற ஆதாரங்களும், முயற்சிகளும், நிலைமைகளும் இருந்தால், நான் இந்த சமாதானத்துக்கு வரவேண்டியதாயிற்று. ஆகவே இதன் பலன் என்னவானாலும் அதற்கு நானே பொறுப்பாளி என்றுதான் சொல்ல வேண்டும்".

("தந்தை பெரியார்" எனும் நூல். எழுதியவர் கவிஞர் கருணானந்தம்)

மேற்குறிப்பிட்ட அறிவிப்பில் பெரியார் தன்னிலை விளக்கம் என்ற அளவில் தன் எதிர்கால கோட்பாட்டைத் தெளிவாக அறிவித்து விட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

இது சம்பந்தமாக மேலும் ஒரு தகவலைத் தெரிந்து கொள்ளுவது அவசியம்.

10.3.1935ம் ஆண்டு குடியரசில் பெரியார் எழுதிய கருத்து.

> சுயமரியாதை இயக்கத்தின் அரசியல் கொள்கையானது பார்ப்பன ஆதிக்க காங்கிரசை எதிர்ப்பதும், அதற்காக எவ்வளவு அவசியப்பட்டாலும் அவ்வளவு அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதும், சமுதாய இயலில் சாதி மத பேதங்களை அகற்றுவதும், மூட நம்பிக்கைகளை ஒழிப்பதும், பொருளியலில் சமதர்மமுமேயாகும். இவற்றைப் பற்றிய விஷயங்களை மக்களிடையே பிரச்சாரம் செய்யவும், அமுலுக்குக் கொண்டு வருவதுமான காரியங்கள் நடைபெற வேண்டுமானால் காங்கிரஸ் ஆட்சியைவிட பிரிட்டிஷ் ஆட்சியே மேலானது என்பது என்னுடைய வெகுநாளைய அபிப்பிராயமாகும்"

என்றும் எழுதி உள்ளார். ("தமிழர் தலைவர்" என்ற நூல், சாமி.சிதம்பரனார் எழுதியது)

பெரியாரின் இந்த அணுகுமுறை அதாவது சமூக சீர்திருத்தக் கருத்துக்களை மட்டும் மக்களிடம் எடுத்துச் செல்வது, ஒரு குறிப்பிட்ட ஜாதியின் மேலாதிக்கத்துக்கு முடிவு கட்டுவது, பிராமணரல்லாதாரின் மேம்பாட்டுக்குப் பாடுபடுவது, மூடப்பழக்கவழக்கங்களுக்கு எதிராக போராடுவது, தீண்டாமையை, சாதியை ஒழிப்பது, மகளிர் உரிமைகளுக்காக முன் நிற்பது - என்பது போன்ற கோரிக்கைகளை மட்டும் முன் நிறுத்தி சுயமரியாதை இயக்கத்தை இயக்கினால் போதும் என்ற நிலைக்கு வந்ததற்குக் காரணம், இது ஆங்கிலேய ஆட்சியின் எதிர்ப்புக்கு ஆளாகாது என்பதுதான். சுயமரியாதை ஸ்தாபனத்துக்கு அப்படிப்பட்ட தாக்குதல்கள் உருவானால் ஸ்தாபனத்தில் உள்ள செல்வந்தர்கள், நல்ல வசதி படைத்தோர் இந்த ஸ்தாபனத்தை விட்டு விலகிப் போய் விடுவார்கள். இவர்கள் சுயமரியாதை இயக்கத்தை ஆதரிப்பதே, இது பிராமண எதிர்ப்புக் கொள்கை கொண்டிருப்பதால்தான். சமுதாயத்தில் பிராமணர்களுக்குள்ள அந்தஸ்தை - வாய்ப்புகளை குறைத்து, பிராமணர் அல்லாதார் ஆட்சி அதிகாரத்தில், அரசாங்கப் பணிகளில் அதிக வாய்ப்புக்களை பெறவேண்டும் என்பதனால்தான்! அப்படிப்பட்டவர்கள் பொருளாதாரக் கொள்கைகளை அடிப்படையாக வைத்த சமதர்ம சமுதாயத்தை ஏற்கவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

காங்கிரஸ் கட்சி தென்னகத்தில் பிராமணர்களின் ஆதிக்கத்தில் உள்ளது. எனவே காங்கிரஸ் சுதந்திரம் பெற்று ஆட்சிக்கு வருமானால் நிலைமைகள் இப்போது இருப்பதை விட இன்னமும் மோசமாகப் போய்விடும். சாதி ஆச் சாரங்கள் நீடிப்பது மட்டுமல்ல; பிராமண ஆதிக்கம் இப்போதை விட இன்ன மும் மேலே போய்விடும் என்று கணித்தார். அப்படிப்பட்ட கசப்பு அவருக்கு ஏற்கெனவே, அவர் காங்கிரஸ்காரராய் இருந்தபோதே ஏற்பட்டு விட்டதை நாம் அறிவோம். ஆகவே ஆங்கிலேயர்களை ஆட்சியிலிருந்து விரட்டி அடித்தாலும், நிலைமை இதைவிட மோசமாகத்தான் போகும் என்ற கருத் துக்கு வந்துவிட்ட பெரியார் பிரிட்டிஷ் ஆட்சியை நடைமுறைத் தந்திரமாக ஆதரிக்க வேண்டிய நிலைக்கு வந்தார்; பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் போராடும் காங்கிரசை எதிர்த்தார்! காங்கிரஸ் தலைமையில் சுதந்திரம் பெற்று விட்டால் அது சுதந்திரமாய் இருக்காது; அது மேலும் சனாதன சமூக அமைப் பைக் கெட்டிப்படுத்தவே செய்யும் என்று அஞ்சினார். ஆனால் இவரின் இந்தப் போக்கைக் கண்டு சிங்காரவேலர் கசந்து போனார்! பெரியாரோடு முரண்பட்டார்!

பெரியார் பிரிட்டிஷ் ஆட்சியை ஆதரிப்பதை சிங்காரவேலர் அடியோடு வெறுத்தார்!

ஜஸ்டிஸ் கட்சியை பெரியார் ஆதரிப்பதையும் மேலும் அடியோடு எதிர்த்தார்!

பிராமணர் - பிராமணர் அல்லாதார் என்ற பிரச்சனை ஒன்றையே முன்னி றுத்தி பெரியார் இந்நிலைக்கு வந்ததை சிங்காரவேலரால் ஜீரணிக்க முடிய வில்லை.

ஆங்கிலேயர்கள் இந்திய ஆட்சியிலிருந்து விரட்டி அடிக்கப்பட வேண்டும், நாட்டின் சுதந்திரம்தான் இன்று உடனடி தேவை!

புதிய உலகை (சோஷலிச உலகை) காந்திஜி ஆதரிப்பாரா என்பது வேறு விஷயம், ஆனால் அதற்காக சுதந்திரத்திற்காக பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்க் காமல் இருப்பது எந்த வகையிலும் ஏற்புடையதாகாது என்றார்; பிரிட்டிஷ் ஆட்சியுடன் சமரசம், சமாதானம் கொள்ளுவது கிஞ்சிற்றும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றார்.

இந்தச் சூழலில் காங்கிரஸ் நடத்திய ஒத்துழையாமை இயக்கம் இந்தி யாவை உலுக்கிக் கொண்டிருந்தது. மக்களின் பங்கு மகத்தானதாக ஓங்கி



படிப்பகம்

www.padippakam.com

நின்றது. ஒத்துழையாமை இயக்கத்தின் ஐந்தாவது ஆண்டு - அதாவது 1932ம் ஆண்டு அதன் உச்சக் கட்டத்தில் சில சுயமரியாதை வாலிபர்களும் காங்கிரஸ் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு பெற்று சிறையேகினார்கள். சிறையேகிய இந்த இளைஞர்கள், ஏற்கெனவே சிறைப்படுத்தப்பட்ட ஒரு தீவிரவாதி பூதகேஸ்வர தத் என்பவரைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இவர் பகத்சிங்கின் நெருங்கிய நண்பர் என்பது குறிப்பிடத்தக்கது. சிறையில் இருந்த பூதகேஸ்வர தத்தின் புரட்சிகரக் கருத்துக்கள் சுயமரியாதை இளைஞர்களை சிறைப்படுத்தியது; அவர்களின் கருத்துக்கள் இவர்களுக்குப் புதுமையாக இருந்தது.

காந்தி காட்டிய பாதை சுதந்திரத்திற்கு வழிவகுக்காது. மற்றொரு பாதை ஆயுதம் தாங்கிய அதி தீவிர பாதைதான். அந்தப் புரட்சிப் பாதைதான் ஆங்கிலேய ஆட்சியை வீழ்த்திச் சுதந்திரத்தைப் பெற்றுத்தரும் என்கிற கருத்து இந்த இளைஞர்களை ஈர்த்தது. சிறைப்பட்ட தோழர் ஜீவானந்தம் மற்றும் சுயமரியாதை வாலிபர்கள் இந்தக் கொள்கையால் கவரப்பட்டு, அவர்கள் சிறையிலிருந்து வெளிவந்தபோது, ஒரு புதிய ஒளியைப் பெற்றவர்களாய் நடைபோட்டனர்.

இக்கால கட்டத்தில்தான் ஏற்கெனவே இக்கட்டுரையில் குறிப்பிட்டிருந்தது போல, சிங்காரவேலரின் கட்டுரைகள் "குடியரசு" கட்டுரையில் ஏராளமாக வந்திருந்தன. சோஷலிச தத்துவங்கள் அக்கட்டுரையில் விரவிக் கிடந்தன.

1933ம் ஆண்டு விடுதலை பெற்ற ஜீவானந்தம், சிங்காரவேலரிடமிருந்து ஏராளமான புத்தகங்களைப் படித்தார். பகுத்தறிவு புத்தகங்களையும் படித்தார்; இவர் மட்டுமல்ல, இவரோடு விடுதலை ஆன சுயமரியாதை இளைஞர்களும் படித்தார்கள்.

இதன் விளைவாக ஜீவானந்தத்திற்கு ஒரு கருத்து உதயமாயிற்று.

***"சமுதாய விடுதலைப் போராட்டமானது,***
***நாட்டின் விடுதலைக்கான ஏகாதிபத்திய எதிர்ப்புப்***
***போராட்டத்தோடு இணைந்தது"*** என்பதுதான்.

இந்தக் கருத்து அவரை பெரியாருடன் முரண்பட வைத்துவிட்டது.

பெரியார் பிரிட்டிஷ் ஆட்சியை ஆதரித்தது, அதற்காக அவர் காங்கிரசை வெறுத்தது, காங்கிரஸ் ஆட்சியை விட ஆங்கிலேய ஆட்சியே மேல் என்று அவர் சொன்னது - இவைகளால் ஆத்திரம் கொண்ட ஜீவானந்தம் ஒரு


படிப்பகம்

www.padippakam.com
தன்னிலை விளக்கத்தை அறிக்கையாக வெளியிட்டார்.

அதாவது பகத்சிங் எழுதிய, "நான் ஏன் நாத்திகனானேன்" என்ற புத்த கத்தை ஜீவானந்தம் தமிழாக்கம் செய்து, அது 'உண்மை விளக்கம்' என்ற அச்ச கத்தில் அச்சிடப்பட்டதால், அதன் நிறுவனரான ஈ.வே.கிருஷ்ணசாமியும், ஜீவானந்தமும் கைது செய்யப்பட்டதை இக்கட்டுரையில் நாம் முன்பே குறிப் பிட்டிருந்தோம். இதனால் ஜீவானந்தமும், ஈ.வே.கிருஷ்ணசாமியும் அரசுக்கு மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு வெளியே வந்தார்கள். எந்தச் சூழ்நிலையில், தான் மன்னிப்புக் கடிதம் எழுத வேண்டிய நிலை இருந்தது என்பதை விளக்கி அறிக்கை விட்டார்! பெரியாரே இதற்கு நான்தான் காரணம் என்று அவரே ஏற்றுக்கொண்டு, அதை அவர் குடியரசில் எழுதியதையும் நாம் முன்பே குறிப்பிட்டிருக்கிறோம்.

ஜீவானந்தம் இந்த அறிக்கைவிட்ட சில மாதங்கள் கழித்து, அவர் சுயமரியா தைச் சமதர்மக் கட்சியின் செயலாளராக ஆனார். அக்கட்சியின் சார்பில் மன்னார்குடியில் மாநாடும் நடத்தினார். அம்மாநாட்டிற்கு சிங்காரவேலர் "சோஷலிசத்தைப் பற்றி" என்ற தன் உரையை எழுதி அனுப்பி இருந்தார்.

பிரிட்டிஷ் அரசை எதிர்த்து 5 ஆண்டு காலம் நடந்த ஒத்துழையாமை இயக்கம் (1927 முதல் 1932 வரை), மீரட் சதி வழக்கில் குற்றவாளிகளின் பிரிட் டிஷ் அரசுக்கு எதிராக எடுத்த உறுதியான நிலை, பகத்சிங், பூதகேஸ்வர தத்தின் வீர தீர செயல்கள் - இவை அனைத்தும் சுயமரியாதை சமதர்மக் கட்சி யின் உறுப்பினர்களிடையே ஒரு புதிய ஆர்வ அலையை உருவாக்கியது. அதுதான் தங்களுக்கென்று ஒரு புதிய கட்சி வேண்டுமென்பது!

இந்தச் சூழ்நிலையைப் பின்னணியாகக் கொண்டுதான் ம.சிங்காரவேலு வின் யோசனைப்படி புது உலகம் என்ற மாத இதழ் துவக்கப்படுகிறது. இதை கே.முருகேசன், டி.என்.ராமச்சந்திரன் என்ற இருவரும் சேர்ந்து துவக்கு கின்றனர்.

இவர் இதழில் ம.சிங்காரவேலர் மார்க்சியம் பற்றி பல கட்டுரைகள் எழுதி னார். ப.ஜீவானந்தம், ஏ.எஸ்.கே.ஐயங்கார், சாமி.சிதம்பரனார் போன்றோரும் பல கட்டுரைகள் எழுதினார்கள். ம.சிங்காரவேலர் இந்த இதழில் "சுய மரியாதை, நீதிக்கட்சி, காங்கிரஸ் கட்சி" ஆகியவை பற்றி கட்டுரை எழுதினார். இது ஓர் ஆய்வுக் கட்டுரையாக இருந்தது.

சுயமரியாதை இயக்கத்தில் ஏன் பழைய அமைப்பிலிருந்து, புதிய


படிப்பகம்

www.padippakam.com
அமைப்பு உருவாக்கப்பட்டது என்பதை விளக்குகிறார். அதோடு பெரியாருக்கு இதில் ஏராளமான பதில்களாக தன் கருத்துக்களை முன்வைக்கிறார்.

1932ம் ஆண்டு ஈரோட்டில் உருவாக்கப்பட்ட ஈரோட்டு திட்டம் முதற்கொண்டு 1936ம் ஆண்டு திருத்துறைப்பூண்டியில் நடந்த மாநாட்டில் பெரியாருடன் முரண்பட்ட நிலையில், ஒரு தனி இயக்கம் - சுயமரியாதை சோஷலிச கட்சி அமைக்க முடிவானது. அதன்படி பிப்ரவரி 1936ம் ஆண்டு அங்கு சுயமரியாதை சோஷலிச கட்சி உருவானது. அதன் செயலாளராக இருந்த ப.ஜீவானந்தம் மிக சுறுசுறுப்பாக செயல்பட்டார். பலரை இந்த அமைப்புக்குள் கொண்டு வந்தார்!

இதற்கிடையில் ப.ஜீவானந்தத்திற்கு பல கம்யூனிஸ்டுகளின் நட்பு ஏற்பட்டது. தோழர்கள் காட்டே, பி.சுந்தரய்யா, எஸ்.ஏ.டாங்கே - இப்படி பலரின் தொடர்புகள் பல காரணங்களால் ஏற்பட்டன.

1.11.1936ம் ஆண்டு திருச்சியில் நடந்த சுயமரியாதை சோஷலிஸ்ட் மாநாட்டை தோழர் எஸ்.ஏ.டாங்கே திறந்து வைக்க வேண்டுமென ப.ஜீவானந்தம் அவரை அழைத்தார். அம்மாநாட்டுக்கு டாக்டர் எம்.கிருஷ்ண சாமி தலைமை வகித்தார். இந்த மாநாட்டில் சுயமரியாதை சோஷலிஸ்டுகள் அனைவரும் காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியில் சேருவதென முடிவு செய்து விட்டனர். இந்தக் கட்சியில் ஏற்கெனவே பல கம்யூனிஸ்டுகள் பணியாற்றி வந்தனர்.

புதிதாக உருவான சுயமரியாதை சோஷலிஸ்ட் கட்சி நீண்ட நாள் செயல் படவில்லை. பெரியாருடன் முரண்பட்டு வந்து ஒரு குறிக்கோளோடு அமைக்கப்பட்ட இந்த அமைப்பு - சுயமரியாதை சோஷலிஸ்ட் கட்சி, காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியில் சங்கமமாகி விட்டது.

ஏன் சங்கமமாகிவிட்டது? சுயமரியாதை சோஷலிச மாநாட்டில் அப்படி என்ன நடந்தது?

ஆர்.கிஸ்ஸன் என்பவர் - சுயமரியாதை சமதர்மக் கட்சியின் முக்கிய அமைப்பாளர்களில் ஒருவர். இது சம்பந்தமாக என்ன எழுதுகிறார் எனப் பார்ப்போம்.

> "இந்த மாநாட்டில் தோழர் டாங்கே வழங்கிய அறிவுரை சோஷ லிஸ்டுகளுக்கான எதிர்காலப் பாதையைத் தெளிவாக எடுத்துக்


படிப்பகம்

www.padippakam.com

காட்டியது. தமிழகத்தில் சோஷலிச கருத்துக்களைப் பரப்பி, சோஷலிச தமிழகத்தை உருவாக்க சுயமரியாதை சமதர்மக் கட்சி பாடுபடுவதை அவர் வரவேற்றார். அதே பொழுதில் தமிழ்நாடு மட்டுமின்றி இந்தியா முழுவதுமே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிடியிற் சிக்கி இருப்பதால் அனைத்திந்திய ரீதியில் அந்த அடிமை நுகத்தடியைத் தகர்க்காமல் சோஷலிசத்தைப் பற்றிக் கனவு கூட காணமுடியாதெனவும், ஆகவே தேச சுதந்திரமே முதற்படியெனவும், அதன் பின்னர்தான் சோஷலிச அமைப்பை அமைக்க முடியும் என்பதையும் அவர் தெளிவுபடுத்தினார். சகலத் தரப்பு மக்களையும் ஓரணியில் திரட்டி, பிரம்மாண்டமான ஏகாதிபத்திய எதிர்ப்பு ஸ்தாபனமாக வளர்ந்துள்ள தேசிய காங்கிரஸ் மகா சபையில் சேர்ந்து, முற்போக்கான திசையில் சுதந்திரப் போரை உந்தித் தள்ளப் போராடுவதே முதற்கடமை என்றும், கம்யூனிஸ்ட் கட்சி சட்டவிரோதமாக்கப்பட்டுள்ளதால் காங்கிரசுக்குள்ளேயே புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள காங்கிரஸ் சோஷலிஸ்டுக் கட்சியிலும் சேர்ந்து தொண்டாற்ற வேண்டும் என்றும் அவர் வழிகாட்டினார். தோழர் டாங்கேயின் கருத்துரை அந்த மாநாடு செய்ய வேண்டிய கடமையை முழுமையாகத் தந்துவிட்டதால், மாநாட்டில் மேற்கொண்டு செய்வதற்கு அதிக வேலை இருக்கவில்லை. ஒரே தீர்மானம், சுயமரியாதைச் சமதர்மக் கட்சியைக் கலைத்துவிட்டு, தேசிய காங்கிரஸ் மகாசபையிலும், காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியிலும் சேர்ந்து பணியாற்றுவது என்ற தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு அத்துடன் அம்மாநாடு கலைந்தது".

இப்படி முடிக்கிறார் கிஸ்ஸன்.

இந்தத் தகவல் தோழர் கிஸ்ஸன் 1.4.63ம் ஆண்டில் வெளிவந்த தாமரையில் நினைவு கூர்ந்து எழுதுகிறார்.

பெரியாரும், சிங்காரவேலரும் இணைந்து உருவாக்கிய ஈரோட்டு பாதை - சுயமரியாதை சமதர்மக் கட்சியின் வளர்ச்சியைக் கண்டு பொறாத ஆங்கிலேய ஏகாதிபத்தியம் அடக்குமுறையை வீசி அது செயல்படாமல் போனதில் வெற்றி கண்டது! பெரியார் சமதர்மக் கொள்கையை - சோஷலிசக் கொள்கையை ஒதுக்கிவிட்டு சுயமரியாதைக் கொள்கையை மட்டும் ஏற்றுக்


படிப்பகம்

www.padippakam.com

கொண்டு செயல்பட முனைந்தார்! இதன் காரணத்தால் பெரியாருக்கும், சிங்கார வேலருக்கும் இடையில் கடுமையான சொற்போர் - கருத்துப் போர் நடந்தது; ஜீவானந்தமும் இந்தப் போரில் சிங்காரவேலருடன் இணைந்து நின்றார். கடைசியில் பிளவு ஏற்பட்டது!

இது ஒரு அரசியல் விபத்துதான். ஆனால் ஒரு கேள்வி எழும்புகிறது. பெரியார் தமிழகத்தில் ஓர் ஐம்பதாண்டு காலம் இந்த சுயமரியாதை இயக்கத் தைக் கூட நடத்தாமல் போயிருந்தால், சமூக சீர்திருத்தம் - சமூக நீதிக்காகப் போராடாமல் போயிருந்தால் தமிழகத்தின் நிலை என்னவாக இருந்திருக்கும்? அவர் எடுத்தது ஒரு சமயோசிதமான நடைமுறைத் தந்திரம்!

பெரியார் எனும் அந்த நாயகர் பிரிட்டிஷ் அரசால் தனக்கு ஏற்பட்ட சங்கடங்களை, தொல்லைகளை, தனக்கு ஏற்பட்ட அச்சத்தை, பயத்தை, அதனால், தான் அதிகாரிகளிடம் வருத்தம் தெரிவித்ததை, அரசுக்கு எதிராக செயல்பட மாட்டேன் என வாக்குறுதி கொடுத்ததை கொஞ்சம் கூட ஒளிவு மறைவு இல்லாமல் எழுத்துப்பூர்வமாக குடியரசு இதழில் எழுதி மக்கள் முன்பாகத் தன்னை அம்பலப்படுத்திக் கொண்டாரே, இவரின் இந்த குணத்தை - துணிவை, வெள்ளை உள்ளத்தை பாராட்டாமல், புகழாமல் எப்படி இருக்க முடியும்?

உண்மைதான், "வெள்ளைக்காரன் ஆட்சி மேல்" என்றார். "காங்கிரஸ் ஆட்சிக்கு வரக்கூடாது" என்றார். ஜஸ்டிஸ் கட்சியை ஆதரித்தார். இவை எல்லாம் விசித்திரமானவையாக இருந்தன!

இப்பொழுது ஆங்கிலேயர் ஆட்சி இல்லை; இந்தியா சுதந்திரம் பெற்ற நாடு; காங்கிரஸ் நீண்ட காலம் ஆட்சியில் இருந்தது.

இன்றைய நிலை என்ன என்ற கேள்வி எழுகிறது? மத ஆதிக்கம் குறைந்து விட்டதா? மதக் கலவரம் அடங்கிவிட்டதா? ஜாதிகள் ஒழிந்து விட்டனவா? ஜாதிச் சண்டைகள் தீர்ந்து விட்டனவா? தீண்டாமை இறந்துவிட்டனவா? மூடப்பழக்க வழக்கங்கள் மாய்ந்துவிட்டனவா? முதலாளிகள் ஆதிக்கம் முடிந்துவிட்டனவா? சுரண்டல் எரிந்து போனதுவா? பெண்ணடிமைத்தனம் தீய்ந்து போயினவா? ஊழல், மோசடிகள் உருக்குலைந்து போயினவா? மனித நேயம் மலர்ந்ததுவா? சமதர்ம சமுதாயம் பூத்ததுவா? இப்படி பெரியார் பல கேள்விகளைக் கேட்டால் பதில் என்ன சொல்லுவது? ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கட்சியும், ஆட்சிக்கு வந்த மற்ற முதலாளித்துவ கட்சிகளும்தானே இந்த அவலங்களுக்கு காரணங்களாக இருந்தன, இருக்கின்றன.


படிப்பகம்

www.padippakam.com

பெரியாரோடு முரண்பட்டு "சமுதாய விடுதலைக்கான போராட்டத்தில், பாதை பிறழாத ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டமெனும் பாதை ஓர் அவசிய மான நடவடிக்கை" என்று கூறிவிட்டு, சுயமரியாதை சோஷலிஸ்ட் கட்சி உருவாக்கப்பட்டது; அது உருவான அதே வேகத்திலேயே அதைக் கலைத்து விட்டு, காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியில் சங்கமமாகிவிட்டதில் சிங்கார வேலர் சுயமரியாதை எனும் வெறும் வார்த்தையை மட்டும்தான் விட்டு விட்டாரா? சுயமரியாதைக் கொள்கை, அவர் சிந்தனையில், இரத்தத்தில், அணுவில் பதிந்துவிட்ட அம்சமல்லவா? இந்தியாவில் சமூக சீர்திருத்தமும், பொதுவுடைமையும் இணைந்துதான் செயல்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டவர்தானே இவர்? ஏன் இந்த வேகமான மாற்றம்?

பெரியார் ஒரு தலையங்கம் எழுதியதாக எனக்கு ஒரு நினைவு. குடியரசு இதழில்தான் படித்த ஞாபகம்! விடுதலை நூலகத்தில்தான் அதை தற்செயலாக 25 ஆண்டுகளுக்கு முன்பாக பார்க்க நேர்ந்தது.

> "கம்யூனிஸ்டுகள் நமக்கு விரோதிகள் அல்ல. அவர்கள் ஒரு கொள்கையைப் பின்பற்றுகிறார்கள், நாம் ஒரு கொள்கையைப் பின்பற்றுகிறோம். இரண்டு கொள்கைகளுமே நாட்டுக்குத் தேவை! ரயில் இரண்டு இரும்பு தண்டவாளத்தில்தான் ஓடுகிறது; இந்த இரண்டு கொள்கைகளும் இரண்டு தண்டவாளங்களாக இருக்கட்டும்"-

என்று எழுதியதாக ஞாபகம். ஒருவேளை நான் எழுதிய வார்த்தைகள் வேறுவிதமாக இருக்கலாம். ஆனால் கருத்து மட்டும் அதுதான்!

"ஆசியாவின் சமூக நிலையில் அடிப்படையான புரட்சி ஏற்படாமல், மனிதகுலம் தன் லட்சியத்தில் நிறைவு எய்துமா?"

"இந்தியாவில் ஒரு குல மரபுக்கும் மற்ற குல மரபுக்கும் இடையே பிளவு இருந்தது; ஒரு சாதிக்கும் மற்ற ஜாதிக்கும் இடையே பிளவு இருந்தது... ஒருவர் மற்றொருவரை தனியே வ்லக்கி வைப்பது இருந்தது".

"இந்தியாவில் மனிதனது சிந்தனையைக் குறுகிய வட்டத்தில் சுழலச் செய்து, அதனை மூடநம்பிக்கைக்கு ஏற்ற கருவியாகவும், மரபின் அடிமை யாகவும் செய்து, அதன் மேன்மை முழுவதையும், வரலாற்றுப் படைப்பாற்றல் அனைத்தையும் இழக்கச் செய்துவிட்டன."

இப்படியெல்லாம் இந்தியாவை வர்ணித்த மார்க்ஸ்,



படிப்பகம்

www.padippakam.com

"எது எப்படி இருந்தாலும் சரி, அந்த மகத்தான கவர்ச்சிகரமான தேசம் ஏறக்குறைய தூரத்தில் உள்ள ஒரு காலத்தில் மறுமலர்ச்சி அடையும் என்று நாம் நிச்சயமாக நம்பலாம்"

என்றாரே, அவரின் நம்பிக்கை என்று நிறைவேறும்?

மூட நம்பிக்கையையும், ஜாதி வேற்றுமைகளையும், மத ஆதிக்கத்தையும் உடைத்தெறிந்து, ஏற்றத்தாழ்வற்ற சமூக மறுமலர்ச்சி கொண்ட ஒரு பொறுப்பான தேசமாக இந்தியா என்று மலரும்?

"ஏறக்குறைய தூரத்தில் உள்ள ஒரு காலத்தில்" என்று மார்க்ஸ் சொன்னாரே, அது எத்தனைக் காலம்? காலத்தை திட்டவட்டமாக எப்படி குறிக்க முடியும்?

ஆனால் ஒன்று! "நாம் அதை நிச்சயமாக நம்பலாம்" என்றாரே, அது நமக்கு நிம்மதி அளிக்கிறது.

ஆம், இந்திய தேசம் மறுமலர்ச்சி அடைந்தே தீரும், நாமும் நிச்சயமாக நம்புவோம்".

இதற்கிடையில் பெரியாரையும், சிங்காரவேலரையும் நினைத்து பெருமை கொள்ளுவோம்!



படிப்பகம்

www.padippakam.com

# பொழுதெல்லாம் எம் செல்வம் கொள்ளை போவதோ?

## ஆர்.சந்திரா, திருச்சி

"ஏகாதிபத்தியத்தின் மிக ஆழமான அடித்தளம் முற்றுரிமையாகும்" (''ஏகபோகம்'') (லெனின்)



இது முதலாளித்துவத்தின் மிக முக்கியமான காலகட்டமாக கருதப்படுகிறது. ஏகாதிபத்தியம் வளர்ச்சி அடையும்போது, மிகப்பெரிய வணிக நிறுவனங்கள் உலகச் சந்தையை பங்குபோட்டுக் கொள்வதையும், ராட்சத வங்கிகள் ஒன்றிணைந்து உலகப் பொருளாதாரத்தை கட்டுப்படுத்துவதையும், உலக வளங்களை சில நிறுவனங்கள் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விடுமென்பதையும் காணமுடியும் என்ற லெனினின் கூற்று இன்று மெய்யாகியுள்ளது.

பன்னாட்டு வணிக நிறுவனங்கள் (MNCS) என்பவை யாவை? இந்த கேள்விக்கு பல விளக்கங்கள் உண்டு. பேராசிரியர் கோயின் "பன்னாட்டு வணிக நிறுவனங்கள் என்பவை மிகப்பெரிய, பல நாடுகளிலும் செயல்படக்கூடிய, சிலருடைய முற்றுரிமைக்குட்பட்ட நிறுவனங்கள் ஆகும். உற்பத்தி, விற்பனை ஆகியவற்றை உலக அளவில் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் இவற்றின் ஒரே குறிக்கோள் லாபம் ஈட்டுவது மட்டுமே" என விளக்கமளிக்கிறார். "பன்னாட்டு வணிக நிறுவனங்கள் நாட்டின் எல்லையை கடந்து, எந்த நாட்டில் தமது நிறுவனத்தை அமைக்கின்றதோ, அங்கு உற்பத்தி மற்றும் சேவை வசதிகளை முழுவதுமாக கட்டுப்படுத்துகின்றன. இவை அனைத்தும் தனியார் நிறுவனங்களாகவே செயல்படுவதில்லை. அரசிற்கு சொந்தமான நிறுவனங்களுடன் இணைந்தும் செயல்படுவதுண்டு" (ஐ.நா. அறிக்கை 1974 பக்கம் 25). மேலே கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்கள் பொதுவானவை. 'பார்ச்சூன்' (Fortune) என்ற பத்திரிகை உலகின் மிகப்பெரிய 500 நிறுவனங்கள் எந்தெந்த நாடுகளில் செயல்படுகின்றன. எப்படி செயல்படுகின்றன என்பதைப் பற்றிக் குறிப்பிடுகையில் ப.வ.நி. ஏற்றுமதி, இறக்குமதி போன்ற பொருளாதார நடவடிக்கைகள் மட்டுமின்றி, ஒட்டுமொத்த உற்பத்தி, விற்பனை என தம் வலையை பரந்து வீசுகின்றன என தெளிவுபடுத்துகிறது.



படிப்பகம்

## பன்னாட்டு வணிக நிறுவனங்களின் வளர்ச்சி

www.padippakam.com

ப.வ.நி. வளர்ச்சி பற்றி பல பொருளாதார, அரசியல் வல்லுனர்கள் பல்வேறு கோட்பாடுகளை வகுத்துள்ளனர். இந்த கோட்பாடுகளை இரண்டு வகையாக பிரிக்கலாம். முதல் வகையை பிரபலப்படுத்தியவர்கள் நவீன தொன்மை பொருளாதார பள்ளியின் (Neoclassical school) கருத்துக்களை பிரதிபலிக்கக்கூடியவர்கள். இவர்களின் கூற்றின்படி, ப.வ.நிறுவனங்கள் சர்வதேச வேலைப் பிரிவினையை வலுப்படுத்தி, வளங்களை முறையாக பயன்படுத்தி, உலகை வளமாக்கச் செய்யும் கருவிகள் ஆகும். முதலாளித்துவ வளர்ச்சியை செழுமைப்படுத்தி உலக ஒற்றுமையை வளர்க்கின்ற வாகனங்கள் ஆகும். எனவே, ப.வ. நிறுவனங்கள் சுதந்திரமாக செயல்பட அனுமதிக்கப்பட வேண்டும் என்றும், உலகிலுள்ள எந்த நாடாக இருப்பினும் அதன் வளங்களை பயன்படுத்த ப.வ. நிறுவனங்கள் அனுமதிக்கப்பட வேண்டும் என்பது இவர்கள் வாதம். (ஃப்ரீமேன், 1971). சுருங்கக்கூறின், உலகப் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தும் வாகனங்கள் ப.வ.நி. என்பதே இவர்கள் கருத்து.

மேலே கூறப்பட்டதற்கு மாறான கோட்பாட்டை முன்வைப்போர் வெரோன், டன்னிங் மற்றும் ரால்ஃப் போன்றோர் ஆவர். இவர்களைப் பொறுத்தவரை (Sovereignty at Bay School) ப.வ. நிறுவனங்களின் வளர்ச்சிக்கான காரணங்கள்:

1. சர்வதேச போக்குவரத்து செலவு குறைவு

2. சர்வதேச தொலைதொடர்பு செலவு குறைவு

3. புதிய தொழில்நுட்ப கண்டு பிடிப்புகளை பயன்படுத்த ஆகும்

### முதல் 10 பகாசுர கம்பெனிகள்

(அன்னிய சொத்து மதிப்பு மட்டும் கோடி அமெரிக்க டாலரில்)

1. ஜெனரல் எலக்ட்ரிக் (அமெரிக்கா) 128.6
2. ஜெனரல் மோட்டார்ஸ் (அமெரிக்கா) 73.1
3. ஷெல்ராயல் டச் (பிரிட்டன் – நெதர்லாந்து) 67.0
4. போர்டு மோட்டார் (அமெரிக்கா)
5. எக்சான் கார்ப்பரேசன் (அமெரிக்கா) 50.1
6. டயோட்டா (ஜப்பான்) 44.9
7. ஐ.பி.எம். (அமெரிக்கா) 43.6
8. பீ.பி.சுமோகா (பிரிட்டன்) 40.5
9. டெய்ம்லர் – பென்ஸ் (ஜெர்மன்) 36.7
10. நெஸ்லே (ஸ்விட்சர்லாந்து) 35.6

முதல் 10 நிறுவனங்களில் ஐந்து அமெரிக்காவைச் சார்ந்தவை. மேலே குறிப்பிடப்பட்டுள்ள சொத்து தனது சொந்த நாட்டிலுள்ள சொத்து மதிப்பை உள்ளடக்காத தொகையாகும். அங்க்டாட் வெளியிட்டுள்ள அறிக்கை.

*ஆதாரம் :* பிசினஸ் லைன் 5.10.2000



படிப்பகம்

www.padippakam.com

செலவு அதிகமாக ஆகியது போன்ற வையாகும். ப.வ. நிறுவனங்களால் ஏற்படுகின்ற சில நன்மைகளையும் எடுத்துரைக்கும் இவர்கள் ப.வ.நி. வளர்ச்சியினால் ஏற்படும் முக்கிய முரண்பாடுகளையும் விளக்குகின்றனர். தங்களை விட்டால் உலக பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவோர் யாருமில்லை என்பது போன்ற மாயையை ப.வ.நி. திட்டமிட்டு உருவாக்குகின்றன. ப.வ. நிறுவனங்களுக்கிடையே ஏற்படும் முரண்பாடுகள், முதலீடு தொடர்பான சண்டைகள் போன்ற பிரச்சனைகளை வெரோன் போன்றவர்கள் முறையாக விளக்கவில்லை.

நவீன ஏகாதிபத்திய பள்ளியை (Neo imperialist School) சேர்ந்தோர் ப.வ.நி. உலக முதலாளித்துவத்தை மேலும் வலுப்படுத்த உதவும் ஏஜெண்டுகள் என்று கருதுகின்றனர். இதனால், சமுதாயங்கள் பலவீனமடைகின்றன என்றும், பலவீனமான ஏழை நாடுகளின் சுயாதிபத்தியம் ப.வ. நிறுவனங்களின் ஆதிக்கத்தின் முன் சரணடைகிறது என்றும் கூறுகின்றனர்.

**மார்க்சிஸ்டுகளைப் பொறுத்தவரை ப.வ.நி. முதலாளித்துவ வளர்ச்சியின் உச்சகட்டத்தின் ஒரு முக்கிய அம்சம் என கருதப்படுகிறது. உலகளவில் மூலதனத்திற்கும் உழைப்புக்குமிடையேயான முரண்பாடு அதிகரிக்கிறது. முதலில் பன்னாட்டு வணிகம் வளர்ச்சி அடைகிறது. (சரக்கு மூலதனம்) பின்னர் மூலதன ஏற்றுமதி அதிகரித்து நிதி மூலதனத்தின் ஆதிக்கம் (லெனின் குறிப்பிடுவது போல) ஏற்படுகிறது. ப.வ.நி. மூலம் உலக பொருளாதாரம் ப.வ.நி. கட்டுப்பாட்டினுள் வந்து விடுகிறது.** *(Marx. Capital VoL II)*.

**ப.வ.நிறுவனங்களின் பின்னணி:** இரண்டாவது உலகப் போருக்குப் பின் ஏராளமான காலனி நாடுகள் ஏகாதிபத்திய பிடியிலிருந்து விடுதலை அடைந்தன. சில பெரிய நிறுவனங்கள் அமெரிக்க தொழில் வளர்ச்சியில் மிகப்பெரிய சக்தியாக மாறியது. அந்த தொழில் வளர்ச்சியின் பிரதிபலிப்பாக பல ப.வ.நி. உலகெங்கும் காலூன்றத் தொடங்கின. ஆர். கில்பின் (Gilpin. R) என்பவரின் ஆய்வின்படி "1969ம் ஆண்டிலேயே அமெரிக்க ப.வ.நி. மட்டும் 140 பில்லியன் டாலர்கள் மதிப்புள்ள பொருட்களை உற்பத்தி செய்ததாக கூறப்படுகிறது.

1950க்குப் பின் ப.வ.நி. பல நாடுகளிலும் பல வடிவங்களில் வலுவடையத் துவங்கின. ப.வ.நி. லாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுவதால், ராயல்டி, கமிஷன், தொழில்நுணுக்க அறிவை அளிப்பதற்கான தொகை என எக்கச்சக்கமான பணத்தை தனது தாய் நிறுவனத்திற்கு அனுப்பிவிடுகிறது. எனவே, ப.வ.நிறுவனத்தின் பிரமிக்கத்தக்க வளர்ச்சி ஓரிரண்டு ஆண்டுகளில் ஏற்பட்டது அல்ல. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலும், பத்தொன்பதாவது நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வளர ஆரம்பித்த ப.வ.நி. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப



படிப்பகம்

கண்டுபிடிப்புகளை முழுவதுமாக பயன்படுத்திக்கொண்டு, உற்பத்தி முறைகளில் மாறுதல்களை கொண்டு வந்து, தங்கள் கிளைகளை சிறிது, சிறிதாக மற்ற நாடுகளிலும் ஆரம்பித்து, வேரூன்றியவை. இன்றைய உலகப் பொருளாதாரத்தை முற்றிலும் தங்கள் பிடிக்குள் வைத்துக்கொண்டிருப்பவை. தங்கள் வளர்ச்சியை தக்க வைத்துக்கொள்வதற்கு அந்தந்த நாடுகளிலுள்ள அரசியல் கட்சிகளுக்கு நிதி ஆதரவு உட்பட நாடுகளின் பொருளாதார நடவடிக்கைகளில் நேரடியாக தலையிடுபவை. (உ.ம். கிரீஸ், வியட்னாம், இரான், டொமினிகன் குடியரசு, கௌதமாலா...) தவிர, மறைமுகமாக ஆயுதங்கள் அளிக்க உதவுவது, தங்களுக்கு சாதகமான ஆட்சியை அமைக்க நிதி மற்றும் அரசியல் செல்வாக்கை பயன்படுத்த தயங்காதவை. குறிப்பாக, பின்தங்கிய, வளரும் மூன்றாம் உலக நாடுகளின் அரசியல், பொருளாதார கொள்கைகளை தங்

www.padippakam.com

> *உலகிலுள்ள மிகப்பெரிய கார் தயாரிப்பாளர்கள் தங்கள் போட்டியாளர்களுடன் கூட்டு வைத்துக்கொண்டுள்ளனர். போர்டு கம்பெனிக்கு மஸ்தாவில் 25 சதவீதம் பங்கு, க்ரிஸ்லருக்கு, மித்சுஷியில் 24 சதவீதம், ஜெனரல் மோட்டாருக்கு, டயோட்டாவில் பங்கு என்பதுகளில் இப்படி கூட்டு வைத்துக் கொள்ளவும் நிறுவனங்களின் இணைப்புக்கும் செலவிடப்பட்ட தொகை 1.3 ட்ரில்லியன் டாலர்களை தாண்டியுள்ளது. ஏகபோக முதலாளிகளின் தொழில் அடர்ந்த காட்டைப் போன்றது. எனவே, மிருகங்கள் தங்கள் இரையைத் தேடும்போது உண்மையான உருவத்தை மறைத்துக்கொள்ள வேண்டியுள்ளது.*
>
> *– ஹர்ப்ரீத் ப்ரார் (ஏகாதிபத்தியம் பக்கம் 40)*

கொடுத்து, அதன்மூலமாக தங்களுக்கு ஆதாரவான பொருளாதார கொள்கைகளை உருவாக்க அந்த அரசுகளை நிர்ப்பந்தம் செய்ய தயங்காதவை. வரிவிலக்கு போன்ற சலுகைகளை பெறுவதற்கு எந்தமாதிரியான தில்லுமுல்லுகளை செய்யவும் தயாரானவை. அரசு காண்ட்ராக்டுகளை பெறவேண்டி அரசியல் செல்வாக்கை பயன்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்பவை. தனது தாய்நாட்டின் அரசியல் அதிகாரத்தை பயன்படுத்தி கிளைகள் உள்ளகளுடைய வளர்ச்சிக்கேற்ப மாற்ற அந்தநாட்டு அரசுகளை நிர்ப்பந்தம் செய்பவை. எதை உற்பத்தி செய்வது, எந்த அளவு உற்பத்தி செய்வது, எந்தெந்த தொழில்நுணுக்கத்தை பயன்படுத்துவது, எங்கு, எப்படி விற்பனை செய்வது, அதற்கான நடைமுறை தந்திரங்களை உருவாக்குவது உட்பட அனைத்து பொருளாதார நடவடிக்கைகளையும், தீர்மானிக்கின்ற சக்தியாக விளங்குபவை. இப்படி ப.வ.நி. தாங்கள் வளர என்ன முயற்சிகளை, நடவடிக்கைகளை மேற்கொண்டன



படிப்பகம்

www.padippakam.com

என விவரித்துக் கொண்டே போக லாம்.

லெனின் ஏகாதிபத்தியம் பற்றி குறிப்பிடுகையில், "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம்" எனக் குறிப்பிடுகிறார். நேரடி அரசியல் தலையீட்டிற்கு பதிலாக, மறைமுகமாக தொழில், நிதி என பல வகைகளில் உலக வளங்களையும், உலக நிதியாதாரத்தையும், உலக வாணிகத்தையும் முற்றிலுமாக தங்கள் பிடிக்குள் கொண்டு வருவதன் மூலம் ப.வ.நி. முதலாளித்துவம் தனது பிடியை மேலும் வலுப்படுத்த உதவுகிறது. பொருட்கள் ஏற்றுமதியை விட, மூலதன ஏற்றுமதி என்பது இந்த காலகட்டத்தில் முக்கியத்துவம் அடைகிறது. தொழில்நுட்ப ஏற்றுமதியும் பிரதானமாகிறது. அதிக அளவு ப.வ.நிறுவனங்களைக் கொண்ட நாடு, மற்ற பலவீனமான, பொருளாதார ரீதியில் பின்தங்கிய நாடுகளை சுரண்ட ப.வ.நிறுவனங்களை கருவிகளாக பயன்படுத்துகிறது. இதனால் ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையே உலகை கூறுபோடுவதில் போட்டி ஏற்படுகிறது. அதுமட்டுமல்ல, சந்தைகளை சொந்தமாக்கிக் கொள்ள மேற்கொள்ளும் முயற்சிகளின் விளைவாக பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட ஏதுவாகிறது. அப்படி நெருக்கடி ஏற்படும்பொழுதில், புதிய பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு, மீண்டும் தன்னை புதுப்பிக்க முயற்சி செய்கிறது. லெனின் கூறியது போல, ஏற்றத்தாழ்வுகளும், உழைப்பை சுரண்டுவதும், நடைமுறையில் முதலாளித்துவ சமுதாயத்தில் ஏற்படும் பொருளாதார நெருக்கடியை மென்மேலும் வலுப்பெறச் செய்கிறது. இதில் ப.வ. நிறுவனங்களுக்கு கணிசமான பங்கு உள்ளது.

இந்த பகுதியின் ஆரம்பத்தில், ப.வ.நி. இரண்டாம் உலகப்போருக்குப் பின், வலுவடையத் துவங்கியது என குறிப்பிட்டுள்ளது. அத்ற்கு முக்கிய காரணம், அவற்றின் செயல்பாடு கடந்த 60 ஆண்டுகளில் கணிசமாக அதிகரித்திருப்பதுதான். நூறு ஆண்டுகளுக்கு முன் அங்கும், இங்குமாக சில துறைகளில் மட்டும் செயல்பட்ட ப.வ.நி. இன்று 'ஆக்டோபஸ்' போன்று பரந்து, விரிந்து, அனைத்து துறைகளையும் தனது பிடிக்குள் கொண்டுவந்துவிட்டன என்றால் மிகையாகாது. எடுத்துக்காட்டாக 1865ம் ஆண்டு ஜெர்மனியைச் சேர்ந்த பிரடெரிக் பேயர், அமெரிக்காவின் நியூயார்க்கிலுள்ள அல்பமி என்ற இடத்தில் செயல்பட்ட தொழிற்சாலையின் பங்குகளை வாங்கினார். ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த 'டைனமைட்டை'கண்டுபிடித்த ஆல்பிரட் நோபல் ஜெர்மனியின் ஹாம்பர்கில் வெடிமருந்து தொழிற்சாலையை நிறுவினார். 1867ம் ஆண்டு அமெரிக்காவின் 'சிங்கர்' தையல் மிஷின், இங்கிலாந்திலுள்ள கிளாஸ்கோவில் ஒரு கிளையை நிறுவியது. ப.வ. நிறுவனங்களைப் பற்றி ஏராளமான ஆய்வுகளை மேற்கொண்ட பேராசிரியர் ஒருவர் "ஒரு பொருளை அதிக அளவில் உற்பத்தி



படிப்பகம்

www.padippakam.com

மசயது, அதே பெயரில் உலகெங்கும் விற்பனை செய்த முதல் நிறுவனம் 'சிங்கர் (Singer sewing Machine) தான்" என்கிறார். ப.வ. நிறுவனங்களின் ஆரம்பம் சிங்கர் நிறுவனத்திட மிருந்துதான் துவங்கியது எனலாம். பேயர், நோபல், சிங்கர் போன்றோர் தாம் ப.வ.நிறுவனங்களின் முன்னோ டிகள் ஆவார்கள். சென்ற நூற்றாண் டில் பிரிட்டன் உலகின் பல நாடுகளி

**உலக உணவுதானிய உற் பத்தி மற்றும் விற்பனை 2 நிறு வனங்கள் ஆதிக்கத்தில் உள் ளன. (கார்கில், கான் ஆக்ரா) மூன்று நிறுவனங்கள் 80 சத வீதம் மாட்டுக்கறி சந்தையை தன்னிடம் வைத்துள்ளன. காம்ப்பெல் என்ற ஒரே நிறுவ னம் 70 சதவீதம் அமெரிக்க 'சூப்' சந்தையை கட்டுப்படுத்து கிறது. கார்கில், கான் ஆக்ரா, பில்ஸ்பரி, ஏடிஎம் மில்லிங் என்ற 4 நிறுவனங்கள் உண வுக்கான மாவு சந்தையை ஆதிக்கம் செலுத்துகின்றன. 1982 முதல் 1990 வரை அமெரிக்காவில் 4100 பெரிய நிறுவனங்கள் இணைக்கப்பட் டுள்ளன.** *(Mergers)*

லும் முதலீடு செய்திருப்பினும், அத னுடைய காலனி நாடுகளைத் தவிர, மற்ற நாடுகளில் ஆதிக்கம் குறை வாகவே இருந்தது. ஆனால், அமெ ரிக்க கம்பெனிகள், பல நாடுகளிலும், வலுவாக நுழைந்தன என்பது மறுக்க இயலாத உண்மை. 1902ம் ஆண்டு அமெரிக்கா வலுவாக ஐரோப்பிய நாடுகளில் முதலீடு செய்து நுழைந்த தைப் பற்றி எப்.ஏ.பெக்கென்சி என்ப வர் கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறார்: "அமெரிக்கா ராணுவத்திற்கு பதில், பொருட்கள் மூலம் ஐரோப்பாவில் படையெடுத்துள்ளது. மேட்ரீட் முதல் பீட்டர்ஸ்பர்க் வரை உள்ள மக்களின் வாழ்க்கையே மாறிவிட்டது. நமது நாட்டு பிரபுக்கள் அமெரிக்க மனை விகளை விரும்புகின்றனர். நமது பிர புக்களின் குதிரை வண்டிகளை ஓட்டி யவர்களை இன்று காணவில்லை. அதற்கு பதில், அமெரிக்க கார்களை அமெரிக்காவில் பயிற்சி பெற்ற அமெரிக்க ஓட்டுனர்களைத்தான் காணமுடிகிறது. நமது குழந்தைகள் அமெரிக்க உணவை உண்கின்றனர். நமது நாட்டு சவங்கள் அமெரிக்க சவப்பெட்டியில் வைத்து அடக்கம் (சாவில் கூட சுயசார்பு இல்லை) செய் யப்படுகின்றனர்...." 1902ம் ஆண்டு இப்படிப்பட்ட மதிப்பீடு செய்யப்பட் டது என்றால் 2001ல் எவ்வளவு பில் லியன் மக்கள் ப.வ.நி. கட்டுப்பாட்டிற் குள் வந்துள்ளனர்" என கற்பனை செய்து பாருங்கள்!

## ப.வ. நிறுவனங்களின் ஆதிக்கம்

* உலகின் மிகமுக்கிய 300 ப.வ. நிறு வனங்கள் உலகின் மொத்த சொத் துக்களில் 25 சதவீதம் தனது கட்டுப் பாட்டிற்குள் வைத்திருக்கின்றன.
* உலகின் 50 மிகப்பெரிய வங்கிகள் உலக மூலதனத்தில் 60 சதவீதம்



படிப்பகம்

www.padippakam.com

தங்களிடம் வைத்துள்ளன. (Hoover's Handbook of World Business)

* ஒரே ஒரு சதம் ப.வ. நிறுவனங்கள் 50 சதவீதம் அன்னிய நேரடி முதலீட்டை கட்டுப்படுத்துகிறது. (World Investment Report)
* உலகில் கிட்டத்தட்ட 40 ஆயிரம் ப.வ.நிறுவனங்கள் உள்ளன. இவை இரண்டரை லட்சத்திற்கும் மேற்பட்ட கிளைகளை வைத்துக் கொண்டு செயல்படுகின்றன. (Paul Hawkins)

உலக வணிகத்தில் மூன்றில் ஒரு பங்கு ப.வ. நிறுவனங்களுக்குள்ளாகவே நடைபெறுகிறது. 1980க்குப் பிறகு ப.வ.நிறுவனங்களின் ஆதிக்கம் அதிகரித் துள்ளது.

200 ப.வ.நிறுவனங்களின் விற்பனை உலகில் மொத்த உற்பத்தியில் 24.2 சதவீதம் ஆகும். இது 1995ல் 28.3 சதம் என அதிகரித்தது. தற்போது 30 சதத்தை தாண்டி விட்டது. (Economist)

பல ராட்சத ப.வ. நிறுவனங்கள் சில நாடுகளை விடப்பெரியது. பல நாடுகளின் மொத்த உற்பத்தியை விட இவற்றின் உற்பத்தி அதிகம். உதாரணமாக, வால்மார்ட் என்ற அமெரிக்க கம்பெனி பல ஆப்பிரிக்க நாடுகளின் மொத்த தேசிய உற்பத்தியை மிஞ்சக்கூடியது. ஜப்பானிய நாட்டின் மிட்சுபிஷி இந்தோனேசியாவை விட பெரிய கம்பெனி. அதேநாட்டைச் சேர்ந்த டொயடோ நார்வே நாட்டை விட பெரியது. பிலிப்ஸ் மாரிஸ் நியூசிலாந்தை விட பெரியது. இப்படி உலகதர வரிசையிலுள்ள முதல் 50 கம்பெனிகளை எடுத்துக்கொண்டால், பல நாடுகளின் உற்பத்தியை விட கூடுதலாக இருப்பதை காணமுடியும்.

அமெரிக்காவிலுள்ள 90 தொழிலதிபர்கள், பொருள் உற்பத்தி மட்டுமின்றி நிதி மூலதனத்தையும் கட்டுப்படுத்தும் சக்தி வாய்ந்தவர்கள். (ராக்பெல்லர், ட்யூபாண்ட், மெல்லன்ஸ், போர்டு, மார்கன்... என பல எடுத்துக் காட்டுகள் உண்டு)

**மொத்த ப.வ. நிறுவனங்களில் 90 சதவீதம் தங்கள் தலைமையகத்தை ஏகாதிபத்திய நாடுகளில் கொண்டுள்ளவை. அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளிடம் மட்டும் அன்னிய முதலீட்டில் 79 சதவீதம் உள்ளது. உலகில் முதல் 200 ப.வ. நிறுவனங்களில் 5 தவிர மற்ற 195 நிறுவனங்களும் ஏகாதிபத்திய நாடுகளைச் சேர்ந்தவை. மீதமுள்ள 5 மூன்றாம் உலக நாடுகளில் உள்ளன. அவற்றில் 3 தென்கொரியாவிலும், 2 பிரேசிலிலும் உள்ளன.**

**– உலக முதலீட்டு அறிக்கை**
**World Investment Report 1996**

அமெரிக்க மூலதனத்தின் ஆதிக்கம் மேற்கு ஐரோப்பாவின் எலக்ட்ரானிக் துறையில் அதிகம் உள்ளது. குறிப்பாக, 80 சதவீதம் கம்ப்யூட்டர் உற்பத்தி, 50 சதவீதம் டிரான்ஸ்சிஸ்



படிப்பகம்

www.padippakam.com

டர்கள், 15 சதவீதம் ரேடியோ உற்பத்தி என பல துறைகளிலும் புகுந்துள்ளன. கனடா நாட்டின் கேந்திரமான் தொழில்களில் அமெரிக்க மூலதனத்தின் ஆதிக்கம் உள்ளது. (90 சதவீதம் கார் உற்பத்தி, 80 சதவீதம் ரப்பர், 75 சதவீதம் இரசாயனங்கள், 65 சதவீதம் எலக்ட்ரிகல் பொருட்கள், 50 சதவீதம் சுரங்கம், பெட்ரோலியம், இயற்கை வாயு ஆகியவற்றை குறிப்பிடலாம்.)

இப்படி மற்ற நாட்டு பொருளாதாரத்தினுள் அமெரிக்கா படையெடுப்பது என்பது ஒரு விபத்து அல்ல. முதலாளித்துவம் வளர்ச்சி அடையும் போது ஒன் றன்பின் ஒன்றாக ஏற்படும் நிகழ்வுகளின் விளைவே இது. இதனால், ஏகபோகம் மேலும் வலுவடைந்து, பல ராட்சத கம்பெனிகள் ஒன்றிணைந்து சந்தையை பங்கு போடுகின்றன. நிறுவன இணைப்புகள் (Mergers) இன்று அசுர வேகத்தில் நடக்கின்றன. இதனால் ராட்சத நிறுவனங்கள் 'சூப்பர் ராட்சதர் களாக' மாறுகின்றன. இந்த மாற்றத் தில் பல பெரிய நிறுவனங்கள் கூட காணாமல் போகின்ற நிலை ஏற் படுகின்றது.

* அமெரிக்க ப.வ. நிறுவனங்கள், தொழிற்சாலைகளுக்கும், ராணுவத்துக்குமிடையே இணைப்பை ஏற்படுத்தி செயல்படுவதும் முக்கியமான அம்சமாக கருதப்படுகிறது. அமெரிக்க அதிபர் ஐசனோவர் காலத்திலேயே 'ராணுவ தொழில் வளாகம்' பற்றி பேசப்பட்டது. அதாவது இதன் அர்த்தம் ராணுவம் - வங்கி, தொழில் ஏக போக இணைப்பு என்பதாகும். மேலும், கொள்ளை லாபம் ஈட்ட இந்த இணைப்பு உதவியாக உள்ளது.

ப.வ. நிறுவனங்கள் தங்களை அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள் என பிரகடனப்படுத்திக் கொள்கின்றன. ஆனால், நடைமுறையில் தங்கள் கிளைகள் செயல்படும் நாடுகளின் அரசியலில் தலையிட கொஞ்சமும் தயக்கம் காட்டுவதில்லை. உதாரணமாக, ஆப்பிரிக்க நாடுகளில் நிற வெறி அரசு அமைக்க பிரிட்டிஷ் ப.வ. நிறுவனங்கள் காரணமாக இருந்துள்ளன. (ரொடீசியா (தற்போதைய ஜிம்பாப்வே), மற்றும் தென்னாப்பிரிக்கா) பிரிட்டிஷ் ப.வ.நி. எப்போதுமே தென்னாப்பிரிக்க முதலாளிகளுடன் நெருக்கமான உறவை வைத்துக்கொண்டிருந்தனர். ரோத்ஸ்சைல்ட் - ஒப்பன்ஹீமர் பிரிட்டிஷ் - தென்அமெரிக்க ப.வ.நி. கூட்டுறவுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அரசியல் தலையீட்டை பொறுத்த மட்டில் அமெரிக்க ப.வ.நி. யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல. மத்திய கிழக்கு நாடுகளின் எண்ணை கிணறுகளை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவர அமெரிக்கா படாதபாடு பட்டது. ஏனெனில் அருமையான எண்ணை வளம், மலிவான கூலிப் படை ஆகிய இரண்டும் அமெரிக்காவை கவர்ந்தன. மோபில் ஆயில் சவூதி, குவைத், இராக், பஹ்ரைன் என அப்பகுதி முழுவதையும் ஆக்கிரமித்தது. அந்த நாட்டு அரசுகளை தன்பக்கம் ஈர்க்க பல்வேறு தந்திரங்களை அமெரிக்க நிறுவனங்கள்



படிப்பகம்

www.padippakam.com

கையாண்டன. 1972ம் ஆண்டிற்குள் எண்ணை உற்பத்தி, விற்பனையில் அமெரிக்காவின் ஆதிக்கம் வலுவடைந்துவிட்டது. அதேபோல, கொலம்பியாவின் ஒருபகுதியாக இருந்த பனாமாவை, ரூஸ்வெல்ட் அரசு மிரட்டியது எதற்காக? தென் அமெரிக்காவில் அமெரிக்க ப.வ.நிறுவனங்களின் ஆதிக்கத்தை வலுப்படுத்துவதற்காக என்பது அமெரிக்கா - பனாமா பிரச்சனை அறிந்த அனைவருக்கும் தெரிந்ததே. வெனிசுலாவை ஸ்டாண்டர்டு ஆயில் நிறுவனம் சுரண்டியதை, யாரும் மறக்க இயலாது. அமெரிக்காவின் யுனைடெட் ப்ரூட் தென் அமெரிக்காவில் தோட்டத்தொழிலில் ஈடுபடுத்த, இளம் - சிறுவர் சிறுமியரை வாங்கி விற்பதுண்டு. ஆனால்; 'சாத்தான் வேதம் ஓதுகிறது' என்பதற்கு ஏற்ப குழந்தை தொழிலாளர் முறையை அமெரிக்கா கண்டிப்பது வேடிக்கைதான்.

ப.வ.நிறுவனங்கள், இயற்கை வளம் கொழிக்கும் நாடுகளை கவனத்தில் கொண்டு, அங்கே காலூன்ற ஆரம்பிக்கின்றன. பிரேசில் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். 1961ல் 'சாம் அண்ணன்' (Brother Sam) என்பதை முட்டாள்தினமான ஏப்ரல் 1ம் தேதி திட்டமிட்டு, பிரேசிலை தனது பிடிக்குள் கொண்டு வந்தது. இதில் அமெரிக்க ப.வ.நிறுவனங்களின் பங்கும் அடங்கும். பிரேசில் இயற்கை வளம் நிறைந்த நாடு. தங்களுக்கு சாதகமான அரசு அமைந்தவுடன் பணத்தை வாரி இறைத்தது. அமெரிக்க ப.வ.நி.100 சதவீதம் டயர் கம்பெனிகள், 90 சதவீதம் சிமெண்ட் ஆலைகள், 80 சதவீதம் மருந்து தொழில், 50 சதவீதம் இரசாயனத் தொழில் கிட்டதட்ட பிரேசிலின் கேந்திர தொழில் அமெரிக்க நிறுவனங்களிடம் இருந்தது. முதலீட்டை வளரும் நாடுகளில் அதிகரிக்க ப.வ.நி. மேற்கொள்ளும் நடவடிக்கைகள் : 1) தொழிற்சங்கங்களை அரசின் கட்டுப்பாட்டில் கொண்டுவருதல், 2) வேலை நிறுத்தங்களுக்கு தடை விதித்தல், 3) கூலி உயர்வை தடை செய்தல், 4) தொழிலாளர் சுதந்திரத்தை பறித்தல், பிரேசில் பின்பற்றிய அதே கொள்கை 1971ல் பொலிவியாவிலும் 1973ல் சிலியாவிலும், 1973ல் உருகுவேயிலும் அமெரிக்காவால் கடைப்பிடிக்கப்பட்டது. இந்த அடக்குமுறைகள் மூலம் பயனடைந்தது ப.வ. நிறுவனங்கள்தான். தங்கள் முதலீட்டை அதிகரித்து, லாபத்தை அதிகரித்து, வாணிபத்தை விஸ்தரிக்க முடிந்தது.

ப.வ.நிறுவனங்களின் பொருளாதார செல்வாக்கை கணக்கிடும்போது, மூன்று முக்கிய அம்சங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

1. ப.வ.நிறுவனம் எவ்வளவு பெரியது என்பதும், எத்தனை நாடுகளில் அதன் துணை நிறுவனங்கள் உள்ளன என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக ஐ.பி.எம் 127 நாடுகளில் செயல்படுகிறது. 13 நாடுகளில் 23 கிளைகளும், 8 நாடுகளில் வளர்ச்சிக்கான ஆய்வுக் கூடங்களும் செயல்படுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

2. தாய் நிறுவனங்கள் செயல்படும் நாடுகளின் செல்வாக்கு உலக அளவில் எவ்வாறு உள்ளது என்பது பரிசீலிக்கப்படும். (உ.ம்) உலக அளவில் அமெரிக்க, ஜப்பானிய நிறுவனங்களின் ஆதிக்கம் உலக பொருளாதாரத்தில் இந்த இருநாடுகளும் செல்வாக்கு மிகுந்தவை.

15 ப.வ.நிறுவனங்கள்
20 அத்தியாவசியப்
பொருட்களின் சந்தையை
கட்டுப்படுத்துகின்றன.
90 சதவீத கோதுமை
வாணிகம், 70 சதவீதம்
அரிசி வாணிகம்,
80 சதவீதம் தேயிலை, காபி,
90 சதவீதம் தேக்குமரம்
மற்றும் புகையிலை, 80
சதவீதம் செம்பு, 60
சதவீதம் எண்ணை, 90
சதவீதம் இரும்பு, 90
சதவீதம் பைன் ஆப்பிள்
வாணிகம்.
— *'தி எக்னாமிஸ்ட்'*

3. எந்தெந்த பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன, எந்தெந்த ஏரியாக்களில் விற்பனை உரிமை கிட்டியுள்ளது என்பதும் ப.வ. நிறுவனங்களின் பொருளாதார, அரசியல் செல்வாக்கை கணக்கிட பயன்படுகிறது.

இவைதவிர, மொத்த உற்பத்தியில் குறிப்பிட்ட நிறுவனத்தின் பங்கு எவ்வளவு என்பதும் பார்க்கப்பட வேண்டும். ஏனெனில் ப.வ.நி. ஆதிக்கம் செலுத்தும் துறைகள் பெரும்பாலும் ஒரு சில உற்பத்தியாளர்கள் மட்டுமே செயல்படும் துறைகளாக உள்ளன. (உ.ம்) (அ) ஐ.பி.எம். உலக கம்ப்யூட்டர் சந்தையில் 40 சதவீதம் 3) ஏழு சகோதரிகள் என அழைக்கப்படும் எண்ணெய் கம்பெனிகள் உலக எண்ணை சந்தையில் 2/3 பங்கு ஆதிக்கம். இ) போர்டு, ஜிஎம் உலக மோட்டார் சந்தையில் 50 சதவீதம்.

## அணுகுமுறை

அனைத்து ப.வ. நிறுவனங்களின் அணுகுமுறையும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. நோக்கம் மட்டுமே ஒன்றாக உள்ளது. அமெரிக்க ப.வ. நிறுவனங்களில் கிளைகள் செயல்பாட்டை 100 சதவீதம் தலைமையகம் கட்டுப்படுத்துகிறது. இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு 'போர்டு' நிறுவனம். உள்நாட்டு கிளைகளும் சரி, வெளிநாடுகளிலுள்ள துணை நிறுவனங்களும் சரி, தாய் நிறுவனத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

ஐரோப்பிய, ஜப்பானிய நிறுவனங்கள் 100 சதவீதம் கட்டுப்பாடு கிடையாது. ஐரோப்பிய நிறுவனங்களின் செயல்பாடு 'தாய்-மகள்' உறவு போன்றது. துணை நிறுவனங்கள் சுதந்திரமாக செயல்பட இயலும். அவற்றில் பணிபுரியும் தொழில்நுட்ப நிபுணர்களும் சுதந்திரமாக செயல்


படிப்பகம்

www.padippakam.com

பட முடியும். ஆனால், தற்போது நிலைமை மாறிவருகிறது. ஜப்பானிய நிறுவனங்கள் முன்பெல்லாம் கிளை களை தன்னிச்சையாக செயல்பட அனுமதித்தன. தற்போது, அன்றாட நடவடிக்கைகளில் கூட தலைமை அலுவலகத்தின் தலையீடு உள்ளது.

சந்தையை தன்வசப்படுத்த கையாளும் தந்திரங்களும் நாட்டிற்கு நாடு வேறுபடுகிறது. அமெரிக்க நிறுவனங்கள் 'இங்க் பிளாட்' (Ink-blot Strategy) தந்திரத்தை பின்பற்றியது. அதாவது, பகுதிவாரியாக நிறுவ னத்தை விரிவுபடுத்தி, கட்டமைப் பையும் விரிவாக்குவதாகும்.

முதல்கட்டமாக உபரியை ஏற்று மதி செய்யும். தொடர்ந்து இறக்குமதி நாடுகளின் சந்தையை விரிவுபடுத் தும் முயற்சிகளை மேற்கொண்டு கிளை நிறுவனங்களை அமைக்கும். அதைத்தொடர்ந்து முழுவதுமாக அந்நாட்டிலேயே மொத்த உற்பத் தியை (அதன் தேவைக்கேற்ப) செய் யுமளவு விரிவுபடுத்தப்படும். இப் படி சிறிது சிறிதாக, ஒவ்வொரு கட்ட மாக, ஒவ்வொரு நாட்டிலும், வேரூன்றி, பரவி, ஆதிக்கம் செலுத்தும்.

*கல்ஃப் நிறுவனத்துடன் இணைந்தபின்னர் செவ் ரான், தன்னிடம் வேலை செய்யும் தொழிலாளர் எண்ணிக்கையை 50 சதவீதம் குறைத்துள்ளது. 11 ஆண்டுகாலத்தில் ஜெனரல் எலக்ட்ரிக் 1 லட்சம் ஊழி யர்களை நீக்கியுள்ளது. ஆனால், அதன் விற்பனை 27 பில்லியன் டாலர்களிலிருந்து 62 பில்லியன் டாலர்களாக இதேகாலகட்டத்தில் உயர்ந்துள்ளது. 2005ம் ஆண்டில் முதலாளித்துவ நாட்டுத் தொழிலா ளர்களில் 5ல் ஒருவர் 'தினக் கூலித் தொழிலாளி களாக' மாறிவிடுவர்.*

- (Downsing) *தி எக்னாமிஸ்ட்*

## இந்தியாவில் ப.வ. நிறுவனங்களின் ஆதிக்கம்

1950க்குப் பிறகு ப.வ. நிறுவனங் கள் பலவடிவங்களில் இந்தியாவில் வேரூன்ற ஆரம்பித்தன. இந்தியா வில் செயல்படும் ம.வ. நிறுவனங் களில் 3/4 அமெரிக்க, பிரிட்டிஷ் நிறுவனங்கள்தாம். சமீபகாலமாக ஜப்பானிய நிறுவனங்கள் பெருமள வில் நுழைந்துள்ளன. பிரிட்டனுக்கு இந்தியா காலனியாக இருந்ததால் அந்நாட்டு நிறுவனங்களும் செயல் படுகின்றன. ஆரம்பத்தில் ஒரு குறிப்

www.padippakam.com

பிட்ட துறையில் செயல்பட ஆரம்பித்து, பல துறைகளில் இன்று இவை புகுந்துவிட்டன. எடுத்துக்காட்டாக, ஐ.டி.சி. இது புகையிலையிலிருந்து தொடங்கி, ஆடம்பர ஹோட்டல்களை நடத்துமளவு இன்று வளர்ந்துள்ளது. (எஸ்.கே.கோயல்)

1970களில் ப.வ. நிறுவனங்களுக்கு நெருக்கடி ஏற்பட்டது. மூன்றாம் உலக நாடுகள் இந்நிறுவனங்களுக்கெதிராக போர்கொடி தூக்கின. உள்நாட்டு தொழில்களுக்கு உலை வைத்து, தங்கள் நலனை பாதுகாத்துக்கொள்ளும் இவற்றிற்கு இந்தியாவிலுள்ள ஜனநாயக, சுயாதிபத்தியத்தை விரும்பும், ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் சக்திகள் கடுமையான எதிர்ப்பை தொடர்ந்து தெரிவித்தன. இன்றும் அந்த எதிர்ப்பு தொடருகிறது. எதிர்ப்புக்கான காரணங்கள் யாவை?

1. மனித தன்மையற்ற, சமூக நோக்கங்கள் ஏதுமின்றி அப்பட்டமான சுய நலத்துடன் செயல்படுகின்றன.

2. எந்தவிதமான கட்டுப்பாட்டிற்குள்ளும் வராமல் செயல்படுகின்ற தன்மை.

3. முறையான பதிவு செய்யப்படுவதில்லை.

4. ஏராளமான வரிச்சலுகைகள் காரணமாக உள்நாட்டு தொழில்கள் நாசமடைகின்றன.

5. இயற்கை வளங்களை கட்டுப்பாடின்றி சுரண்டி உலகம் மாசுபட காரணமாக இருக்கின்றன. தங்கள் தாய்நாட்டில் மாசு கட்டுப்பாட்டை வலியுறுத்தும் இவை, மூன்றாம் உலக நாடுகளை குப்பை கூடைகளாகவே கருதுகின்றன.

6. தங்கள் தாய் நிறுவனங்களின் கொள்கைகளை மற்ற நாடுகளின் மீது திணிக்கின்றன. பெரும்பாலும் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு எதிராக அவர்கள் கொள்கைகள் அமைகின்றன.

எதிர்ப்புகளை சமாளிக்க சில மாற்றங்களை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ப.வ.நி. தள்ளப்படுகின்றன. இந்தியாவில் எதிர்ப்பு ஏற்பட்ட போது, 'இந்தியமயமாதல்' என்ற புதிய தந்திரத்தை கையாண்டன. இந்தியமயமாதலால் ஏதேனும் நன்மை உண்டா என்ற கேள்வி எழ்லாம். பாண்ட்ஸ் இந்தியா லிமிடெட் இந்தியமயமானதால் என்ன ஆகியது என பார்ப்போம்.

செஸ்ப்ரோ பாண்ட்ஸ் என்ற அமெரிக்க ப.வ. நிறுவனம் தனது கிளையை 1947ல் இந்தியாவில் துவக்கியது. அப்போது பாண்ட்ஸ் ட்ரீம் பிளவர், டால்க், வானிஹிங் க்ரீம், கோல்ட் கிரீம் வாசலைன், ஹேர் டானிக், க்யூடெக்ஸ் என ஏராளமான பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்து வந்தது. 1977ம் ஆண்டிற்குள் 35000 விநியோகஸ்தர்களைக் கொண்ட நிறுவனமாக வளர்ந்தது. 1977ம் ஆண்டு, ஜூன் 30ம்தேதி இந்திய கிளை இந்தியமயமாகியது. அப்போது தனது அறிக்கையில் "30 ஆண்டுகள் இந்தியப் பெண்களை அழகுராணிகளாக மாற்றும் உன்னத பணியை செய்துள்ளோம்" என பறை



படிப்பகம்

www.padippakam.com

சாற்றியது. பெயர் மட்டும் மாறியதே தவிர, வேறு எந்த மாற்றமும் செய்யப் படவில்லை. 4 ஆண்டுகளுக்கொரு முறை கம்பெனியை இரட்டிப்பு மடங் காக்கும் வகையில் பிரமிக்கத்தக்க வளர்ச்சி அடைந்தது. தாய் நிறுவ னத்திற்கு அனுப்பும் லாபத்தின் அளவு பலமடங்கு பெருகியுள்ளது. நியூயார்க்கிலுள்ள தாய் நிறுவனத் திற்கு அனுப்பும் லாபத்தொகை நம் மிடமே இருக்குமெனில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 4 லட்சம் குழந்தைகளுக்கு, 30 ஆண்டு களுக்கு தினமும் 1/2 லிட்டர் பால் கொடுக்க இயலும் என கணிக்கப் பட்டுள்ளது. (தலீப் சாமி) என்றால், எத்தனை நிறுவனங்கள், எவ்வளவு கோடி ரூபாய்களை லாபத்தின் பங் காக தாய் நிறுவனங்களுக்கு அனுப்பு கின்றன? அந்த பணத்தைக் கொண்டு எத்தனை கோடி மக்களுக்கு கல்வி, ஆரோக்கியம் அளிக்க முடியும் என கணக்கிட்டால் எந்தவொரு ப.வ. நிறு வனத்தையும் நாம் அனுமதிக்க மாட்டோம்.

இந்தியமாதலால் நிர்வாகிகள் இந் தியர்கள் என்பதைத் தவிர அடிப் படை கொள்கைகளில் எந்த மாற்ற மும் இல்லை.

இந்தியமாதலால், இந்தியாவின் செல்வம் மேலும், மேலும் அன்னிய நாடுகளுக்குச் செல்வதால் பன் னாட்டு செலுத்து நிலையில் (Balance of Payments) பல பிரச்சனைகள் ஏற் படுகின்றன.

வளர்ந்துள்ள நாடுகளின் தொழில் நுட்ப அறிவை பயன்படுத்தி, அதை வளரும் நாடுகளுக்கு அளிப்பதாக வும், உற்பத்திச் செலவை குறைத்து, லாபம் ஈட்ட வழி வகுப்பதாகவும் ப.வ.நி. பீற்றிக்கொள்கின்றன. ஆனால், நடைமுறையில் இந்தியாவில், பல தொழில்களில், அவர்கள் நாட்டில் காலாவதியான தொழில்நுணுக்கம், அதிக விலைக்கு இங்கே திணிக்கப் பட்டன என்பதுதான் யதார்த்தம்.

இந்தியமயமாதலால், ப.வ.நி. ஏராளமான வரிச்சலுகைகளைப் பெறுகின்றன. பதிவு செய்வதி லிருந்து ஆரம்பித்து, ஏராளமான சலுகைகள். இவை உள்நாட்டு நிறு வனங்களுக்கு கிடையாது. உதாரண மாக, போர்டு நிறுவனம் சென்னை யில் தனது கிளையை நிறுவியபோது, தமிழக அரசுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தில், "மூன்று நிமிடங் களுக்கு மேல் மின்தடை கூடாது. மின்சாரம், தண்ணீர் ஆகியவை தங்குதடையின்றி சப்ளை செய்ய வேண்டுமென்றும், 3 நிமிடங்களுக்கு மேல் தடை ஏற்பட்டால் அரசு நஷ்ட ஈடு தர வேண்டும் என்றும் குறிப்பி டப்பட்டுள்ளது. தமிழக அரசும் ஏற் றுக்கொண்டு கையெழுத்திட்டுள்ளது. இதுபோன்ற எந்த நிபந்தனையை யும், உள்நாட்டு நிறுவனங்கள் விதிக்க இயலாது என்பது குறிப்பிடத்தக்கது.

ப.வ.நிறுவனங்கள் மலிவான உழைப்பை பயன்படுத்தி, உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை குறைந்த விலையில் குவிக்கும்போது, உள் நாட்டுத் தொழில்கள் நசுக்கப்படு கின்றன. இந்தியாவில் எண்பதுக்



படிப்பகம்

www.padippakam.com

ளில் துவக்கப்பட்டு, தொண்ணூறுக ளில் தீவிரமாக அமுல்படுத்தப்பட்ட தாராளமயமாதல் கொள்கையின் விளைவாக இந்தியத் தொழில் கள் பல நாசமடைந்துள்ளன. இந்திய சந் தைகளில் ஆஸ்திரேலிய ஆப்பிள் களும், அமெரிக்க கோழி இறைச்சி யும் கிடைக்கிறது.

இந்தியாவில் ப.வ.நி. புதிய பணக் கார வர்க்கத்தை உருவாக்கியுள்ளது என்றால் மிகையாகாது. இந்நிறுவ னங்களில் பணிபுரிவோருக்கு, லட் சக்கணக்கில் சம்பளமும், விடு முறையை வெளிநாடுகளில் குடும் பத்துடன் கழிக்கும் வசதியும் கிட்டு கிறது. ஆனால், தனது தாய்நாட்டு நல னுக்கும், தான் வேலை செய்கின்ற நிறுவனத்தின் நலனுக்கும் முரண் பாடு ஏற்படுகையில், நிறுவனத்தின் நலனுக்கு முன்னுரிமை அளித்து விசுவாசமாக இருக்க வேண்டுமே தவிர, தாய்நாட்டுக்கு விசுவாசமாக இருக்கக்கூடாது.

ப.வ.நி. இந்தியாவில் வேலை வாய்ப்புகளை உருவாக்கவில்லை. வளங்களை சுரண்டும் முக்கிய கருவியாக இருந்துள்ளது. மத்தியில் ஆட்சி செய்யும் பாஜக அரசு ஒரு புறம் 'சுதேசி ஜாக்ரான் மஞ்ச்' என்ற அமைப்பை நடத்திக்கொண்டு, மறு புறம், அன்னிய நிறுவனங்களுக்கு ரத்தின கம்பளம் விரிக்கிறது. மராட் டிய மாநிலத்திலுள்ள தான்சி ஏரியில் காலம்காலமாக அங்கு வசிக்கும் ஆதிவாசி மக்களை தண்ணீர் எடுக்க தடைவிதித்துள்ள அரசு கோகோ கோலா கம்பெனிக்கு அனுமதி அளிக் கிறது. நம்நாட்டு தண்ணீரை எடுத்து புட்டிகளில் அடைத்து, அக்வா, பீனா, கின்லி என்ற பெயர்களில் பெப்சியும், கோக் நிறுவனமும் விற்கின்ற கொடுமை, சுயாதிபத்தியத்தை குழி தோண்டி புதைக்கவே உதவும்.

ஏகாதிபத்தியத்திற்கு வலு சேர்க் கும் ப.வ. நிறுவனங்களை செயலி ழக்க வைக்க வலுவான இயக்கம் தேவை. இரண்டாம் உலகப்போரின் போது இங்கிலாந்து பிரதமர் வின்ஸ் டன் சர்ச்சில் கூறினார் : 'எதிரிகளை ஒடுக்க அனைவரும் ஒன்று சேருங் கள். ஆண்கள், பெண்கள், இளைஞர் கள், தொழிலாளிகள், விவசாயிகள், மாணவர்கள் அனைவரும் அணிதிர ளுங்கள்." அதுபோல நமது நாட்டின் சுயாதிபத்தியத்தை பாதுகாக்க பரந்த, அனைத்து பகுதி மக்களையும் ஒருங் கிணைக்கும் வலுவான இயக்கம் தேவை. அதிலும் குறிப்பாக மார்க்சி யத்தில் நம்பிக்கை கொண்ட அனை வரும் நம் நாட்டை பகாசுர நிறுவனங் களின் பிடியிலிருந்து காப்பாற்ற போராட வேண்டும். வளரும் நாடுக ளின் ஒற்றுமை இதற்கு மிகவும் அவ சியம். ஒரு நூற்றாண்டு முடிந்து, மற் றொரு நூற்றாண்டு வந்துவிட்டது. ஆனால், ப.வ. நிறுவனங்களின் ஆதிக்கம் குறையவில்லை. நமது எதிர்கால சந்ததிகள், வளமான, ஆரோக்கியமான இந்தியாவில் சுதந் திரமாக வாழ்வதற்கு ஏற்ற சமுதா யத்தை உருவாக்கும் கடமை நமக்கு உள்ளது என்பதை செயல்படுத்து வதே இன்று நம்முன் உள்ள பிரதான பணியாகும்.



படிப்பகம்


www.padippakam.com




## பொருளின் தோற்றம்

பிரபஞ்ச வெளியில் நட்சத்திரங்கள் தோன்றின. அவை தோன்றிமாறும் விதம் மிகவும் விந்தையானது. இவற்றின் வாழ்க்கை மிகப்பெரிய வாயுப் படலத்தில் துவங்கியது. சூழ்நிலை மாற்றத்தால் வாயுப்படலம் சுருங்கத் தொடங்கியது. இதை விஞ்ஞானிகள் நட்சத்திர மூலம் (PROTO STAR) என்பர்.

அந்த வாயுப் படலம் சுருங்கும் போது ஈர்ப்பு சக்தி பிறக்கிறது. அதனால் ஆற்றல் வெளியாகிறது. உள்ளே வெப்பநிலையை அதிகரிக்கச் செய்கிறது. நட்சத்திர மூலத்தின் உள் அழுத்தமும், உள் வெப்பமும் ஏராளமான அளவுக்கு உயர்கின்றன. இந்த வெப்பம் பல மில்லியன் டிகிரிகள் என்ற அளவினை அடையும்போது அணுக் கருவினைகள் தொடங்குகின்றன. ஆற்றல் பல மடங்கு பெருகுகிறது. உள் அழுத்தம் மேலும் அதிகமாகிறது. ஈர்ப்பு விசை வாயுச் சுருக்கத்தை எதிர்க்கிறது. அப்போதுதான் நட்சத்திரம் தோன்றுகிறது.



நட்சத்திரம் முதலில் தன்னிடமுள்ள ஹைட்ரஜனை எரித்து ஹீலியமாக மாற்றத் தொடங்குகிறது. நான்கு ஹைட்ரஜன் அணுக்கள் சேர்ந்து ஒரு ஹீலியம் அணு தோன்றுகிறது. பொருள் ஆற்றலாய் மாறும் விந்தை பிறக்கிறது. இந்த மாற்றம் ஐன்ஸ்டீன் கண்டுபிடித்த $E = MC^2$ என்ற விதிக்குட்பட்டு நிகழ்கிறது.

**"உலகம் தீயில் அவியும் என்பார்**
**உறையும் பனியில் முடியும் என்பார்"**

என்று ஆங்கிலக் கவிஞன் ராபர்ட் பிராஸ்ட் கவிதை பாடினான்.

எல்லா நட்சத்திரங்களுக்கும் ஒரு வாழ்வும், அழிவும் உண்டு. அப்

எஸ்.ஏ.பெருமாள்



படிப்பகம்

www.padippakam.com

போது நட்சத்திரம் வெடித்து வாண வேடிக்கை நடக்கும். நட்சத்திரத்தில் ஹைட்ரஜன் தீர்ந்து போகும். அதனால் ஆற்றல் உற்பத்தி நின்று விடும். நட்சத்திரம் அல்லது கிரகத்தின் உள்பகுதி நொறுங்கிச் சுருங்கும். வெப்பம் பல மடங்கு அதிகரிக்கும். நட்சத்திரத்தின் வெளிப்பகுதி பூதாகரமாக விரிவடைந்து செம் பூதமாக மாறும். பின்பு அந்தக் கூடு வெடித்து வாண வேடிக்கை நடக்கும். இதையே விஞ்ஞானிகள் சூப்பர் நோவா என்று அழைக்கின்றனர்.

இவ்வாறு பெரிய நட்சத்திரம் வெடித்த பின்பு அது ஒரு குள்ள நட்சத்திரமாக மாறி நிற்கும். சூரியனுக்கருகில் அத்தகைய இருபது குள்ளர்கள் உள்ளனர். சூரியனுக்கும் இன்னும் ஐநூறு கோடி ஆண்டுகளே ஆயுள் என்று சில விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். சூரியனின் அந்த முடிவு நாளில் பூமி தீயில் அவியும் அல்லது பனியில் உறையும்.

ஹைட்ரஜன் அணுக்கள் சேர்ந்து ஹீலியம் உருவானது. ஹீலிய அணுக்கருக்கள் பிணைந்து கார்பன் மற்றும் ஆக்சிஜன் அணுக்கள் பிறக்கின்றன. இப்படியே படிப்படியாய் இரும்பும் மற்ற உலோகங்களும் பிறக்கின்றன. அமோனியா போன்ற வாயுக்களும், பலவகை ரசாயனப் பொருள்களும் தோன்றின. கோடிக்கணக்கான ஆண்டுகளின் பரிணாமத்தில் பொருள்களில் வளர்ச்சியும், மாற்றங்களும் ஏற்பட்டன. கரி வைரமானது, சுண்ணாம்புக்கல் சலவைக் கல் ஆனது.

உயிர் என்றால் என்ன? அது தோன்றியது எப்படி? இதை உயிரினங்களின் முதல் பெரும் உயிரினமான மனிதன் அவசியம் அறிந்து கொள்ள வேண்டும். தனக்கும் மற்ற உயிரினங்களுக்கும் உள்ள தொடர்பினை அப்போதுதான் மனிதன் உணர முடியும். இன வேற்றுமைகளும், சாதி மத வெறிகளும் நிறைந்த இக்காலத்தில் உயிரின் தோற்றம் பற்றி நன்கு உணர வேண்டும். அப்போதுதான் சகோதரத்துவம், ஒற்றுமை, அமைதி பிறக்கும்.

உயிரின் தோற்றம் பற்றி மனிதன் சிந்திக்க ஆரம்பித்த காலம் முதலாகவே சிந்தித்து வந்தான். மனித அறிவு வளர்ச்சியின் ஒவ்வொரு காலத்திலும் இந்தக் கேள்விக்கும் பல விடைகள் தரப்பட்டுள்ளன. அவை இரு பிரிவான முரண்பட்ட தத்துவ ஞான அடிப்படைகளைக் கொண்டதாகும். அவை கருத்து முதல்வாதம், பொருள் முதல் வாதமாகும்.

பூமியில் இருவகைப் பொருட்கள் உள்ளன. அவை உயிருள்ள பொருள்கள், உயிரற்ற பொருள்கள் ஆகும். கருத்து முதல்வாதம் அஞ்ஞானப் பார்வையும், பொருள் முதல்வாதம் விஞ்ஞானப் பார்வையும் கொண்டவையாகும். உயிரற்ற பொருள்களிலேயிருந்துதான் உயிர் தோன்றியது என்று விஞ்



படிப்பகம்

www.padippakam.com

ஞானம் கூறுகிறது. அந்த விஞ் ஞானிகள் ஆதாரங்களுடன் நிறுவி யுள்ளனர். உயிர் என்பது பொருள் மயமானது என்பதை நாம் ஏற்றுக் கொண்டால் உயிரின் இயக் கத்தையும், அந்த இயக்கத்தைக் கட் டுப்படுத்தும் விதிகளையும் கண்டு பிடிக்க முடியும். ஆனால் உயிர் என்பது பொருட்களின் சேர்மான மல்ல, அதை மனிதன் அறிய முடி யாது என்றால் அதை நம்மால் கட் டுப்படுத்த முடியாது. உயிரின் இயக்கத்தை நாம் ஒதுங்கி நின்று தான் காணமுடியும். இது கருத்து முதல் வாதமாகும்.

கருத்து முதல்வாதிகள் உயிர் என்பது பொருளற்ற ஒரு சூட்சுமம் என்று ஆதிமுதல் கூறி வருகிறார் கள். ஆன்மா, பரமாத்மா, தெய்வ சித்தம், உயிராற்றல் என்று பல பெயர்களில் கூறுகிறார்கள். அவர் கள் கருத்துப்படி சடப் பொருளில் உயிர் புகுந்தால் அது இயங்கு கிறது. உயிர் பிரிந்தால் அது வெறும் கூடு ஆகிறது. உயிர்தான் சடப் பொருளுக்கு உரு வத்தையும், இயக்கத்தையும் அளிக் கிறதேதவிர பொருளுக்கு எவ்வித முக்கியத்துவ மும் இல்லை என்பதே கருத்து முதல்வாதமாகும். உயிர் பற்றி மதங்களின் கருத்து இதுதான்.

மதங்களுக்கிடையே பல கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் உயிர் பற்றி ஒரேவிதமான கருத்துதான் கொண்டுள்ளனர். "உயிர் என்பது கடவுளின் படைப்பு; கடவுளின் விருப்பமின்றி ஓரணுவும் அசை யாது; உயிரையும் அதன் இயக்கத் தையும் மனிதரால் அறிய முடி யாது. அதை அடக்கியாளவும் முடியாது. ஆக்குவதும், அழிப்பதும் கடவுளால் மட்டுமே முடியும்" என் பதே மதங்களின் பொதுக் கருத் தாகும்.

ஆனால் பொருள் முதல்வாதம் கருத்து முதல் வாத்த்திற்கு நேர் எதி ரான கருத்தை தெரிவிக்கிறது. அது விஞ்ஞான ரீதியில் விடை காண முயல்கிறது. பொருளின் சிறந்த வடி வமே உயிர். அதன் தோற்றமும் அழிவும் இயற்கையின் விதிகளுக்கு உட்பட்டதாகும். இயற்கையை ஆய்வு மூலம் அணுகுதல், உலக அனுபவம், சோதனைகள் மூலமே உயிரின் தோற்றம், உயிரின் தன்மை பற்றி அறிய முடியும். இதுவே பொருள்முதல் வாதக் கருத் தோட்டமாகும். இந்த முறையில் இயற்கையை ஆராய்வது பயனுள் ளது என்று உயிரியல் விஞ்ஞான வளர்ச்சி நமக்கு எடுத்துக் காட்டு கிறது. உயிருள்ள இயற்கையை மனித குலத்தின் நலன்களுக்கேற்ப கட்டுப்படுத்தி மாற்றியமைக்க முடியும். இந்த நம்பிக்கையை சோதனை மற்றும் அனுபவ முறை நமக்குத் தருகிறது.

நெடுங்காலமாக உயிரின் தோற்றம் பற்றி விஞ்ஞானிகளால் சரியாக விடையளிக்க முடியாம லிருந்தது. இது கருத்துமுதல் வாதி களுக்குக் கொண்டாட்டமாக




படிப்பகம்

www.padippakam.com

இருந்தது. அதனால் அவர்கள் "எல்லா உயிர்களும் கடவுளின் படைப்பு என்றனர். ஆதி மனிதர் முதல் இன்றைய மனிதர் வரை ஆண்டவனால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள்" என்றே இன்று வரை கூறுகின்றனர்.

வானத்தையும், சூரியனையும், நட்சத்திரங்களையும், கடலையும், செடிகொடிகளையும், ஜீவராசிகளையும் படைத்த பின்பு கடவுள் ஆணையும், பெண்ணையும் படைத்தார் என்று பைபிள் கூறுகிறது. ஆதி மனிதன் ஆதாமைக் களி



மண்ணிலே செய்து கடவுள் தமது மூச்சை ஊதி ஆன்மாவைக் கொடுத்தார் என்கிறது. இன்றிருப்பதைப் போலவே உயிரினங்கள் ஆதியிலும் இருந்தன என்பதே பொய்யானது. எல்லாம் கோடிக்கணக்கான ஆண்டுகளின் பரிணாம வளர்ச்சியிலே தோன்றியவை.

**பிளேட்டோவும், அரிஸ்டாட்டிலும்**

கிரேக்கத் தத்துவ ஞானியான பிளேட்டோ "பிராணிகளின் உடலிலுள்ள பொருள்களுக்கு உயிரில்லை. ஆன்மா என்ற சக்தி அதனுள் புகுந்தால்தான் அவை உயிருள்ளவையாகின்றன" என்று கூறினார். இதை கிரேக்கப் பொருள் முதல்வாதிகள் சிலர் எதிர்த்தனர். ஆனால் அவர்களது எதிர்வாதம் மக்களின் செவிகளில் ஏறவில்லை. ஏனெனில் பிளேட்டோவின் போதனைகள் அவர்களுடைய தலைகளில் ஏறியிருந்தது. பிளேட்டோவின் சிந்தனைகள் பல நூற்றாண்டுகளாக தத்துவஞானத் துறையில் ஆதிக்கம் செலுத்தியது.

பரிணாமக் கொள்கைத் தத்துவம் என்பது தற்கால ஆராய்ச்சியின் விளைவால் மட்டும் கண்டுபிடிக்கப்படவில்லை. நெடுங்காலமாக தத்துவ ஞானிகள் உயிரினங்களின் தோற்றத்தை விளக்க முயன்றுள்ளனர். கி.மு. நான்காம் நூற்றாண்டிலேயே கிரேக்க தத்துவஞானி அரிஸ்டாட்டில் "உயிரினங்கள் ஒரே நாளில் பொம்மை போல் செய்து வைக்கப்பட்டவையல்ல; அவற்றின் தோற்றம் என்பது படிப்படியாக ஏற்பட்ட நிகழ்ச்சியாகும். அவை தோன்றியது இயற்கைக்குப் புறம்பான சக்திகளினால் அல்ல. சாதாரண பவுதீக, ரசாயன விதிகளின் செயலால் உயிரினங்கள் தோன்றின" என்று கூறினார். அனாக்சி மாண்டர் (கி.மு. 611 - 547), எம்பிடாகிள்ஸ் (கி.மு. 495 - 435), அரிஸ்டாட்டில் (கி.மு. 384 - 322) ஆகிய கிரேக்க அறிஞர்கள் உயிரினங்களின் தோற்றம்



படிப்பகம்

www.padippakam.com

பற்றி விஞ்ஞான ரீதியில் விளக்க முயன்றுள்ளனர்.

இந்தியாவிலும் அதே காலகட்டத்தில் சாங்கிய தத்துவவாதிகள் பரிணாம தத்துவம் பற்றி விளக்கினார்கள். புல்லாகிப் பூண்டாகி மனிதன் பரிணமித்த விதத்தை தசாவதாரமாக விளக்கினர். தங்கள் தத்துவ ஞானத்தை சாமான்ய மக்களும் புரிந்து கொள்வதற்காக கொலு வைத்தனர். மீன், ஆமை, பன்றி போன்ற அவதாரங்களைக் கடந்து பாதி மனிதனும் பாதி மிருகமுமாய் (நரசிம்மம்) பரிணமித்த கதை கொலுவில் வைக்கப்படும். ஒன்பதாவது அவதாரமாக மனிதன் இருக்கும். பத்தாவது அவதாரம் குதிரை மீது (கல்கி) வருமென்றும் கூறினர். கல்கி என்பது குதிரை சக்தியைக் குறிக்கும் (HORSE POWER) சொல் என்று சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சாங்கியம் அழிக்கப்பட்டு அனைத்தையும் இந்து மதம் தனதாக்கிக் கொண்டது. விஞ்ஞானத்தைப் பரப்பிய கொலுவும், தசாவதாரமும் தற்போது அஞ்ஞானத்தைப் பரப்புவதற்குப் பயன்படுகின்றன.

அரிஸ்டாட்டில் உயிர்ப் பிராணிகள் திடீரென்று தோன்றுகின்றன என்று கூறினார். அதை நிரூபிக்க பல உதாரணங்களையும் காட்டினார். அதற்கு கொள்கை ரீதியிலான விளக்கமும் தந்தார். பொருளின் இயங்கும் ஒரு மூலமும், இயங்கா ஒரு மூலமும் சேர்ந்து உயிர்ப் பிராணிகள் உருவானது என்றார். உயிர்ப் பிராணிகளின் உருவம் என்பது ஆத்மாவின் வெளித்தோற்றமே. ஆத்மாதான் உடலை உருவாக்கி அதை உண்மையாக்குகிறது. பொருளுக்கு உயிரில்லை. ஆனால், பொருள் உயிரின் அணைப்பில் ஒரு உருவமாகி ஆத்மாவின் சக்தியால் இயங்கி நிலைக்கிறது. இவை திடீரென தோன்றி நிலைக்கின்றன என்பது



தான் அரிஸ்டாட்டிலின் தத்துவமாகும்.

அரிஸ்டாட்டிலின் நூல்கள் ஐரோப்பாவில் தவறாக மொழி பெயர்க்கப்பட்டன. மதவாதிகள் முதலில் அவரது கருத்துக்கள் அபாயகரமானவை என்று கருதினர். பின்பு தங்கள் மதக் கோட்பாடுகளோடு ஒட்டவைக்க முடியுமென்று கண்டனர். அரிஸ்டாட்டிலை ஏசு கிறிஸ்துவுக்கு முன்னால் தோன்றிய சிறந்த விஞ்ஞானி என்று மதவாதிகள் போற்றினர். அழியாத தெய்வீக ஆவி (பரிசுத்த ஆவி) தான் பொருளுக்கு உயிரளிக்கிறது என்ற அரிஸ்டாட்டிலின் கோட்பாடு தங்களுக்கு ஆதர



படிப்பகம்

வானது என்று மதவாதிகள் கருதி னர். அரிஸ்டாட்டிலின் தத்துவத்தி லிருந்த பொருள் முதல்வாதக் கோட்பாடுகளை ஐரோப்பிய மொழி பெயர்ப்புகளில் மொழி பெயர்க்காமல் விட்டுவிட்டனர்.

இதைப் பற்றி லெனின் "மத வாதிகள் அரிஸ்டாட்டிலின் போத னைகளில் சாரத்தை விட்டுவிட்டு சக்கையைப் போற்றத் தொடங் கினர்" என்று கூறினார்.

தாமஸ் ஆக்யூனாஸ் என்பவர் மத்திய காலத்தில் வாழ்ந்த ஒரு மத போதகர். இவருக்கு தெய்வீக மருத் துவர் என்ற பட்டமும் உண்டு. உயி ரற்ற பொருள்களில் உயிர் புகுந்து கொள்கிறது என்பது அவரது கொள்கை. தெய்வீக ஆவி புகுந் தால் நல்ல உயிரினங்களும், பூதங் கள், பேய்களின் ஆவிகள் புகுந் தால் தீய பிராணிகளும், நீசப் பிரா ணிகளும் தோன்றுகின்றன என் பது அவரது கொள்கையாகும்.

ஆக்யூனாசைப் பின்பற்றி மேலை நாட்டு கிறிஸ்தவ மத அமைப்புகள் "தெய்வீக ஆவி ஏறிக் கொள்வதன் மூலம் உயிரற்ற பொருள்கள் உயிர் பெறும்" என்று பிரச்சாரம் செய்தன. விவசாயப் பயிர்களை அழிக்கும் விட்டில்கள், விஷப் பூச்சிகள், எலிகள் ஆகிய வற்றை சூனியக்காரிகள்தான் படைத்ததாய் நம்பினர். ஏராள மான ஏவல், பில்லி சூனியக்காரி களை மத்தியகால ஆட்சியாளர்கள் தீய ஜீவராசிகளைப் படைத்துப் உயிர்களை அழித்ததாய் குற்றம் சாட்டி தண்டனை வழங் கினர்.

ரஷ்யாவில் டிமிட்ரி நகரில் வாழ்ந்த ஒரு பாதிரியார் "உலகில் நோவா காலத்தில் ஒரு பிரளயம் தோன்றியது. அப்போது நோவா தனது கப்பலில் சுண்டெலி, தேரை, தேள், சேவல், பாச்சா, கொசு முத லிய உயிரினங்களை ஏற்றிச் செல்லவில்லை. ஏனெனில் அவை சேற்றிலும் அழுகும் பொருள்களிலி ருந்தும் தோன்றியவை. அவை யாவும் பிரளயத்தில் அழிந்தன. ஆனால் பின்பு தமது உற்பத்தி ஸ்தானங்களிலிருந்து மீண்டும் தோன்றின" என்று எழுதியுள்ளார்.

பொருள்களின் படிப்படியான பரிணாம வளர்ச்சியுடன் எவ்விதத் தொடர்புமின்றி தெய்வச் செய லால் உயிரினங்கள் இன்றிருப்பது போலவே ஆதியில் தோன்றின என்பதுதான் கிறிஸ்தவ மதக் கருத் தாகும். எல்லா மதங்களுக்கும் இதே கொள் கைதான்.

**விஞ்ஞான வளர்ச்சி**

17ம் நூற்றாண்டில் இயற்கை விஞ்ஞானிகள் இன்று வாழும் உயி ரினங்களை ஆராய்ந்தனர். உயிர் கள் திடீரென்று தோன்றலாம் என் பது உண்மையல்ல என்று நிரூபித் தனர். 19ம் நூற்றாண்டில் சார்லஸ் டார்வினும், ரஷ்ய விஞ்ஞானிக ளான திமிரியசேவ், கோவ லெவ்ஸ்கி சகோதரர்கள், மெச்னி காவ் போன்றவர்களும் புதிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்தினர்.


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

"பைபிளில் கூறப்பட்டுள்ளது போல இன்றுள்ள செடிகொடிகளும், விலங்கினங்களும் இதே வடிவத்தில் லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் இருந்ததில்லை. அவற்றுள் சில தோன்றவேயில்லை. பரிணாம வளர்ச்சி என்ற ஏணியில் மேல்படிகளில் நிற்கும் பிராணிகளும், மனிதனும் திடீரென்று தோன்றிவிடவில்லை. உயிர்களின் வளர்ச்சி என்ற வரலாற்றின் கடைசிக் கட்டத்தில் தோன்றியவையே இவை. இவை கீழ்தட்டிலுள்ள பிராணிகளின் பரிணாம வளர்ச்சியால் தோன்றியவையே. ஒவ்வொரு உயிரினமும் தனக்குக் கீழே உள்ள உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியின் விளைவே ஆகும். இவ்வாறு மிகச்சிறிய ஜீவ அணு முதல் மனிதன் வரை எல்லாம் பரிணாம வளர்ச்சியின் தொடர்ச்சியே" என்று மேற்கண்ட விஞ்ஞானிகள் கூறினர்.

"டூரிங்குக்கு மறுப்பு", "இயற்கையின் இயக்கவியல்" என்ற இரு நூல் களை பிரடெரிக் ஏங்கெல்ஸ் எழுதினார். அவர் காலத்தில் இயற்கை விஞ்ஞான ஆராய்ச்சியின் மூலமாகக் கிடைத்த அறிவைப் பொதுமைப்படுத்தி விஞ்ஞான ரீதியில் உயிரின் தோற்றம் பற்றி ஒரு விளக்கம் அளித்தார். மேலும் அப்பிரச்சனை பற்றி ஆராயும் முறைகளையும் வரையறுத்தார். இயற்கை நிலைமைகளோடு எவ்விதத் தொடர்புமின்றி, தானாகவே உயிர் தோன்ற முடியும் என்ற விஞ்ஞானத்திற்குப் புறம்பான கருத்தை அவர் நிராகரித்தார்.



உயிருள்ள பொருள்களுக்கும், உயிரற்ற பொருள்களுக்கும் தொடர்பு உண்டு என்று கூறினார். உயிர் தோன்றுவதற்கு முன்னால் இயற்கையில், பொருள்கள் பல சிறுசிறு மாறுதல்களடைகிறது. ஒரு குறிப்பிட்ட சரித்திர நிலையில் உயிர் என்னும் புதிய பண்புடைய பொருள்களாக வளர்ச்சியுற்றன என்று விஞ்ஞானச் சான்றுகளின் துணைகொண்டு எங்கல்ஸ் விளக்கினார். ஏங்கெல்ஸ் காட்டிய பாதையில் ஆராய்ச்சிகள் நடத்தி ரஷ்ய விஞ்ஞானிகள் வெற்றி பெற்றனர்.

**சார்லஸ் டார்வின்**

டார்வினின் தகப்பனார் அவரை மருத்துவப் படிப்பில் சேர்த்தார். அதில் அவருக்கு அக்கறையில்லாமல் இருந்ததால் பாதிரியாராக ஆக்க முயற்சித்தார். ஆனால் டார்வின் உயிரியல் ஆய்வில் மட்டுமே ஆர்வம் காட்டினார். எனவே அவர் பீகில் என்ற கப்பலில் உயிரியல் அதிகாரியாகப் பொறுப்பேற்று தனது ஆய்வுகளைத் துவக்கினார்.



படிப்பகம்

www.padippakam.com

இந்தக் கடற் பயணம் ஐந்தாண்டுகள் நீடித்தது. உலகின் பல பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான உயிரினங்களை அவர் சேகரித்தார். உயிர்களின் அமைப்பு, வாழ்க்கை முறை, சூழ்நிலை பொருத்தங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து குறிப்புகளையும், புள்ளி விபரங்களையும் திரட்டினார். டார்வினின் இந்தப் பயணம் அவரது வாழ்க்கையை மட்டுமின்றி மனித குலத்தின் சிந்தனைப் போக்கையும் அடியோடு மாற்றியமைத்துவிட்டது.

ஆரம்பத்தில் டார்வினும் உயிரினங்கள் யாராலோ படைக்கப்பட்டு நிலையாக இருந்து வந்தவை என்று நம்பியவர்தான். ஆனால் ஐந்தாண்டுக் கடற்பயணத்தில் உயிரினங்களின் விசித்திரமான தோற்றம், வேறுபாடுகள், வாழ்க்கை முறை ஆகியவை அவரது பழைய நம்பிக்கையை உலுக்கிவிட்டன. உயிரினங்கள் திடீரென்று தோன்றவில்லை, படிப்படியாகப் பரிணமித்தது என்பதை அவர் தெளிவாகப் புரிந்து கொண்டார். ஆயினும் அவர் அவசரப்படவில்லை. மேலும் பதினெட்டு ஆண்டுகள் தொடர்ந்து ஆய்வு செய்து பின்பு தனது ஆய்வு முடிவுகளை வெளியிட்டார்.

உயிரினங்களின் தோற்றம் பற்றி டார்வினுக்கு முன்பே பல விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர். ஆனால் டார்வின்தான் முதலில் விஞ்ஞான முறையில் ஆயிரக்கணக்கான உதாரணங்களோடும், புள்ளி விபரங்களோடும் விளக்கம் தந்தார், விபரங்களையும் முழுமையான ஆதாரங்களையும் அளித்தார்.

டார்வின் கொள்கையில் ஐந்து முக்கிய அம்சங்கள் உள்ளன.

1. உயிரினங்களிடையே காணப்படும் மிதமிஞ்சிய இனப்பெருக்கம்.
2. இதன் விளைவாக நடைபெறும் வாழ்க்கைப் போராட்டம்
3. உயிரினங்களிடையே உள்ள வேறுபாடுகள்
4. வாழ்க்கைப் போராட்டத்தில் பலமற்றவை தோற்று அழிவதும், பலமிக்கவை தொடர்ந்து வாழ்வதும்
5. வாழ்க்கைப் போராட்டத்தில் துணை நிற்கும் வேறுபாடுகள், அவற்றின் பாரம்பரியம்.

இயற்கையில் உயிருள்ளவை அனைத்தும் தங்கள் இனத்தை விருத்தி செய்து கொள்கின்றன. இது இயற்கை விதி. பல உயிரினங்கள் முட்டையிட்டு குஞ்சு பொரிக்கின்றன. மீதமுள்ளவை குட்டி போட்டுப் பால் கொடுக்கின்றன. தாவரங்கள் சாதாரணமாக விதைகள் மூலம் இனப்பெருக்கம் செய்கின்றன. உயிரினங்களின் இனப்பெருக்கத்தை ஆராய்ந்தால் வியக்கவைக்கிறது. ஒரு ஈ ஒரு தடவைக்கு 100 முதல் 150 முட்டையிடுகிறது. அவை தடையின்றி இனப்பெருக்கமடைந்தால் பதினெட்டு வாரங்களில் ஐம்பது



படிப்பகம்

www.padippakam.com

கோடி ஈக்களாகிவிடும்.

பாக்டீரியா ஒரே நாளில் ஒன்றரை கோடியாகப் பல்கிவிடும். நமது வயிற்றில் வாழும் நாடாப் புழுவிலிருந்து முப்பது ஜோடி முட்டைகள் உருவாகும். ஒரு ஜோடிப் புழுக்கள் இனப்பெருக்கம் செய்தால் பதினைந்து ஆண்டுகளில் நூறு கோடி சந்ததிகள் இருக்கும் என்பது கணக்கு. உலகிலேயே மெதுவாக இனப்பெருக்கம் செய்யும் இனம் யானை. ஆனால் அதுவும் ஒரு ஜோடி யானை 750 ஆண்டுகளில் இரண்டு கோடி இருக்கும் என்று கணக்கிட்டுள்ளனர். மனிதர்களை இஷ்டத்துக்கு விட்டால் ஐம்பது ஆண்டுகளில் இரு மடங்காய் பெருகி விடுவார்கள் என்பது கணக்கு. அப்படி நடந்தால் சில நூறு ஆண்டுகளில் பூமியில் கால் வைக்க இடமிருக்காது.

இனப்பெருக்கத்திற்கேற்ப உயிரினங்கள் இருக்க இடமும், உணவும் மற்றத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்கள் அதிகரிப்பதில்லை. இதனால் உயிர்களிடையே போட்டி ஏற்படுகிறது. இதையே வாழ்க்கைப் போராட்டம் என்று கூறுகிறோம். இந்த வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றியடையும் உயிர்கள் தொடர்ந்து வாழ்கின்றன. இனப்பெருக்கம் அடைகின்றன. தோல்வியடையும் உயிர்கள் அழிகின்றன.

அதேபோல் தாவரங்களிடையேயும் தண்ணீர், உணவு, சூரிய வெளிச்சம் ஆகியவற்றுக்காக பலத்த போட்டி ஏற்படுகிறது. இதிலும் வெற்றி பெற்றவை ஆழமாக வேர்விட்டு உயரமாய் வளர்ந்து பெருகுகின்றன. மற்றவை நசிந்து அழிகின்றன. இவ்வாறு செடிகளிலிருந்து மரமாக வளர்ந்து மாறியவை மிக மிகச் சில மட்டுமே. இன்று நாம் காணும் மரங்கள் வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றியடைந்த பலம் பொருந்திய உயிர்கள்.

ஆனால் மனிதனைப் பற்றிய விசயம் தனி ரகமானது. மனிதனது தேவைகளை இன்று பூர்த்தி செய்வது பணம். எனவே மனிதர்களுக்கிடையே போட்டி என்பது பணம் சம்பாதிப்பதில்தான். உடல் பலம் இருந்தால் மட்டும் இக்காலத்தில் ஒருவன் தொடர்ந்து வாழ முடியாது. இங்கு பணமுள்ளவன்தான் பலசாலி. வாழ்க்கைப் போராட்டத்தில் அவனே வெற்றியடைபவன் என்கிற நிலையிருக்கிறது.

மான்கள் புலிகளுக்கு இரையாகின்றன. புலிகளிடமிருந்து தப்பிப்பிழைக்காவிட்டால் மானினம் அழிந்து மறைந்துவிடும். அதேபோல் பல உயிரினங்களின் நிலை அதுதான். மனிதனைப் பொறுத்தவரை மனிதனை மட்டுமே உணவாகக்கொண்டு வாழும் உயிரினம் ஒன்றுமில்லை. பாம்புகள், காட்டு மிருகங்கள், இடி, மின்னல், மழை, வெள்ளம், கொள்ளைநோய்களில் பலர் சாகின்றனர். பஞ்சம், வறட்சி,



படிப்பகம்

www.padippakam.com

பூகம்பம், போர்களால் மடிபவர்களும் அதிகம்.

எனவே வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றிபெற்று வாழ்வது எளிதான செயல் அல்ல. இப்போராட்டத்தில் பங்கேற்று தோற்று அழியும் இனங்கள் எண்ணற்றவை. வாழச் சக்தியற்றவர்களுக்கு வாழும் உரிமையை இயற்கை அளிப்பதில்லை. இது ஒரு இரக்கமற்ற விதிதான். ஆனால், இயற்கை இவ்வாறு சக்தி



யற்றவைகளை வடிகட்டாவிட்டால் உலகம் அழியும். தனக்குத் தகுதியுண்டு என்று நிரூபித்த உயிரினங்களையே தொடர்ந்து வாழ்வதற்கு இயற்கை தேர்வு செய்கிறது. இதையே டார்வின் இயற்கைத் தேர்வு என்று குறிப்பிட்டுள்ளார்.

"தகுதியானது வளரும், வாழும். தகுதியற்றது அழியும், மறையும். தகுதியானது பலவீனமானதாக இருந்தாலும் வளர்ந்தே தீரும்; வெல்லற்கரியதாகும். தகுதியற்றது பலமானதாயிருந்தாலும் அழிந்தே தீரும்; மறைந்துவிடும்" என்பது டார்வினிசக் கோட்பாடு ஆகும். பலம் மிகுந்த டைனோசர்கள் அழிந்து மறைந்துவிட்டன.

**லமார்க்**

லமார்க் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர். டார்வினுக்கு முன்பாகவே பரிணாம தத்துவத்தை விளக்க முயன்றவர். உயிரியல் (BIOLOGY) என்ற சொல்லை முதலில் உபயோகித்தவர். இவருக்கு முன்பிருந்த விஞ்ஞானிகள் பரிணாமம் ஒரு ஏணியைப் போன்றது என்று நம்பினர். உயிரினங்கள் ஏணிப்படிகள் போல ஒன்றோடொன்று தொடர்பில்லாமல் தனியே இருப்பதில்லை. மாறாக, ஒரு மரத்திலிருந்து கிளைகள் பிரிவதைப்போல ஒன்றிலிருந்து ஒன்றாகப்பிரிகின்றன. ஆகவே ஒவ்வொரு உயிரினமும் தனது தாயினத்துடன் தொடர்புடையது மட்டுமல்ல, மற்ற கிளை இனங்களோடும் உறவுள்ளது என்றார். இது ஒரு முக்கியமான விளக்கமாகும்.

லமார்க்கின் கொள்கையில் இரு முக்கிய அம்சங்கள் உள்ளன.

1) உடலுறுப்புகளின் வளர்ச்சி என்பது சூழ்நிலையின் அவசியத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. தொடர்ந்து பயன்படுத்தப்படும் உறுப்புகள் நன்கு வளர்ச்சியடைகின்றன. பயன்பாடு இல்லாத உறுப்புகள் வளர்ச்சிகுன்றி சூம்பிப்



படிப்பகம்

போகின்றன. உயிரின வாழ்வில் சூழ்நிலை காரணமாகத் தோன்றும் வேறுபாடுகள் பரம்பரையாய் தொடர்ந்து தோன்றுகின்றன.

இக்கொள்கையின்படி சம்மட்டி பிடித்து வேலை செய்யும் கன்னாரின் கைகளின் தசைகள் நல்ல வளர்ச்சி பெறுகின்றன. பந்தய ஓட்டக்காரர்களின் கால்கள் நன்கு உருண்டு திரண்டு அமைகின்றன. பயன்படுத்தப்படாத சோம்பேறிக் கைகால்கள் சூம்பிப்போகின்றன. இவ்வாறு பயன்படுத்தாத காரணத்தால் உயிரினம் பல வேறுபாடுகளை அடைகிறது. இவ்வேறுபாடுகள் பரம்பரையாய் தொடர்ந்து, தாயினத்திலிருந்து வேறுபட்டுப் புதிய இனமாக மாறிவிடுகிறது.

உதாரணமாக ஒட்டகச்சிவிங்கி ஆதியில் மானைப்போன்ற ஒரு மிருகமாக இருந்தது. அவை சிறிய செடி கொடிகளை மேய்ந்து வாழ்ந்தன. இயற்கை மாறுதல்களால் சிறுவகைத் தாவரத்தீனி கிடைக்காமல் போகவே மரக்கிளைகளில் உள்ள தழைகளை தலையை உயர்த்தி, கழுத்தை நீட்டி மேய்ந்தன. இவ்வாறு கால்களையும், கழுத்தையும் நீட்டியதால் பல தலைமுறைகளில் கொஞ்சங் கொஞ்சமாக வளர்ந்து ஒட்டகைச் சிவிங்கிகள் உருவாயின.

இதேபோல் பாம்பிராணி போன்ற முன்னோர்களிடமிருந்து பாம்புகள் பிரிந்தன. நான்கு சிறிய கால்களுடனிருந்த இவை புல்தரைகளில் ஊர்ந்தன. விரோதிகளிடமிருந்து தப்புவதற்கு நீண்ட துளையிட்டு அதற்குள் புகுந்து கொண்டன. கால்கள் பயன்படுத்தப்படாததால் பல தலைமுறைகளில் அவை மறைந்தன. சிறிய துவாரங்களுக்குள் நுழைந்து பொந்துகளில் பாதுகாப்புத் தேடியதால் பாம்புகள் நீண்ட உடலையும் பெற்றன.

நீர்யானையைப் போன்ற காட்டெருமையினம் ஒன்று இருந்தது. அதற்கு கொம்புகள் கீழ் தாடையில் இருந்தன. நீண்ட மூக்கும் இருந்தது. ஒட்டகைச்சிவிங்கி போல வாழ்க்கைத் தேவையிலிருந்து தனது நீண்ட மூக்கினால் மரக்கிளைகளை இழுத்துத் தழைகளை மேய்ந்தன. பலதலைமுறையில் மூக்குநீண்டு துதிக்கையாக மாறி யானையானது. சிறிய பிராணிகளே பெரிய பிராணிகளால் பரிணமித்தன.

நத்தை நகர்ந்து செல்லும்போது முன்புறம் என்ன இருக்கிறது என்பதைத் தெரியவேண்டிய தேவையிருந்தது. அதனால் டி.வி. ஆன்டனா போன்ற தொடுகொடுக்குகள் (உணர் இழைகள்) உருவாயின. இதுபோன்ற மாற்றங்களை லமார்க் "முயன்று பெற்ற பண்புகள்" என்று கூறுகிறார்.

சிறிய உயிரினங்களிலிருந்து பெரிய உயிரினங்கள் வரை ஒரே வகை சார்ந்தவற்றை குடும்பம் (Family) என்கிறார்.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

பல்லி - ஓணான் - உடும்பு - முதலைவரை, பூனையிலிருந்து புலி, சிங்கம் வரை, மண்புழுவிலிருந்து மலைப்பாம்பு வரை, முள்ளம் பன்றி, பன்றி முதல் காண்டாமிருகம் வரை, முயல் - மான் முதல் ஒட்டகச்சிவிங்கிவரை

தாவரங்களில்கூட சிறியவற்றிலிருந்து பெரியவை தோன்றின.

நாய், நரி, ஓநாய் ஆகியவை ஒன்றையொன்று ஒத்த உயிர்கள் ஆகும். ஆனால் முரண்பட்ட குணங்கள் கொண்டவை. பல யுகங்களுக்கு முன்பு வாழ்ந்த பொது மூதாதைகளிடமிருந்து வந்தவை. பரிணாம முறையில் இவை வேறுபட்டன. உருமாறியே தீரவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தால், தேவையால் வடிவங்களும் அவற்றின் சுபாவங்களும் பெருமளவு மாறியிருக்கவேண்டும். இவை ஒரே இரவில் நடைபெறக்கூடியவையல்ல. ஒரு பிராணி சற்றே மாறத் தொடங்கியதும் அந்த மாறுபாட்டை அது தனது குழந்தைகளுக்கு அளித்தது. அடுத்த தலைமுறை கொஞ்சம் மாற்றத்தை சேர்த்து தங்கள் குழந்தைகளுக்கு அளித்தன. பரம்பரை வரிசையில் முழுமையான மாற்றம் ஏற்பட்டது.

உயிரினங்களின் ஜீரணத்துக்காக கல்லை விழுங்குவதையும் லமார்க் கூறினார். கோழி முதல் திமிங்கிலம் வரை தீனியை அரைக்க கற்களை விழுங்குகின்றன. வளவளப்பான, வடிவமான கற்கள் இந்த பூமி முழுவதிலும் கிடக்கின்றன.

லமார்க்கின் முக்கியமான கொள்கை, உயிரினம் சூழ்நிலை காரணமாக 'ஏற்றுக்கொண்ட 'வேறுபாடுகளின் பாரம்பரியத் தொடர்பு என்பதாகும். இக்கொள்கையைப் பயன்படுத்தி நோய்களை எதிர்த்து வாழும் தானியங்கள், அதிகமான பால்தரும் ஆடு மாடுகள், ரோமம் மிகுந்த ஆடுகள் (கம்பளிக்காக), அதிக விளைச்சல் தரும் கம்பு, பருத்தி, சோளம் போன்ற பயிர்களை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

**ஹ்யூகோ டீவிரிஸ்**

இவர் டச்சு நாட்டு விஞ்ஞானி. பரிணாம வளர்ச்சியில் படிப்படியான மாற்றங்கள் பல தலைமுறைகளில் ஏற்படுவது பற்றி டார்வினும், லமார்க்கும் கண்டுபிடிப்புகளை நிகழ்த்தினர். டீவிரிஸ் பரிணாம வளர்ச்சியில் திடீர்ப்பரிணாமம் ஏற்படுவதைக் கண்டுபிடித்தார். இதற்கு 'சடுதி மாற்றக் கொள்கை' (திடீர் மாற்றம்) என்று பெயர்.

இயற்கையில் அவ்வப்போது ஒரு விளக்கமும் இல்லாமல் திடீரென்று தாயினத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு புதிய இனம் தோன்றுவதுண்டு. டார்வின் இதை 'அசாதாரணத் தோற்றம்' என்று மட்டுமே கூறினார். மேலும் அந்த உயிரினம் நிலைத்து நிற்காது




படிப்பகம்

www.padippakam.com

என்றும் கூறினார். ஆனால் டிவிரிஸ் இந்த திடீரெனத் தோன்றிய இனங்களைச் சோதித்ததில் புதிதாய் தோன்றிய மாற்றம் நிரந்தர மாற்றம் என்று கண்டார். திடீரென்று தோன்றினாலும் புதிய இனம் தொடர்ந்து புதிய இனமாகவே வாழ்கிறது என்றார்.

இயற்கையில் பல இனங்கள் சடுதி மாற்றத்தாலும் (MUTATION) தோன்றியுள்ளன. கொம்புள்ள மாட்டுமந்தையில் கொம்பே இல்லாத ஒரு கன்று தோன்றுகிறது. அதன் சந்ததிகள் கொம்பில்லாமலேயே பிறந்து தொடர்கின்றன. பதினெட்டாம் நூற்றாண்டில் அமெரிக்காவில் ஒரு ஆட்டுப்பண்ணையில் மிகவும் குட்டையான கால்களையுடைய ஆட்டுக்குட்டி பிறந்தது. திடீரெனத் தோன்றிய இந்த இனம் 'அன்கன்' என்ற புதிய ஆட்டினமாக ஆயிற்று.



வெள்ளை எலிகள் சடுதி மாற்றத்தால் தோன்றியவையே. கறுப்பு எலிகளின் கூட்டத்தில் தோன்றிய நிறமற்ற ஒரு எலியின் பரம்பரைதான் வெள்ளை எலி இனம். இதேபோல் சிவப்புக்கண் ஈக்களிலிருந்து சடுதிமாற்றத்தால் வெள்ளைக்கண் ஈக்கள் தோன்றின. சிறகுள்ள தாயினத்திலிருந்து சிறகில்லாத ஈயினம் தோன்றியுள்ளது. சாதாரணக் கோழியிலிருந்து நீண்டதோகையுள்ள ஒரு கோழியினம் தோன்றியுள்ளது.

மஞ்சள் நிற சூரியகாந்தி இனத்திலிருந்து சிவப்பு இனம் இவ்வாறு தோன்றியதுதான். பரிணாமத்திற்கு சடுதிமாற்றம் ஒரு முக்கிய அம்சம் என்பதை இன்றைய உயிரியியல் விஞ்ஞானிகள் ஏற்று புதிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்தி வருகின்றனர். அவற்றில் ஜீன் சடுதி மாற்றம், நிறமாற்றம் என இரு வகையுண்டு.

சிவப்பு நிறக்கண்களையுடைய இனத்தில் வெள்ளைக்கண் ஈ தோன்றியது ஜீன் சடுதிமாற்றமாகும். ஊமத்தைச் செடியில் வெள்ளைப்பூக்களைக் கொண்டது ஒரு இனம். ஜீன் மாறுதலால் நீலப் பூக்களுள்ள ஊமத்தை தோன்றுகிறது. அதேபோல் ஊமத்தங்காயிலும் முள்ளுள்ளவையிலிருந்து முள்ளில்லாதவை தோன்றுவதும் ஜீன் மாறுதலால்தான்.

ஜீன்களால் ஏற்படும் மாற்றங்களை வைத்து எக்ஸ்ரே, ரேடியம், ரசாயனப் பொருட்களின் துணையால் விஞ்ஞானிகள் சடுதி மாற்றங்களை ஏற்படுத்தி புதுவகை தானியங்கள், காய்கறிகள், பழங்களை உருவாக்குகின்றனர்.

நிறக்கோல் அல்லது நிறமாற்ற



படிப்பகம்

www.padippakam.com

மும் ஜீன் அணுப்பிரிவில் உண்டு. ரோஜாவில் ஏழு ஜோடி நிறக் கோல்களே உண்டு. இதனால் இருபத்திநான்கு, முப்பத்தாறு ஜோடி நிறக்கோல்களைக் கொண்ட புதிய தனிலட்சணமான இனங்கள் உண்டாகிவிடுகின்றன, அந்திமந்தாரை, தக்காளி, கோதுமை, ஊமத்தை போன்றவற்றிலும் இத்தகைய புதிய இனங்கள் தோன்றியுள்ளன. இவை தாயினத்தைவிடப் பெரியவையாகவும், அதிக பலன் தருபவையாகவும் உள்ளன.

**உயிரின் உதயம்**

கடல்தான் உயிரின் தாய். ஆரம்ப உயிரிகள் தோன்றியதும் உயிரினங்கள் உதயமானதும் கடலில்தான். கடலிலும் காற்றுமண்டலத்திலும் பிராணவாயு, கரியமில வாயு, நீரகவாயு, நைட்ரஜன் ஆகியவற்றின் அடிப்பொருட்கள் தோன்றின. உயிரின் தோற்றத்தை நோக்கிப் பொருட்கள் மாற்றமடைந்த முதல் கட்டம் இது. ஒரு காலத்தில் மர்மமாக இருந்த இந்த விஷயம் தற்போது விஞ்ஞானிகளுக்கு வெட்டவெளிச்சமாகிவிட்டது.

அடுத்தகட்டமாக கடலில் புரதம் கலந்த கூட்டுப்பொருட்கள் உருவாயின. முட்டையில் மஞ்சள் கருபுரதம். பருப்பு மற்றும் பல பொருட்களில் புரதம் உள்ளது. உடலின் உறுப்புகளை உருவாக்குவது புரதமே. கரியும் நைட்ரஜனும் மற்றும் பல மூலப்பொருட்களும் இதில் உள்ளன. உயிரிப் பொருட்களைத் தோற்றுவித்ததில் புரதங்களுக்கு மிக முக்கியப்பங்குண்டு.

டூரிங்குக்கு மறுப்பு என்ற நூலில் புரதங்கள் பற்றி ஏங்கெல்ஸ் தெளிவாக்கினார். "உயிர் காணப்படும் இடத்திலெல்லாம் புரதப் பொருட்கள் காணப்படுகின்றன. புரதப் பொருள் சிதையாமல், மூலகங்களாகப் பிரியாமல் காணப்படும் இடத்திலெல்லாம் உயிரும் காணப்படுகிறது" என்று ஏங்கெல்ஸ் குறிப்பிட்டார். ஏங்கெல்சின் கருத்து உண்மையே என்பதை இன்றைய விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி முடிவுகள் உறுதிப்படுத்துகின்றன. புரதங்கள் புரோட்டோபிளாசத்தை உண்டாக்குகின்றன. ஜீரணத்திலும் மற்றும் உடலில் நிகழும் மாறுதல்களிலும் அதற்குப் பங்குண்டு என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆகவே ஆதிகாலக் கடல்களில் புரதம் தோன்றிய நிகழ்ச்சியானது பொருட்களின் பரிணாமத்தில் உயிர் தோன்றும் கட்டத்துக்கு முன்னோடியாக இருந்தது.

வீடு கட்டுவதற்கு ஆயிரக்கணக்கான செங்கற்கள் தேவை. அதுபோல புரதக் கூட்டணுக்கள் அமினோ அமிலங்கள் (டிஎன்ஏ) என்னும் கூட்டுப்பொருட்களால் ஆனவையாகும், இந்த அமினோ அமிலங்கள் ரசாயனக் கவர்ச்சியால் ஒரு தொடராக இணைக்




படிப்பகம்

www.padippakam.com

கப்பட்டுள்ளன. ஒவ்வொரு புரதத்திலும் அமினோ அமிலங்களின் (டிஎன்ஏ) இணைப்பு முறையைப் பொறுத்தே அதன் பண்புகள் இருக்கும். அதன் கரையும் திறன், வேறு பொருளோடு இணைவது அல்லது பிரிவது போன்றவையே பண்புகளாகும். ஆயிரக்கணக்கான வகைப்புரதங்கள் இத்தகைய இணைப்புகளால் உருவாகின்றன.

தாவரம் மற்றும் விலங்குகளில் குறிப்பிட்ட வகையான புரதங்கள் கின்றன. புரோட்டோபிளாசம் சிதைவு மாறுதலுக்குட்படுகிறது. ஆயினும் அதன் இயங்குநிலை திட்டமாக இருக்கிறது. அது தனது அமைப்பை பரம்பரை பரம்பரையாக நிலை நிறுத்திக்கொள்கிறது. இந்த அமைப்பின் தனித்தனிப் பகுதிகளின் தன்மைகளை பௌதீக ரசாயன விதிகள் விளக்குகின்றன. சூழ்நிலை மாறுதலுக்கேற்ப இந்த உயிர்ப்பொருட்களிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன.



உள்ளன. குதிரை, காளை, முயல் இவற்றின் ரத்தத்திலுள்ள புரதமும் மனிதரத்தத்திலுள்ள புரதமும் ஒன்றல்ல. வேறுபட்டவையாகும். கோயசர்வேட் என்னும் துணிகளும், என்சைம்கள் என்ற செயலூக்கிகளும் புரதத்தில் உள்ளன. இவை மாறுதல்களையும் மாற்ற முறைகளையும் நிர்ணயிக்கின்றன.

இரும்பு, செம்பு, கால்சியம் உப்புகளும் இவற்றோடு கலக்கும்போது மாறுதல்களைத் துரிதப்படுத்து

வளர்ச்சிப்போக்கில் கூட்டணுக்கள் கொண்ட அமைப்புகள் தோன்றின. அவற்றுக்கும் இயற்கைச் சூழ்நிலைக்கும் இயங்கியல் முரண்பட்ட ஒற்றுமை தோன்றியது. அதன் விளைவாக உயிர் உதயமாயிற்று என்று ரஷ்ய விஞ்ஞானி ஏ.ஐ.ஒபாரின் கூறியுள்ளார். உயிரற்ற பொருட்களுக்கு விஞ்ஞான விதிகள் பொருந்தின. அந்த விதிகளுக்கும் மேலான நியதிகளுக்குட்பட்டு உயிர் தோன்றியது. பொரு



படிப்பகம்

www.padippakam.com

ளின் அமைப்பில் ஒரு சிக்கலான வளர்ச்சிக் கட்டத்தில் உயிர் தோன்றியது என்றும் ஒபாரின் குறிப்பிட்டுள்ளார்.

முதலில் தோன்றிய உயிர் என்பது ஒரு செல் உயிரினமான புரோட்டோசோவாதான். இது மிகமிகச்சிறிய உயிரினம். ஆயிரக் கணக்கான ஆண்டுகளில் இந்த ஒரு செல் உயிரினம் சூரிய சக்தியை உள்வாங்கின. அதன் உதவி ஓர் அங்க ஜீவிகளான பாக்டீரியா, அமீபா போன்றே இருந்தன். பல கோடி வருடங்களின் வளர்ச்சியில் புராதன சமுத்திரத்தில் உயிரினங்கள் பெருகின. ஆங்கே பூண்டுத் தாவரங்களும், அவற்றிற்கிடையே மெடுசே, மொலஸ்கா, எகிம் டெர்ம், கடற்புழுக்கள் போன்ற பிராணிகளும் தோன்றின. இதை இயோசோயிக் காலம் என்று விஞ்ஞானிகள் அழைக்கின்றனர்.



யால் கரியமிலவாயுவைப் பிரித்து அதிலுள்ள கரியிலிருந்து உயிர்ப் பொருட்களை தங்கள் உடலிலேயே அவை தயாரித்தன. நீலம் கலந்த பச்சைப்பாசி (ஆல்கே) தோன்றியது. உட்கொள்வதும், வெளித்தள்ளுவதும் உயிரினத்தின் ஆதாரச்செயலாகும்.

ஆரம்பகாலத் தாவரங்களும், விலங்குகளும் இன்று காணப்படும் அடுத்த கட்டமான பாலிசோயிக் காலத்தில் பல உயிர்ப் பிராணிகள் தோன்றின. அதற்கடுத்து கேம்பிரியன் காலம் வந்தது. அது இன்றைக்கு ஐம்பது கோடி ஆண்டுகளுக்கு முந்திய காலமாகும். அக்காலத்தில் உயிர்கள் கடலை விட்டு பூமியின் மேற்பரப்புக்குவரவில்லை. அப்போது கடலில் பூக்கள் உள்ள செடிகளோ, மரங்களோ இல்லை. மீன், நீரிலும் நிலத்




படிப்பகம்

www.padippakam.com

திலும் வாழ்வன, ஊர்வன, பறப்பன, விலங்குகள் போன்றவையும் அப்போது வளர்ச்சியடைய வில்லை.

அடுத்து சிலூரியன் காலம் என்ற வளர்ச்சிக்காலம் வந்தது. செடிகளும், முதுகெலும்புள்ள பிராணிகளும் தோன்றின. முப்பத்தைந்து கோடி ஆண்டுகளுக்கு முன்பு டிவானியன் காலம் வந்தது. பலவகை உயிரினங்கள் கடலில் தோல் அவை நீர்நிலை அருகிலேயே வாழ்ந்தன. இக்கால முடிவில் ஊர்வன தோன்றின. அவற்றின் தோல்கள் உலர்ந்தாலும் நீர்நிலைக்கு அப்பால் வெகுதூரம் நிலத்தில் சென்று வாழும் வகை ஏற்பட்டது. அவை வெகுதூரம் சென்று பரவின.

அடுத்துவந்த பெர்மியன் காலத்தில் பூத்து காய்க்கும் மரங்கள், செடி கொடிகள் தோன்றிவளர்ந்



தோன்றின. ஆறுகளிலும் மீன்கள் தோன்றின. இருபத்தைந்து கோடி ஆண்டுகளுக்கு முன்பு கார்போனிபெரஸ் காலம் வந்தது. பிரம்மாண்டமான மரங்கள், செடி கொடிகள் தோன்றின. கடற்கரைகள், ஆற்றங்கரைகள், நிலத்தில் வாழும் உயிரினங்கள் தோன்றி கூட்டங்கூட்டமாய் வாழ்ந்தன. அவற்றின் தோல்காய்ந்துவிடக் கூடாது என்ப

தன. சூரிய வெப்பத்தை தாங்கி நிலத்தில் வாழும் பிராணிகள் பெருகின. நீரிலும் நிலத்திலும் வாழ்ந்து வந்த, தோல்காய்க்கூடாத இனங்கள் அழிந்தன. கடலுக்குள் தோன்றிவளர்ந்த தாவரங்கள் நிலத்திற்குப் பரவின. டைனோசர் எனும் பூதாகரமான பிராணிகள் பூமியில் உலவின. பறக்கும் டிரா




படிப்பகம்

www.padippakam.com

கன் போன்ற பிராணிகள் வானில் பறந்தன. பாம்புகள், இட்சியோ சாரியோ, பினியோசாரியோ போன்ற பிராணிகளும் கடலில் வாழ்ந்தன.

குட்டிபோட்டு பால் கொடுக்கும் இனங்கள் மூன்றரைக்கோடி ஆண்டுகளுக்கு முன்பு தோன்றின. மூன்றாவது கற்ப காலம் என்றழைக்கப்படும் காலத்தில் டைனோசர் போன்ற ராட்சத உயிரினங்கள் பெரும்பாலும் அழிந்துவிட்டன. பூமியில் ஏற்பட்ட இயற்கை சூழல் மாற்றங்களுக்கேற்ப தங்களை மாற்றிக்கொள்ள முடியாமல் அவை மாண்டன. குட்டிபோட்டுப் பால் கொடுக்கும் இனங்கள் பல்கிப்பெருகின.

மூன்றாம் கற்ப காலத்தின் மத்தியில் படிப்படியாக இன்று நாம் பார்க்கும் விலங்கினங்கள் உருக் கொண்டன. கற்பகால முடிவில் மான், குதிரை, காண்டாமிருகம், யானை, வாலில்லாக்குரங்குகளும் தோன்றின. மனிதக்குரங்குகளும் தோன்றின.



மூன்றாம் கற்பகாலம் முடிந்து நான்காம் கற்பகாலம் (பத்துலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு) தொடங்கியபோது குரங்கு மனிதன் தோன்றினான். 'பிதிகாந்திரோபஸ்' என்றழைக்கப்படும் அவன் வேலைசெய்யச் சில கருவிகளைப் பயன்படுத்தினான். அவனது வழித் தோன்றல்களே நமது மூதாதையர். நான்காம் கற்பகாலத்தின் நீண்ட பனிப்பருவத்தில் மனிதன் தற்கால மனிதனை எல்லா வழிகளிலும்



படிப்பகம்

www.padippakam.com

ஒத்திருந்தான். அவனை 'நியாண்டர் தால்' மனிதன் என்று விஞ்ஞானிகள் பெயரிட்டு அழைத்தனர்.

**முடிவுரை**

உயிரற்ற பொருட்களின் வளர்ச்சியால் உலகில் உயிர்தோன்றியது என்பதை விஞ்ஞானிகள் விரிவாக விளக்கியுள்ளனர். வானக்கோள்களின் மேற்பரப்பில் கரி அணுருபத்தில் பிரிந்துகிடக்கிறது. உலகின் மேற்பரப்பில் கரி என்பது கரி நீரகக் கூட்டுப்பொருட்களாய் மாறியது. காலப்போக்கில் இப் பொருட்கள் ஆக்ஸிஜன், நைட்ரஜனோடு சேர்ந்து அவற்றின் அடிப் படைப் பொருட்களாக மாறின.

புராதனக் கடல்நீரில் இவை சிக்கலான அமைப்புடைய பொருட்களாக மாறின. புரதங்களும், வேறு பொருட்களும் தோன்றின. தாவரங்கள், விலங்குகளின் உடல்களை உருவாக்கும் சேதனப் பொருட்கள் வளர்ச்சியடைந்தன. முதலில் இவை கடலில் கரைந்திருந்தன. பின்னர் கோயசர்வேட் துளிகளாய் வெளிப்பட்டன. இவற்றினுள் மாறுதல்கள் நிகழ்ந்தன. முன்பிருந்ததைவிட சிறப்பான அமைப்பை அவை பெற்றன. அவைதான் உலகின் ஆதிமூல உயிர்களாக மாறின.

உயிர் வளர்ந்தது. மூல உயிர்களுக்கு ஜீவ அணு வடிவமில்லை. உயிரின் வளர்ச்சிப் போக்கில் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் ஜீவ அணு தோன்றியது. ஒற்றை அங்க உயிர்களும், பல அங்க உயிர்களும் நிலை பெற்றன. உயிரினங்களின் உதயத்திற்கு ஆத்மாவோ அல்லது கடவுளோதான் காரணம் என்ற கொள்கையை விஞ்ஞானம் ஆதாரங்களுடன் மறுக்கிறது.

நவீன இயற்கை விஞ்ஞானம் உயிர்களின் தோற்றம் வளர்ச்சி பற்றிய விதிகளைக் கண்டுபிடித்துவிட்டது. அது கருத்து முதல்வாதத்தையும், மாறாநிலை வாதத்தையும், பிற்போக்கு வாதங்களையும் தகர்த்தெறிந்துவிட்டது. உயிர் என்பது பொருளின் ஒரு சிறந்த வடிவமே. இதைச் செயல்முறை மூலம் விஞ்ஞானம் நிருபித்துள்ளது. சுலபமான அமைப்புடைய சிற்றுயிர்களை செயற்கையாகவே படைக்க முடியும். உயிரியல் விஞ்ஞானிகளின் வெற்றிகளும் கண்டுபிடிப்புகளும் தொடர்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

# அன்பும் அறனும் சுரக்க மதம் தேவையா?

வே. மீனாட்சிசுந்தரம்

"கடவுள் நம்பிக்கை', "கடவுள் மறுப்பு", "மதசார்பின்மை" என்ற வார்த்தைகள் விழாத காதுகளை இன்று காண்பது அரிது. இச்சொற்றொடர்கள் டீக்கடை பெஞ்சிலிருந்து நாடாளுமன்றம் வரை தூள் கிளப்புகிற பல வாதங்களுக்கு உட்பொருள்களாய் இருந்து வருகின்றன. அரசியல் மேடையிலிருந்து, ஆய்வு அறைகள் வரை அக்கு வேறு ஆணி வேறாக அலசப்படுகிற சமாச்சாரங்களிலே இவைகளே முதலிடத்தில் இருக்கின்றன.

## கடவுள் உண்டா? இல்லையா?

கடவுள் உண்டா இல்லையா என்கிற சந்தேகம் இன்று நேற்றல்ல; மனித குலத்திற்கு அறிவு தோன்றிய நாள் தொட்டு இருந்து வருகிறது. கிருஸ்து பிறப்பதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கும் முன்னரே உருவானதாக கூறப்படும் தொன்மையான ஆவணமான ரிக்வேதமே இந்த சந்தேகத்தை கிளப்புகிறது. கடவுளை துதிக்கும் அந்த வேதத்தின் 10வது நூலின் 129வது ஸ்லோகத்தில் உள்ள வரிகள் கூறுவதாவது :-

> "இது எங்கிருந்து வந்தது? எப்படி படைப்பு நிகழ்ந்தது? யார் அறிவார்? யாரால் சொல்ல முடியும்? கடவுள்களே பின்னால் படைக்கப்பட்டனர்; இந்த படைப்புகளின் மூலஸ்தானம் எது? அவன் படைத்தானா? உயரே சொர்க்கத்திலிருக்கும் அவன் அறிவானா! ஒரு வேளை அவனுக்கும் தெரியாமல் இருக்கலாம்!"

இவ்வரிகள் சந்தேகத்தில் தொடங்கி சந்தேகத்தில் முடிவடைவதை கவனியுங்கள். பழைய வேதங்கள் மட்டுமல்ல, ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் சிவனடியார்களுக்கும் இந்த சந்தேகம் தோன்றி பின்னர் விடுபட்டதாக அவர்களது பாடல்கள் சில தெரிவிக்கின்றன?

முருகனை வணங்கிய அருணகிரியார்



படிப்பகம்

www.padippakam.com

"உருவாய், அருவாய், உளதாய், இலதாய்" இருக்கும் என்றுதான் துதிக்கிறார்.

கடவுள் பற்றிய சந்தேகம் எல்லா மதத்திலும் வெளிப்படுகிற ஒன்றுதான். ஏசு மீண்டும் உயிர்த்தெழுந்தார் என்பதை செயின்ட் தாமஸ் (ஏசுவின் சீடர்களில் ஒருவர்) சந்தேகித்தார். அதனால் சந்தேகப் பிராணி தாமஸ் என குறிப்பிடப்பட்டார். இந்த சந்தேக மறுப்பையே கடவுள் இருக்கிறார் என்ற முடிவிற்கு அடிப்படையாக நமது முன்னோர்கள் கொண்டனர். புற ஆதாரங் களை வைத்தே முடிவு எடுக்கும் மனித மனம் எந்த ஆதாரமும் இல்லாமல் எப்படி இந்த முடிவுக்கு வந்தது என்பதை பின்னால் பார்ப்போம்.

## டார்வின் புத்தகம் கிளப்பிய சர்ச்சை

கடவுள் உண்டா இல்லையா? இயற்கை கடவுளின் படைப்பா? இல்லையா? என்ற தர்க்கம் டார்வினின் கண்டு பிடிப்பினைத் தொடர்ந்து ஐரோப்பியாவிலும் அமெரிக்காவிலும் சூடு பிடித்தது. இன்றும் இந்த மோதல் ஓயவில்லை. 1859ம் ஆண்டு டார்வினின் "உயிரினங்களின் தோற்றம்" என்ற புத்தகம் வெளிவந்தது. எல்லாம் வல்ல கடவுள் கருணை மிக்கவன், ஜீவராசி களும் அவனது கருணையை பறை சாற்றுகின்றன, அருளும், அழகும் எங்கும் தங்கியுள்ளன என்று காலம் காலமாய் நம்பி வந்தவர்களுக்கு இந்தப் புத்தகம் பெரிய அதிர்ச்சியை கொடுத்தது. "ஜீவராசிகள் வாழ்வதற்காக எப்படி போராடுகின்றன. அதில் தகுதி உள்ளதே ஜீவிக்கின்றன" என்ற கோட்பாடுகளை விளக்குவதற்காக அவர் உலகை சுற்றி பயணம் செய்து இயற்கையில் கண்டதை தொகுத்தளித்தது அந்த புத்தகம்.

ஒரு ஜீவராசிதான் வாழ இன்னொரு ஜீவராசியை எப்படி துன்புறுத்து கிறது என்பதை விளக்கியிருந்தார். கடவுள் கருணை மிக்கவன் என்றால் அவனது படைப்புகள் இப்படி ஈவிரக்கமற்ற முறையில் நடந்து கொள்ளுமா என்ற சந்தேகம் எல்லோரையும் குலுக்கியது. "கடவுள் அருள் பாலிக்கும் இயற்கை" என்று நம்புகின்றவர் ஒருவர் டார்வினிடம் கடிதம் எழுதி கேட்ட பொழுது

> "எல்லா வல்ல, கருணை மிக்க கடவுள் வேண்டுமென்றே திட்டமிட்டு இக்னோமினாடி வண்டுகளை தத்துக் கிளியின் உடலினுள் புகுந்து அதனை உண்ணும்படியோ, பூனை உண விற்காக எலியுடன் விளையாடும் படியோ அமைத்திருப்பார் என்பதை என்னால் என்னையே நம்ப வைக்க முடியவில் லையே" என்று பதில் போட்டிருந்தார். (1860ல் ஆசாகிரேக்கு எழுதிய பதில்)



படிப்பகம்

www.padippakam.com

அன்று ஜீவராசிகளை கடவுள் படைத்திருக்க முடியாது என்கிற டார்வின் கருத்து இலக்கிய வாதிகளையும் சிந்திக்க வைத்தது. சிரிக்கவும் வைத்தது.

புகழ் பெற்ற அமெரிக்க நகைச்சுவை எழுத்தாளர் மார்க்ட்வைன் எல்லாம் இறைவனின் படைப்பு என்பதையும், எங்கெனும் ஆண்டவனின் அழகும், அருளும் மளிர்கிறது என்ற நம்பிக்கையையும் ஒரு நகைச் சுவை படைப்பு மூலம், சிந்திக்கவும் வைக்கிறார் சிரிக்கவும் வைக்கிறார்.

"சிறிய பெஸ்ஸி எல்லா வல்லவனுக்கு உதவுவார்"

(Little Bessie would assist providence)

என்ற தலைப்பில் தாய்க்கும் மகளுக்கும் இடையே நடக்கும் உரையாடல் களாக அந்த படைப்பு அமைக்கப்பட்டிருக்கிறது.

சிறுமி : *அம்மா கருணை மிக்கவர் கடவுள் என்றால் அவர் ஏன் எனது தோழி பில்லி நோரிஸ் மீது டைபஸ் கிருமியை ஏவி துன்புறுத்த வேண்டும்? நல்லவர்கள் மீது ஏன் அநியாய மான கெடுதல்களை சுமத்த வேண்டும்?*

அம்மா : *எல்லாவற்றிற்கும் ஒரு காரணம் இருக்க வேண்டும் மகளே! இறைவனை சந்தேகிக்காதே! இப்படி உரை யாடல் துவங்கி இறுதியில் மகள் ஒரு விபரத்தை கூறுவதோடு கதை முடிகிறது.*

சிறுமி : *அம்மா இதைக் கேள்! திருவாளர் ஹோலிஸ்ட்டர் குளவி கள் பற்றி கூறினார்; அது உயிரோடு சிலந்தி பூச்சிகளை பிடித்து கூட்டிலே கொண்டு வந்து திணித்து விடும். குட்டி குளவிகள் சிலந்தியின் கால்களை, வயிற்றை கடித்து ருசி பார்த்து சாப்பிடும். ருசியான உணவை படைத்தளித்தற் காக கடவுளின் எல்லையற்ற கருணைக்கு வியந்து கொண்டே நன்றி சொல்லும். சிலந்தியோ ஒவ்வொரு உறுப்புக்களையும் இழந்து சாவும் நெருங்காமல் துடி துடிக்கும். நான் அவரிடம் கேட்டேன். நீங்களும் இப்படி ஒரு சிலந்தியைப் பிடித்து, கடவுளின் கருணையை வியந்து கொண்டே, பிய்த்து பிய்த்து சாப்பிடுவீர்களா? அதற்கு அவ்வாறு பசியை போக்குவதைவிட, நான் அழிந்து போகவே விரும்புவேன் என்றார். என்ன! அம்மா! நான் சொன்னதைக் கேட்டு மயங்கி விட்டாயா?" என்ற கேள்வியோடு கதை முடிகிறது.*



படிப்பகம்

www.padippakam.com

டார்வினின் பதிலும் மார்க்டைவனின் நையாண்டி கதையும் ஒன்றை நமக்கு உணர்த்துகிறது. கடவுள் நம்பிக்கை உள்ளவர்களுக்கு கண் முன்னால் நடப்பதை கடவுளின் அருள் என்று ஏற்கவும் முடியவில்லை அதே நேரத்தில் கடவுள் நம்பிக்கையை கைவிடவும் முடியவில்லை, ஒரு தவிப்பு அவர்களை கவ்வுகிறது.

இதில் இன்றும் தொடர்கிற வேடிக்கை என்னவெனில் விஞ்ஞானம் வளர்ந்தோங்கிய அமெரிக்காவில், இயற்கையை கடவுள் படைத்தாரா இல்லையா என்ற தர்க்கம் அரசியல் வடிவம் எடுத்து இன்றும் ஆடுகிறது என்பதுதான். டார்வினின் கோட்பாடுகள் கடவுள் நம்பிக்கையை தகர்த்து விடும் என்பதால் அமெரிக்காவில் பல மாநிலங்களில் பள்ளிகளில் பாட மாக்கப்படுவது தடைசெய்யப்பட்டுள்ளது. டார்வினின் கோட்பாடுகளை பாடமாக்க வேண்டும் என்று அமெரிக்காவில் பல இயக்கங்கள் போராடி வருகின்றன. சமீபத்தில் (14.2.2001) கான்சாஸ் மாநிலத்தில் பள்ளி கல்வி குழுவினரின் 10ல் 7 பேர் வாக்களித்து டார்வினின் கோட்பாட்டையும் பாடமாக வைக்க முடிவு செய்து விட்டனர். இந்த முடிவு அமெரிக்க முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்த முடிவிற்காக போராடிய "சர்ச்சை-யும் அரசையும் பிரித்து வைக்க ஒன்றுபடும் அமெரிக்கர்கள்" (United American to seperate Churc and State) என்ற அமைப்பிற்கு மரியாதை உயர்ந்து விட்டது. வேடிக்கை என்னவெனில் இந்த அமைப்பில் பெரும்பாண்மையினர் கடவுள் நம்பிக்கை உள்ளவர்களே. இருந்தாலும் இந்த முடிவு ஆளும் வட்டாரத்தின் எதிர்ப்பை தீவிரப்படுத்தியது. அந்த எதிர்ப்பை சமாளிக்க புதிய ஜனாதிபதி ஜூனியர் புஷ் ஒரு புதிய கட்டளையை பிறப்பித்துள்ளார். அதன்படி இனி அரசு நடத்தும் பள்ளிகளில் "நாங்கள் கடவுளை நம்புகிறோம்" என்ற வாசகம் எழுதப்பட்ட பலகை எல்லா வகுப்பறைகளிலும் தொங்க வேண்டும். இதில் இன்னொரு வேடிக்கை என்னவெனில் இந்திய அரசு டார்வினின் கோட்பாட்டை பள்ளிகளில் பாடமாக வைக்கத் தயங்கவில்லை. ஆனால் மதவாதிகளின் சூழ்ச்சியால் உயிரின் தோற்றம் பற்றி சோவியத் விஞ்ஞானி யின் கோட்பாட்டை பாடத்திட்டத்தில் இருந்ததை நீக்கி விட்டனர். இவை களிலிருந்து ஒன்றை உணர முடிகிறது. விஞ்ஞானம் முன்னேற முன்னேற கடவுள் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதில் கடவுள்வாதிகள் வேறு காரணங்களுக்காக முனைப்பு காட்டுகின்றனர்.

இந்த முனைப்பு விஞ்ஞான வளர்ச்சிக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் சவாலாக அமைந்துள்ளது. இன்றையத் தேதியில் இதனால் உலகளவில் மதமும் - விஞ்ஞானமும் மோதுவதை பார்க்க முடியும். இன்று இந்தச்



படிப்பகம்

www.padippakam.com

சண்டையில் ஒரு புதிய பரிமாணத்தையும் நாம் காண முடியும். அது மனித ராசிக்கு கடவுள் நம்பிக்கை வேண்டுமா வேண்டாமா என்ற சண்டையாக பரிமானம் அடைந்து விட்டது. கடவுள் உண்டா இல்லையா என்ற பூர்வீக மோதல், கடவுள் இயற்கையைப் படைத்தவரா இல்லையா என்ற மோதலாக உயர்ந்து இப்பொழுது கடவுள் வேண்டுமா வேண்டாமா என்ற சர்ச்சையாகி விஞ்ஞான உலகையும், தத்துவ உலகையும் கலக்கி வருகிறது. நாமும் சமூக முன்னேற்றம் கருதி இத்தகைய சர்ச்சைகளில் பங்கு பெறுவது அவசிய மாகிறது.

இந்த புதிய மோதலில் ஒரு சுவராஸ்யமான செய்தி என்ன வெனில், இதில் இந்தியாவும் இழுத்துவிடப்பட்டதோடு நமது இளம் விஞ்ஞானிகளின் பங் களிப்பும் குறிப்பிடத் தகுந்ததாக உள்ளது. "எல்லாம் மாயை", "வெந்ததை தின்பது, விதி வந்தால் சாவது' என்ற உணர்வுகள் நமது கலாச்சார வளர்ச் சிக்கு மட்டுமல்ல சுதந்திர போராட்ட காலத்தில் நமக்குப் பெரிய தடைக் கல்லாகவும் இருந்தது. மீண்டும் மதவாதம் தலை தூக்கி இன்னும் ஒராயிரம் ஆண்டு நம்மை அசத்தி விடுமோ என்று பயப்படுகிற நேரத்தில் மதமா விஞ் ஞானமா என்ற உலகளவுப் போரில் நல்ல வேளையாக இழுத்து விடப்பட்டு விட்டோம்.

## கடவுள் வேண்டுமா? வேண்டாமா?

இயற்கையை கடவுள் படைத்தாரா இல்லையா என்ற தர்க்கத்தின் வரலாற்றை பார்த்தால், இன்னொரு உண்மை புலப்படும். கடந்த 400 ஆண்டுகளாக, ஐரோப்பாவிலும் அதன் பிறகு அமெரிக்காவிலும் விஞ்ஞானமும் மதமும் மோதிக் கொண்டிருக்கிறது என்பது புலப்படும்.

1874ம் ஆண்டில் வெளிவந்த மதமும் விஞ்ஞானமும் நடத்திய மோதலின் வரலாறு என்ற புத்தகமும். 1896ல் வெளிவந்த 'மத கோட்பாடுகளுடன் விஞ்ஞானம் தொடுத்த யுத்தத்தின் வரலாறு' என்று புத்தகமும் கிருத்துவ மதத்தோடு விஞ்ஞானிகள் நடத்திய போராட்டம் பற்றிய தகவல்களைத் தருகின்றன.

- பூமி சூரியனை வலம் வருகிறது,
- பூமி தட்டையல்ல கோள வடிவம்,
- ரத்த ஓட்டம் பற்றிய கண்டு பிடிப்புகள்

போன்ற விஞ்ஞான முடிவுகளை விஞ்ஞானம் நிலை நாட்ட கிருத்துவ மதத்தோடு போராட நேர்ந்தது.



படிப்பகம்

விஞ்ஞானிகள் அதற்காக சித்ரவதை செய்யப்பட்டனர்; சிறை சென்றனர். வறுத்தெடுக்கப்பட்டனர். முச்சந்தியில் வைத்து எரிக்கப்பட்டனர். ஜீயார்டனோபுருனோ என்ற தத்துவஞானி பூமி சூரியனை வலம் வருகிது என்ற கருத்தை ஐரோப்பா முழுவதும் பரப்பியதற்காக போப்பாண்டவரின் கோபத்திற்கு இரையானார். 1600 பிப்ரவரி 16ம் தேதி ரோம் நகரின் முச்சந்தியிலே நிறுத்தி கட்டைகளை வைத்து எரிக்கப்பட்டார். எரிக்கப்படும் முன் அவரது நாக்கை மடித்து கட்டி வைத்தனர். இவ்வாறு போராடிய அந்த விஞ்ஞானிகளின் வரலாறு, என்றென்றும் உண்மையைத் தேட வேண்டும் என்ற ஆர்வம் கொண்டோருக்கு ஆதர்சமாக இருக்கும்.

இந்தியாவிலும், சீனாவிலும், அரேபிய வட்டாரத்திலும், விஞ்ஞான - மத சண்டைகள் பற்றிய சரியான வரலாறு இன்னும் உருவாகவில்லை. இவ் வட்டாரங்களில் கடந்த நூற்றாண்டுகளில் அனுபவங்கள், விஞ்ஞான அறிவாக திராளாமல், மந்திரங்களாக, புதிர்களாக மதவாதங்களாக ஏன் திரண்டது என்பதை அறிய ஏராளமான ஆராய்ச்சி தேவைப்படுகிறது. இருந் தாலும் "எல்லாம் நன்மைக்கே என்பது போல் இன்று மேற்கு நாடுகள் இழுத்துவிட நாம் உலகளாவிய விவாதப் போரில் பங்கு பெற தள்ளப்பட்டி ருப்பதால், இந்தியாவின் முற்போக்கு சக்திகளுக்கு சவாலை சந்திக்கும் வாய்ப்புகள் உருவாகியுள்ளன.

கடவுள் வேண்டுமா வேண்டாமா என்ற மோதல் மதவாத முகாமில் கடைசி சண்டையாக இருக்கும். கடவுள் உண்டா இல்லையா என்ற சந்தேகத்தை விஞ்ஞானம் போக்கிவிட்டது. இயற்கை கடவுளின் படைப்பாக இருக்க முடியாது என்பதும் நிரூபிக்கப்பட்ட உண்மையாகி விட்டது கடவுளை நிலை நாட்ட மதவாதிகள் இப்பொழுது கடைசியாக மனிதன் மனிதாபிமானமுள்ளவனாக இருப்பதற்கு இறை நம்பிக்கை அவசியமாகிறது என்கின்றனர். மனித மனத்தில் அன்பும், அறனும் இருக்க வேண்டுமானால் கடவுள் நம்பிக்கை அவசியமாகிறது என்று மதவாதிகள் கூறுகின்றனர். கடவுளின் ரகசியத்தை அறிய மனிதன் முயலக் கூடாது என்று கூறிவந்த மதவாதிகள், இப்பொழுது மதவாதங்களுக்கு விஞ்ஞான விளக்கம் கொடுத்து வருகின்றனர்.

## அன்பும் அறனும் சுரக்குமா?

இன்று நாம் உலகளவில் காண்பதென்ன? வரலாற்றை பரிசீலித்தாலும், இன்றையப் பத்திரிக்கைகளைப் புரட்டினாலும் நம் கண்ணில் தென்படுவ தென்ன? பக்திவெறி இயக்கங்கள் நடைமுறையில் அன்பும், அறனும் சுரக்க உதவி செய்கிறதா என்பதை பரிலீப்போம். உண்மையில் இவைகள்



படிப்பகம்

www.padippakam.com

ஈவிரக்கமற்ற சடங்குகள், சம்பிரதாயங்கள், சுயசிந்தனைகள், பிறமதத்தை சகியாமை, கலாச்சார சுவடுகளை, ஞாபகச் சின்னங்களை, சிலைகளை, சித்திரங்களை அழிப்பது, இப்படி பல் கொடுமைகள் நிகழ்ந்து வருவதை வரலாற்று நெடுகிலும் காணலாம்.

இன்று பக்திவெறி இயக்கங்களின் தொந்தரவு இல்லாத நாடுகளை விரல் விட்டு எண்ணிவிடலாம். அமெரிக்கா, ரஷ்யா, ஆப்கானிஸ்தான், சீனா, ஜப்பான், இந்தியா உகாண்டா, போன்ற நாடுகளில் அரசியல் காரணமாக பக்தி வெறி இயக்கங்களின் சேட்டைகள் உலகளவில் பரபரப்பாக பேசப் படுகிற சமாச்சாரங்களாகி விட்டன.

சீனாவிலுள்ள பக்தி வெறி எதிர்ப்பு கழகம் நடத்திய ஆய்வில் உலகெங் கிலும் சுமார் 3 ஆயிரம் முதல் 4 ஆயிரம் பக்தி வெறி அமைப்புகள் இயங்கி வருவதாக தெரியவந்துள்ளது. இவைகளில் சுமார் 100 மில்லியன் மக்கள் தீவிரமாக பங்கு பெறுவதாகவும் தெரியவந்துள்ளது. (13.2.2001, சின்ஹூவா - சீனசெய்தி) சீனாவில் புலூங்காங், ஜப்பானில் 'அம்சிங்ரி கையோ' அமெரிக்காவில் 'டேவிடியான்பிரிவு' ஆப்கானிஸ்தானத்தில் தலிபன் இந்தியாவில் பலரகமான மதவெறி அமைப்புகள் ஆகியவற்றின் செயல்பாடுகளை பற்றி செய்திகள் பரவலாக பத்திரிக்கைகள் வெளியிட்டு வருகின்றன. கொலைகள் புரிவது, கூட்டாக தற்கொலை செய்து கொள்வது, உடலை ஊனப்படுத்திக் கொள்வது, பிறவழிபாட்டு சின்னங்களை அழிப்பது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதை அச்செய்திகள் தெரிவிக் கின்றன.

1995ம் ஆண்டில் ஜப்பானில் அம்சிங்ரிகையோ என்ற அமைப்பு டோக்கியோ ரயில் நிலையத்தின் கழிப்பறையில் சாரின் விஷவாயுக்குண்டை வைத்து பலரைக் கொன்றனர். "உலகத்தை கடவுள் அழிக்கப் போகிறார். அதற்கு முன்னர் மக்களை சொர்க்கத்திற்கு அனுப்புகிறோம் என்று அந்த அமைப்பினர் விளக்கம் கொடுத்தனர். இந்த அமைப்பின் பணக்கார பக்தர் களின் முதலீட்டுடன் விஷவாயு தொழிற்சாலை ஒன்றை நிறுவி இருந்ததை ஜப்பான் நாட்டு காவல்துறை கண்டு பிடித்து முடக்கியதை உலகம் பின்னர் தெரிந்து கொண்டது.

சமீபத்தில் உலகையே குலுக்கிய செய்தி தலிபான் ஆட்சியாளர்கள் பாமியான் என்ற இடத்தில் இருந்த 1300 ஆண்டுகள் வயதான உலகிலேயே உயரமான சிலைகளில் ஒன்றான புத்தர் சிலையை உடைத்தெறிந்த செய்தியாகும். இந்த தகர்ப்பு செய்தி பரவியவுடன், பிறமதவாத அமைப்புகள் எல்லாம் ஏகாதிபத்தியவாதிகளோடு சேர்ந்துக் கொண்டு இஸ்லாமிய மதத்



படிப்பகம்

தின் தனிப்பெரும் வெறி என்று சித்தரித்து கண்டித்தனர். இந்த உடைப்பு வெறி இஸ்லாமிற்கு மட்டுமல்ல, பிறமதங்களின் பக்திவெறி அமைப்புக்களும் இதை செய்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி ஜப்பான் டைம்ஸ் என்ற ஜப்பானிய பத்திரிக்கை (மார்ச் 17 - 2001) ஒரு தலையங்கம் தீட்டியது. தலிபன் வெறி இஸ்லாமிற்கு மட்டுமே உரித்தானதல்ல என்று தலைப்பிட்டு அது பல தகவல்களை தந்தது. கடந்த ஆயிரம் ஆண்டுகளாக ஆப்கானிஸ்தானை இஸ்லாமிய மன்னர்களே ஆண்டனர். அவர்கள் யாரும் 1300 ஆண்டான புத்தர் சிலையை தகர்க்கவில்லை. ஆனால் இன்று தலிபன் வெறியர்கள் தகர்த்தனர்.

கடந்த 1300 ஆண்டுகளாக எகிப்தில் இஸ்லாமியர்கள் ஆட்சிதான் நடைபெறுகிறது. ஆனால் அங்கு இன்றும் உலகிலேயே மிக உயரமான சிலைகளின் வரிசையில் முதலிடத்தில் இருக்கும் புரதான ஸ்பிங்ஸ் சிலை பாதுகாக்கப்படுகிறது. தலிபன் முல்லாவிற்கு இருக்கிற இஸ்லாமிய வெறி அங்குள்ள முல்லாக்களுக்கு இன்று இல்லை. சிலை உடைப்புகளுக்கும் சித்திர எரிப்பிற்கும் வழிகாட்டி யார் என்று வரலாற்றை புரட்டினால் அது 7 அல்லது 8 ம் நூற்றாண்டு கிருத்துவ மதவெறி அமைப்புக்களே என்பது தெரியவரும் இவர்கள்தான் ரோம ராஜ்யத்தின் சின்னங்களை எல்லாம் அழித்தனர். அவர்கள் அன்று சொன்ன காரணங்களையே இன்றைய தலிபன் முல்லாக்கள் கூறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

15, 16 - ம் நூற்றாண்டுகளில் ரோமன் கத்தோலிக்க சின்னங்களை புராட்டஸ்டென்ட் மதத்தினர் இப்படித்தான் அழித்தனர். சவூதி அரோபியாவில் தோன்றிய வாகபி பிரிவினர் தலிபன் பானி உடைப்பிற்கு வழிகாட்டி எனலாம் 1820 ஆண்டில் சவூதி அரோபிய வாகாபி ஆட்சியாளர்கள் 12ம் நூற்றாண்டு சிலைகளை உடைத்தனர். யூத கிராமங்களை அழித்தனர். பைபிளின் முதல் பாகம் எழுதி இடத்தை சுவடின்றி அழித்து விட்டனர் என்று அந்த தலையங்கம் பல தகவல்களைத் தந்தது. இந்தியாவில் புத்த, ஜைன, சைவ, வைனவை பக்தி வெறி பிரிவினர்கள் எப்படி வழிபாட்டுத் தலங்களை தரை மட்டமாக்கினர் மாற்றி அமைத்தனர் என்பது தனி வரலாறு. அது தனியாக அலசப்பட வேண்டியது. ஆய்வாளர்களின் கடமைகளில் இதுவும் ஒன்று.

பக்தி வெறி இயக்கங்களின் இன்றைய செயல்பாடுகளை ஆய்வு செய்யும் சமூக இயலாளர்கள் சில பொதுவான அம்சங்களை சுட்டிக் காட்டுகின்றனர்.

- தலைவிதி என்பதில் மிகுந்த நம்பிக்கை கொள்வது.
- காரணகாரியங்களை உணர இயலாமல் மவுடீகமாக இருப்பது.



படிப்பகம்

- அற்புதங்கள் நிகழ்வதாக நம்புவது.

www.padippakam.com

- இறந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் பற்றி மட்டுமே கவனம் செலுத்துவது.
- எதிர்காலத்தைப் பற்றி யோசிக்க பயப்படுவது. எதிர்காலம் பற்றிய திட்டமோ கனவோ எதுவுமில்லாமல் அதை அடைய உற்சாகம் நிறைந்த ஈடுபாடோ முயற்சியோ, இல்லாமல் நிகழ்வுகளை மாற்றிட முயற்சிக்காமல் இருந்து விடுவது. சுருக்கமாக "வெந்ததை தின்பது விதி வந்தால் சாவது" என்ற மனப்பாங்குடன் இருப்பது.
- ஒரு நபரின் ஆதிக்கத்தை ஏற்பது, அவரிடம் அற்புத சக்தி இருப்பதாக நம்புவது.
- தனி நபர் முன் முயற்சியை கைவிட்டுவிட்டு கூட்டத்தோடு கூட்டமாக மந்தை ஆடுபோல் வாழ்வது.

கடவுள் பக்தி இத்தகைய இயல்புகளையே மனிதனிடத்தில் உறுதிப் படுத்துகிறது.

எனவே மதங்கள் அன்பும், அறனும் சுரக்க எந்த வகையிலும் உதவ வில்லை என்பதை அடித்துக் கூறலாம். பின் ஒரு கேள்வி எழுகிறது : அன்பும், அறனும், மனிதாபிமானமும் சுரக்கும் அடிப்படை எது? எல்லா தாவரங்களும், ஜீவராசிகளும், தன்னையும் தன் இனத்தையும் பாதுகாத்து விருத்தி செய்ய முயல்வது உயிரியல் விதியாகும். இந்த உயிரியல் இயல்பு மனித ராசிக்கும் பொருந்தும் அது சமூக - உயிரியல் பரிணாம வளர்ச்சியால் இந்த பண்பை மேலும் மேலும் வளர்த்துக் கொள்கிறது. ஒரு மனிதன் கொடூரமாக இருந்தால் அவனை காட்டுமிராண்டி, நாகரீக மற்றவன் என்று குறிப்பிடுகிறோம் இதன் பொருள் என்ன? மனிதன் ஆதிகாலத்தில் மனிதப் பண்பில்லாமல் இருந் தான் பின்னர் சமூக வாழ்வால் மனிதாபிமானத்தையும், அன்பையும், அறனை யும் மேன்மை அடையச் செய்து கொண்டு வருகிறான் என்பதைத்தான் இப்படி குறிப்பிடுகிறோம். ஆயிரம் வரலாற்று புரட்டர்கள் தான் மதமே மனிதனை நெறிப்படுத்தியது என்று கூறுகின்றனர். மதச்சடங்குகள், இந்த நோக்கத்தோடு உருவாக்கப்பட்டதாக கூறுகின்றனர். எந்த மதச்சடங்கும் அந்த வேலையைச் செய்வதாக கூறவே முடியாது (மதசடங்கில் பல உயிரியல் இயல்புகளை வைத்து விளக்கிவிடலாம்)

## மத உணர்வின் தோற்றம்

இன்று தத்துவ ஞானிகளும், விஞ்ஞானிகளும் ஒரு எதார்த்தத்திற்கு விடை தேடுவதில் முனைப்பு காட்டி வருகின்றனர். ஆய்வுகளும், கருத்து



படிப்பகம்

www.padippakam.com
மோதல்களும் பல சுவராஸ்யமான கண்டு பிடிப்புகளும் இன்று எளிதில உலகெங்கிலும் பரவி வருகின்றது. அதேசயம், 400 ஆண்டுகளாக விஞ்ஞானம் வளர்ந்த பிறகும் மத உணர்வுகள், அது உருவாக்கும் மவுடீக நடவடிக்கைகள் நீடித்து வருகிறதே; இதன் மர்மம் என்ன? நாத்திகவாதிகள் எண்ணிக்கை இன்றும் மிக, மிக குறைவாக இருக்கிறதே ஏன்?

விஞ்ஞானிகளில் பெரும்பாண்மையினர் ஏதேனும் ஒரு கடவுளை நம்பு கிறார்களே; நியூட்டன், ஐன்ஸ்டீன், டார்வின் போன்ற பிரபல விஞ்ஞானி களே கடவுள் நம்பிக்கையோடு இருந்திருக்கின்றனரே இவர்களது கண்டு பிடிப்புகள் கடவுள் நம்பிக்கையை தகர்க்கிற பொழுது இவர்கள் மட்டும் அந்த நம்பிக்கையை இழக்கவில்லையே ஏன்? எல்லா கலாச்சாரத்திலும் கடவுள், கடவுள்கள், சடங்குகள், விரதங்கள், கோவில் அமைப்புகள் உள்ளனவே அவைகளை விளக்குவது எப்படி? இதற்கெல்லாம் விடை தேடுவது சற்று சிரமமே! ஏடறிந்த வரலாற்றை எத்தனை தடவை நுணுகி ஆராய்ந்தாலும் மத நம்பிக்கை ஏற்பட புற காரணகாரியங்களை நம்மால் காண இயலவில்லை. கடவுளை காட்டுங்கள் என்று விவேகானந்தர் ராமகிருஷ்ணரிடம் கேட்ட பொழுது, அவர் காட்டியதாகவும் இவர் பார்த்ததாகவும் கூறப்படுகிறது. அதை ஏன் பாமரர்கள் பார்க்க முடியவில்லை என்றால் அதற்கு உரிய மனபக்குவம் தேவை என்று கூறப்படுகிறது.

திருப்பதி மலையில் பாறையில் கடவுளின் பாத தடம் ஒன்றைய காட்டு கிறார்கள். கடவுளைக் கண்ட பரவசம் அடைகிறவர்கள் பற்றி கேள்விப் படுகிறோம். கூட்டு பிராத்தனை மூலம் நோய் குணமாவது பற்றி செய்திகள் பரப்பப்படுகின்றன. இவைகளுக்கெல்லாம் விஞ்ஞானம் கூறுகிற விடைகள் என்ன?

இவைகளை விளக்கிட இன்று விஞ்ஞான உலகம் தயராய் விட்டது எனலாம். மனித மூளையின் விசித்திர பண்புகளையும், பரிணாம வளர்ச்சியையும், இன்று விஞ்ஞானம் ஆய்வு செய்து வருகிறது. 1950களில் சோவியத் யூனியன் தான் இந்த ஆய்வை துவங்கி வைத்தது. 1975ல் அமெரிக்காவின் ஹார்வேர்டு பல்கலை கழக போராசிரியர் எட்வர்டு ஓ. வில்சன் சமூக உயிரியலின் பரிணாம வளர்ச்சிப் பற்றி ஆய்வுத்துறையை துவங்கி வைத்தார். இப்பொழுது உலகெங்கிலும் உள்ள பல பல்கலை கழகங்களில் சமூக உயிரியல் பரிணாம வளர்ச்சி (Evolutionary Socio Biology) என்ற ஆய்வுத் துறை உருவாக்கப்பட்டுள்ளது.

ஜோசியத்திற்கும் ஜாதகத்திற்கும் ஆய்வுத் துறை உருவாக்கும் நமது நாட்டு மதவாத ஆட்சியாளர்கள் இப்படி ஒரு துறையை இங்கே உருவாக்கிட தயங்கலாம். இது சூரியனை முறத்தால் மறைக்கிற முயற்சியாகும். தகவல்



படிப்பகம்

புரட்சி காரணமாக ஆட்சியாளர்களின் தயவில்லாமலேயே அறிவு பரவும் நிலை வந்து விட்டது.

www.padippakam.com

போராசிரியர் எட்வர்டு ஓ.வில்சன் எழுதிய "ஒப்புதல் : அறிவின் சங்கமம்" (Consilience : The Unity of Knowledge) என்ற புத்தகம் மூளையின் அமைப்பு, அதன் செயல்பாடுகள் சமூக உயிரியல் காரணமாக ஏற்பட்ட மாற்றங்களை விளக்குகிறது. இது தவிர சூரிச் பல்கலைக் கழக போராசிரியர் வால்ட்டர் புர்கொர்ட் (Walter Burkerte) எழுதிய "புனிதத்தின் படைப்பு : துவக்க கால மதங்களின் உயிரியல் தடங்கள்" (Creation of the sacred: Tracks of early religion) என்ற புத்தகமும் இன்று மதங்களின் தோற்றத்தை யும், அதன் நீடித்த தன்மையையும், மனிதனது உயிரியல் இயல்பு, மூளையின் இயல்பு ஆகியவற்றை பாமரர்களும் புரிகிற வகையில் விளக்குகிறது.

இதுதவிர 1998ம் ஆண்டு வெளியிடப்பட்ட வி.எஸ். ராமச்சந்திரன் எழுதிய "மூளையின் ஜாலம்" (Phantasm in the brain) என்ற நூல் மனித மூளையின் ஆற்றலையும், மதபிரமைகளுக்கும், பக்தி பரவசத்திற்கும் ஆட்படும் நிலைக்கு காரணமான மூளையின் பகுதியையும் பற்றிய புதிய கண்டு பிடிப்புக்களை விளக்குகிறது. இவரது கண்டு பிடிப்புகள் உயிரியல் விஞ்ஞானத்திற்கு மட்டுமல்ல மதவாதங்களோடு போராடுகிற தத்துவ ஞானிகளுக்கும் புதிய தெம்பை கொடுக்கிறது. மத உணர்வின் சமூக உயிரியல் அடிப்படைகளையும் அது பரிணாம வளர்ச்சி பெற்றதின் முறைகளையும், இன்று விஞ்ஞான ஆய்வுகள் கண்டுவிட்டன. மனித மனம் அல்லது மூளையின் செயல்பாடு என்பது காரியவாதமாகவே (Practical) இருக்கும். காரண காரியங்களை கண்டு உணரும் ஆற்றலும் அதற்குண்டு. அம்பின் ஒரு முனையில் பறவைகளின் இறகுகளை வைத்து ஏவினால் வேகமும் அதிகரிக்கும் குறியும் தவறாது என்பதை அறிந்ததிலிருந்து இன்று கம்ப்யூட்டர் மூலம் தகவல்களை அலசி ஆராய்வதின் மூலம், அறியும் ஆற்றலை பல மடங்கு பெருக்கிக் கொண்டது வரை பார்த்தால் மனித மூளையின் ஆற்றல் வளர்ச்சி பெறுகிறது என்பது தெளிவாகும்.

மனித ராசி தனது செல்வாக்கை இயற்கை மீது துவக்கத்தில் செலுத்த முடியவில்லை இப்பொழுது முன்னைவிட செலுத்த முடிகிறது. பிரச்சனை களை தீர்க்கும் உணர்வும், காரணகாரியங்களை கவணிக்கும் ஆற்றலும் பல மடங்கு வளர்ந்ததையே இது காட்டுகிறது.

சமூக உயிரியல் விஞ்ஞானம் இன்று தெளிவு படுத்துவதென்ன?

மதம் என்பதையும், மத உணர்வுகளையும் உயிரியல் பரினாம வளர்ச்சி அடிப்படையில் விளக்கிட முடியும். மனிதன் குரங்கு வாழ்க்கையிலிருந்து விலகி, மானுட வாழ்விற்கு தாவுகிற பொழுது மூளையில் ஏற்பட்ட பரினாம



படிப்பகம்

வளர்ச்சியில், வியப்பதும், சந்தேகிப்பதும் என்ற ஆற்றலை மனித மூளை பெறுகிறது. மதம் என்பது முதலில் அதற்கான விளக்கமாக உருவாகிறது. மனித ராசியும் தன்னையும் தனது ராசியையும் காத்துக் கொள்ள வேண்டும் என்ற உயிரியல் உந்துதலே துவக்கத்தில் மத உணர்வுகளை உருவாக்கியது.

பல மதரீதியான செயல்பாடுகளை உயிரியல் அடிப்படையில் விளக்கிடலாம்.

ஜூரிச் பல்கலை கழக பேராசிரியர் வால்ட்டர் புர்கெர்ட் எழுதிய "புனிதத்தின் படைப்பு : துவக்க கால மதங்களின் உயிரியல் தடங்கள்" என்ற புத்தகம் பல மதச் சடங்குகளுக்கு விளக்கம் கொடுக்கிறது. ஜீவராசிகள் தங்களை காத்துக் கொள்ள பல தந்திரங்களை பின்பற்றுவது போல் மனித ராசியும் இந்த உந்துதல் காரணமாகவே துவக்க காலத்தில் பலியிடுவது போன்ற சடங்குகளில் ஈடுபட்டது. சிலந்தி பூச்சி எதிரியிடமிருந்து தான் தப்பி விட காலை ஒடித்து விட்டு ஓடி விடும். பின்னர் கால் வளர்ந்துவிடும். பல்லி எதிரியிடமிருந்து தப்பிவிட வாலை இழந்து ஓடிவிடும். பின்னர் வால் வளர்ந்து விடும். சில பறவைகள் எதிரியின் வாயில் சிக்கியவுடன் தப்பிவிட, இறகுகளை உதிர்த்துவிட்டு ஓடிவிடும். எதிரியின் வாய்நிறைய சிறகுகள் இருக்க உணவாக வேண்டிய பறவை பறந்து விடும்.இப்படி உயிர்தப்பும் உந்துதல் சக்தி ஒன்றை தியாகம் செய்து உயிரைக் காப்பது என்ற நடவடிக் கைக்கு அடிப்படையாகும்.

இந்தியாவில் புராதன காலத்தில் பலியும், அதற்கேற்ப மந்திரமும் சொன்னால், மந்திர சக்தி உருவாகி காக்கும் என்று நம்பினர். இதன் மூலம் கடவுளை திருப்தி படுத்தி கேட்ட வரத்தை பெறலாம் என்றும் நம்பினர். புராதன இந்து மதம் மட்டுமல்ல, அநேகமாக எல்லா நாடுகளிலும் புராதன காலத்தில் பலியிடுவது என்ற வழக்கமிருந்தது. இந்தச் சடங்கில் மொட்டை அடிப்பதில் (பறவைகள் சிறகுகள் இழப்பதைப் போல்) துவங்கி நரபலிவரை இருந்தது. உணவு பற்றாக்குறை ஏற்படும் பொழுது சில உயிர்களை தியாகம் செய்து மீத உயிர்களை காப்பாற்றுவது என்ற உயிரியல் மிருக உந்துதலே நரபலி சடங்கிற்கு அடிப்படை. 1998ல் வி.எஸ். ராமச்சந்திரன் எழுதி வெளியிட்ட மூளையின் ஜாலம் என்ற நூல், பக்தி பரவசத்திற்கும் கடவுளை கண்டதாக கூறும் பிரமைகளுக்கும் காரணமான மூளையின் பகுதியையும், மரபனுக்களின் தொடர் வினையையும், இனம் கண்டதை விளக்குகிறது.

காக்கை வலிப்பு நோய் வர காரணமாக இருக்கும் மூளையின் பகுதி (டெம்போரல் லோப்) (Temporal lobe) இத்தகைய பிரமைகளை உருவாக்குவதாக அவர் ஆய்வின் மூலம் காண நேர்ந்தது. மத சுகா அனுபவங்களை சமயங்களில் இந்த காக்கை வலிப்பு நோய்



www.padippakam.com
படிப்பகம்

கண்டவர்களுக்கு வருவதையும் அவர் காண நேர்ந்தது. வரலாற்றில் சில
www.padippakam.com
புகழ் பெற்ற விஞ்ஞானிகள், ஓவியம் படைப்பவர்கள் (பிரெஞ்சு ஓவியர் வான்காக்) காகை வலிப்பு நோய் இருந்தது குறிப்பிடத்தக்கது. அவர்களும் இத்தகைய சுகானுபவம் பெற்றதை குறிப்பிடுகிறார்கள்.

ஜூரிச் பேராசிரியர் எழுதிய நூலில், மத உணர்வுகளின் உயிரியல் அடிப் படையை நன்கு ஆராயப்படுகிறது. சுத்தமாக இருப்பது என்பது உயிரியல் உந்து சக்தி. மத ஆசாரங்கள் சுத்தம் பற்றி கவனம் செலுத்த இதுவே அடிப்படை என்கிறார். இது சம்மந்தமாக இந்து மத அனுபவமென்ன? சுத்தம் பற்றிய ஆசாரம் வெறியாகி தீண்டாமைக்கு காரணமாகி விட்டது.

சமூக உயிரியல், துவக்க காலத்தில் மத உணர்வு உருவாவதற்கான அடிப்படையை ஆராய்ந்து வருகிறது. இன்று மத உணர்வு நீடிக்க வேறு காரணங்களும் சேர்ந்து கொண்டது. அது அரசியல், கலாச்சார கவுரவம், வர்க்க நலன், வர்த்தக நலன் ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டு நீடிக்கிறது.

விஞ்ஞானம் வளர, வளர தத்துவம் வளர, வளர மதத்தின் தேவை சுருங்குகிறது. பழைய விளக்கங்கள் எடுபடவில்லை. இன்று கடவுள் வாதிகள் மதத்தை நிலை நாட்ட மூன்றை முன்வைக்கின்றனர்.

- கடவுளின் கருணை
- உடல் வேறு ஆத்மா வேறு
- சாவிற்கு பின் வாழ்வு

இம் மூன்றும் எந்த விஞ்ஞானத்தாலும் சோதிக்க முடியாது. எனவே இம் மூன்றையும் நீட்டுகின்றனர்.

கூட்டுப் பிரார்த்தனை மூலம் நோய் குணமாவதாக கூறுவது மனித மனத்தின் உளவியல் பலகீனத்தை காட்டுகிறது.

விரும்பியதைத் தவிர மற்றதை மூளை ஞாபகத்தில் வைப்பதில்லை. இதனை ஒரு தலைப்பட்சமாக உறுதி செய்வது (Contirmation bias) என்று உளவியல் அறிஞர்கள் பெயர் வைத்துள்ளனர். ஏராளமான பேர் கூட்டுப் பிரார்த்தனைக்குப் பிறகும் நோய் குணமாகாமல் போவதை அற்புதங்களை நம்புவோர் கணக்கிலே கொள்வதில்லை.

இன்று மதவாதிகள் அவரவர் மதக் கோட்பாட்டிற்கு விஞ்ஞான விளக்கம் கொடுக்க துவங்கி விட்டனர். அதற்கு ஏராளமான விளம்பரங்கள் கிடைக்கின்றன. நீயூஸ்வீக் என்ற அமெரிக்க பிரபல வார இதழ் சமீபத்தில்



படிப்பகம்

www.padippakam.com

ஒரு பவுதீக பேராசிரியரின் விளக்கத்தை வெளியிட்டது. ஏசு மனிதனாகவும், தெய்வமாகவும் இருக்க முடியும் என்பதை பவுதீக விஞ்ஞான கோட்பாட்டை காட்டி விளக்கி இருந்தார். “எப்படி ஒளி அலையாகவும், துகள்களாகவும் இருப்பதாக பவுதீக விஞ்ஞானிகள் கூறுகிறார்களோ அது போல்தான் எசுவும் மனிதனாகவும் தெய்வமாக இருக்கிறார்” என்கிறார். வெகு சீக்கிரம் முரளி மனோகர் ஜோசியின் கைங்கர்யத்தால் இந்து மதக் கடவுள்களும், விஞ்ஞான விளக்கம் பெற பல்கலை கழகங்களில் பேராசிரியர்கள் நியமிக்கப்படலாம். கிரகபலனை நிலை நாட்ட ஒரு துறை வருமானால் இதற்கும் வர வாய்ப்புக்கள் உண்டு.

## மனிதப் பண்புகள் பெறுவது எப்படி?

மனித மனத்தின் இயல்புகளில் அடிப்படையானது ஒன்றைக் கண்டு வியப்பது; சந்தேகப்படுவது ஆகிய இரண்டுமாகும். இந்த இரண்டிற்கும் தீர்வு கிடைக்கிற வரை மனித மனம் ஓய்வதில்லை! துவக்க காலத்தில் சந்தேகத்தை போக்க மத விளக்கங்கள் எளிதாக இருந்தன. அன்று தத்துவத்தை வெகு சிலரே நாடினர். வெகு சிலருக்கே, தத்துவத்தை நாட முடிந்தது. இன்றும் விஞ்ஞானிகள் உட்பட பலருக்கு மத அணுகு முறை எளிதில் திருப்தி அளிக்கிற முறையில் இருப்பதால் அவர்கள் அதை நாடுகின்றனர். விஞ்ஞான அறிவிற்கு சம்மந்தமில்லாமல் அவரால் மதவாதத்தை கொண்டு திருப்தி அடைய முடிகிறது. இது உயிரியல் முரண்பாடாகும். மனித ராசியின் வியப்படைவது, சந்தேகப்படுவது என்ற உயிரியல் அடிப்படையே கலைகள் வளர்வதற்கும், விஞ்ஞானம் வளர்வதற்கும் அடிப்படை என்பதை மறந்து விடலாகாது.

சான்றாக இரண்டு சம்பவங்களை கூறலாம். தினசரி பாரதியார் காலையில் மெரினா கடற்கரைக்கு செல்வார் சூரிய உதயத்தைக் கண்டு வியப்பார். அந்த வியப்பே பின்னால் கவிதை வரிகளை உருவாக்க உதவியது.

*“தங்கம் உருக்கி தழல் குறைத்து தேனாக்கி*
*எங்கும் பரப்பிய தோர் இங்கிதமோ?*
*வான்வெளியை சோதி கவர்ந்து*
*சுடர் மயமாம் விந்தையினை*
*ஓதிப் புகழ்வார் உவமை ஒன்று காண்பரோ?*

*(குயில் பாட்டு)*

என்று வியப்பை கவிதையாக்குகிறார்.



படிப்பகம்

அதே போல் சர்.சி.வி. ராமன் கப்பல் பயனத்தின் போது கடல் நீல நிறமாய் இருப்பதைக் கண்டு வியக்கவில்லை சநதேகம் கொண்டார் ஆய்வில் இறங்கினார். ஒளியின் சிதறலால் இது ஏற்படுகிறது என்ற பவுதீக உண்மையைக் கண்டார்.

மனிதராசி வியப்பையும் சந்தேகத்தையும், கலையாகவும் விஞ்ஞானமாகவும் உயர்த்தும் பொழுதுதான், மனிதப் பண்புகள் மேலோங்க வாய்ப்பு ஏற்படுகிறது. ஆனால் இந்த பண்புகளைப் பெற அவன் அவனுள் உயிரியல் உந்துதலால் எழும் மத உணர்வை எதிர்த்து போராட வேண்டியிருக்கிறது; அரசியலில், வர்க்கப் போராட்டத்தில், கலாச்சாரத்தில் இப் பண்புகளை புகுத்த உணர்வு பூர்வமான போராட்டத்தில் ஈடுபட வேண்டியிருக்கிறார்.

இந்த ஈடுபாடு இல்லாமல் புற நானுற்று வரிகள் கூறுவதுபோல் வாழ்வை:

*கல்பொருது இரங்கும்மல்லல் பேர் யாற்று*

*நீர்வழிப் படூ உம் புனை போல்*

*ஆர் உயிர் முறை விழப்படூ உம்*

இதைப்போல் விதிவழி நடக்கும் என்று கருதினால் தன்னையும் காக்க முடியாது இயற்கையும் வெல்லும் ஆற்றல் உள்ளதாக மனித ராசியை ஆக்கவும் முடியாது.

(பாறைகளிலே மோதி ஓடும் பெரிய ஆற்றில் விழுந்த மரக்கட்டை நீரோடு இழுத்துச் செல்லப்படுவதைப்போல் மனித உயிரும் இழுத்துச் செல்லப்படுவதே முறையாகும். இதுவே இப் பாடலின் பொருள்)

◆◆◆



www.padippakam.com
படிப்பகம்